விழி 07 பார்வை73 செப்டெம்பர் 2010

# அகவிழி

ஆசிரியத்துவ நோக்கு...

விலை | ரூபா 50.00



பள்ளிக்கூடம் என்னும் அதிகாரமையம்



வன்செயலும் பகிடிவதையும்

குற்றவாளிகள் யார்?


ஒழுங்கமைத்தலும் மதிப்பிடுதலும்

குழந்தாய்!

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வெளிவந்துவிட்டது

# கூடம் - 16




**விலை: 100.00**

தொடர்பு:
3, டொரிங்டன் அவனியூ
கொழும்பு 07
தொலைபேசி: 011 250 6272
மின்னஞ்சல்: koodam2006@gmail.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Dr. T. Kedamany


ISSN 1888 - 1246

# அகவிழி

ஆசிரியத்துவ நோக்கு...

மாத இதழ்

ஆசிரியர் : தெ. மதுசூதனன்

ஆசிரியர் குழு : பேராசிரியர். சபா. ஜெயராசா
பேராசிரியர். சோ. சந்திரசேகரன்

ஆலோசகர் குழு : முனைவர் மா. கருணாநிதி
பேராசிரியர். மா. சின்னத்தம்பி
பேராசிரியர். மா. செல்வராஜா
திரு. தை. தனராஜ்

நிர்வாக ஆசிரியர்: சாந்தி சச்சிதானந்தம்

துணை நிர்வாக ஆசிரியர் : காசுபதி நடராஜா

இதழ் வடிவமைப்பு : த. மைதிலி

அச்சு : சேமமடு பதிப்பகம்,
தொலைபேசி: 011-2472362

வெளியீடு மற்றும் தொடர்புகட்கு:
: AHAVILI
3, Torrington Avenue, Colombo - 07
Tel: 011-2506272
E-mail : ahavili2004@gmail.com, ahavili2004@yahoo.com


## உள்ளே...


- காண்பியப் பண்பாடும் அறிவுக் கையளிப்பும் 03
- பல்கலைக்கழகங்களில் வன்செயலும்... 06
- மாறிவரும் மாணவர் சமூகம்: குற்றவாளிகள் யார்? 10
- வாண்மைவிருத்தி: 14
- பாடசாலை மட்டத்தில் செயற்றிட்டங்களை... 20
- கற்பித்தல் - கற்றல் முறையியல்கள் 25
- பள்ளிக்கூடம் என்னும் அதிகாரமையம் 27
- "தேத்தண்ணியைக் குடிக்காமலே!" 31
- குழந்தாய் ! 34
- கல்வியியலில் மாற்றுச் சிந்தனைகள்: நாடகக் கல்வி 38



அகவிழியில் இடம் பெறும் கட்டுரைகளுக்கு அதன் ஆசிரியர்களே பொறுப்பு,
கட்டுரைகளில் காணப்படும் கருத்துக்கள் "அகவிழி"யின் கருத்துக்கள் அல்ல.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விரிவுறும் சூழல் சிந்தனை...

இலங்கையில் போருக்கு பின்னரான சமகாலத்தில் அபிவிருத்தி பற்றிய பேச்சு பல்வேறு மட்டங்களிலும் பல்வேறு நிலைகளிலும் எழுச்சி பெற்று வருகிறது. எந்தகாரணங்களால் எந்தத் தருக்கத்தின் விசைகளால் முரண்பாடுகள், போராட்டங்கள் வெடித்ததோ அவை அப்படியே இருக்க 'அபிவிருத்தி' முழக்கமாக மாறி வருகிறது.

இதுவரையான 'போரும்வாழ்வும்' மனித வளம், பௌதீக வளம் முதலானவற்றில் பெரும் அழிவுகளை, சேதாரங்களை ஏற்படுத்தியுள்ளது. இன்று அரசியல் தீர்வுகள் எதிர்கால நம்பிக்கைகள் முதலானவற்றிற்கு அப்பால் சூழல்சார் பிரச்சினைகள் பன்முகப்பட்டுள்ளன. இயற்கைக்கும் மனிதவளத்திற்கும் இடையில் காணப்படும் சமூகப் பொருளாதார சூழல் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு எடுக்கப்படும் தீர்வுகளிலேயே எதிர்காலத் தலைமுறையினரின் முன்னேற்றமும் நலனும் தங்கியுள்ளது.

ஆகவே இன்றைய எதிர்காலம் மீதான விமர்சன நோக்கு விரிவுபெற வேண்டும். போரியல் விசைகளின் அழுத்தமும் இதனுடன் இணைத்துப் பார்க்கப்பட வேண்டும். இந்த அரசியல் நீக்கம் செய்யப்பட்ட கண்ணோட்டங்களும் பார்வைகளும் வழி முறைகளும் நமது தலைமுறையினரின் எதிர்காலத்தை முழுமையாக நசுக்கிவிடும். இதன்பின்பு நாம் அபிவிருத்தி பற்றிப் பேசுவதில் எந்தப் பிரயோசனமும் இருக்காது.

இன்று விஞ்ஞான தொழில் நுட்பப் புரட்சி, சமூகப் பொருளாதார முன்னேற்றத்தை மேம்படுத்துதல் என்பவற்றினுடாக மேற்கொள்ளப்படும் உற்பத்தி சக்திகளின் விரைவான அபிவிருத்தியினால் எல்லா வழிகளிலும் 'சூழல்' பாதிக்கப்பட்டு வருகிறது.

கடந்த இரண்டு நூற்றாண்டுகளாக இயற்கை வளங்கள் செறிவாக சுரண்டப்பட்டுள்ளன, தாவரங்கள் அழிக்கப்பட்டுள்ளன, மண் கழுவிச் செல்லப்பட்டுள்ளன, வளி, நீர் மற்றும் நிலம் மாசடைந்துள்ளன இவ்வாறு உயிர்க்கோலத்தில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் மனித வாழ்வியலை மனித சுகாதாரத்தை மிக மோசமாகப் பாதித்துள்ளது. இது பொதுவாக எல்லோராலும் ஏற்றுக்கொள்ளக்கூடிய யதார்த்தம் தான்.

இன்று இயற்கை வளங்கள் சுரண்டப்பட்டு மனித இனம் பாதிக்கப்படும் நிலை வேகமடைந்து விட்டது. "உயிர்க் கோலம் அபாயநிலையில்" "சூழல் அழிவை நோக்கி" "20 வருடங்களில் நாகரிகம் அழிந்துவிடும்" போன்ற உணர்ச்சி பூர்வமான பிரகடனங்கள் ஊடகங்கள் மூலம் பிரச்சாரப்படுத்தப்படுகின்றன. மேலும் சூழல் மாசுபடுதல் பற்றிய படங்களும் தரவுகளும் வரைபடங்களும் புள்ளிவிபரக்கணிப்பீடுகளும் மற்றும் ஆய்வுகளும் சூழல் பிரச்சினைகளின் தாக்கங்களை எடுத்துக்காட்டி மனித இனத்தின் முடிவுகளைப் பற்றிய பயமூட்டும் சித்திரிப்பு பரவலாக முன்னெடுக்கப்படுகின்றது.

சமகாலத்தில் பல்வேறு வகையான நூல்களும் அறிக்கைகளும் எதிர்காலவியல் சிந்தனைகளும் "சூழல்கல்வி" "சூழலியற கல்வி" "சூழலுக்கான கல்வி" முதலான எண்ணக்கருக்களை உருவாக்கியுள்ளன. இவையாவும் சூழல் பற்றிய ஆர்வத்தை விழிப்புணர்வை விரிவாக்குகின்றன. மனித சிந்தனைகளிலும் மனித மனப்பாங்குகளிலும் விழுமியங்களிலும் "விடுதலைச் சூழலியல்" எனும் சிந்தனை வாழ்நெறியாக செல்வாக்குப் பெற்றுவரும் காலகட்டத்திலும் நாம் வாழ்ந்து வருகின்றோம்.

உலகலாவிய ரீதியில் அரசாங்கங்களுக்கிடையிலான முதலாவது "சூழல்கல்வி" பற்றிய மாநாடு 1977இல் ரிபிலிசி (சோவியத் ரஷ்சியாவின்) என்னும் இடத்தில் இடம்பெற்றது. இந்த ரிபிலிசி மாநாடு சூழல் கல்வியின் உண்மையான நோக்கினை கீழ்வருமாறு வடிவமைப்புச் செய்தது. "உயிர்க் கோலத்தினை பேணும் நோக்கில் விழிப்புணர்வையும் மனப்பாங்கையும் விழுமியங்களையும் உருவாக்குதல். வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த பகுதிகள், புனிதப் பிரதேசங்கள் கலைப்பணிகள், நினைவுச் சின்னங்கள், முக்கியஇடங்கள் யாவற்றையும் பாதுகாத்தல். மனித மற்றும் இயற்கை, சூழல் குறிப்பாக மனிதக்குடியிருப்புக்கள், தாவரவினங்கள், விலங்கினங்கள் என்பவை உள்ளிட்ட கலாசார இயற்கையான பாரம்பரியம் மற்றும் ஒழுக்கவியல் விழுமியங்கள் யாவற்றையும் பாதுகாத்தல். அத்துடன் எல்லாவிடங்களிலும் ஒரேவிதமான வாழ்க்கைத்தரத்தையும் மேம்படுத்தல்."

இந்தச் சிந்தனை வடக்கு கிழக்கு வாழ்புல எல்லைக்குள வாழ்வோருக்கான சூழலியல் சார் அணுகுமுறைக்கான அடித்தளத்தை அமைக்கின்றது. அபிவிருத்தி என்ற போர்வையில் அனைத்தையும் சுரண்டும் மற்றும் இயற்கை, சூழல் முக்கியத்துவங்களை இல்லா தொழிக்கும் குறுகிய அரசியல் நெறிமுறைகள் உள்ளடங்கிய "அபிவிருத்திச்செயன்முறைகள்" திணிக்கப்படுகின்றன. இவை சமூகங்களிடையே அச்சவுணர்வையும் பாரபட்சங்களையும் இன்னும் வளர்க்கவே செய்யும். இவை பல்லின வாழ்வாதார உரிமைகளுக்கு மாறானவை. இந்த அரசியல் சித்தாந்தம் அபாகரமானது.

சூழல் பற்றிய விழிப்புணர்வையும் நமக்கான சுயமரியாதையையும் வளர்க்கும் கல்விமுறைமை நமக்கு வேண்டும். இதனைக் கையளிக்கும் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள் எம்மிடையே விரிவு பெற வேண்டும். மாணவர்கள் சுயதேடல் சுயகற்றல் மற்றும் சுயமரியாதை முதலான பண்பு கொண்டவர்களாக உருவாக்கப்பட வேண்டும்.

நமக்கு சூழல்கல்வி, சூழலியற்கல்வி, சூழலுக்கானகல்வி போன்றவை புதிய பொருள்கோடல் மரபுகளை தன்னகத்தே உள்வாங்கி வளர்ந்து வரவேண்டும்.

தெ.மதுசூதனன்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காண்பியப் பண்பாடும் அறிவுக் கையளிப்பும்



சபா.ஜெயராசா



கண்ணாற் காண்பவை அனைத்தும் காண்பியங்கள் என்றே பரந்த பொருளிற் குறிப்பிடப்படுகின்றது. மனிதரால் வடிவமைத்துக் காட்டப்படுபவை காண்பியங்கள் (Visuals) என்பது சிறப்புப் பொருள். காணல் என்பது அறிவைத் திட்டிக் கொள்வதற்குரிய அடிப்படைச் செயற்பாடுகளுள் ஒன்றாகக் கல்வியிலே வலியுறுத்தப்படுகின்றது. நாளாந்தம் பல்லாயிரக்கணக்கான தூண்டிகள் கண்களை வந்து அடைந்த வண்ணமுள்ளன. அத்தூண்டிகளைத் தெரிவு செய்து உள்வாங்கல், கற்றலின் ஒரு முக்கியமான படிநிலையாகின்றது.

காண்பிய வழியாகக் கற்றலும் கற்பித்தலும் தொன்மையான கருவிகளின் ஆக்கத்தோடும் கருவிக்கையாட்சியோடும் இணைந்த செயற்பாடாயிற்று. மனித உடல் வழியான தொடர்பாடலை ஏற்படுத்திய பொழுது உடலே காண்பியமாயிற்று.

தொன்மையான சடங்குகள் அறிவையும் அனுபவங்களையும் கையளிப்புச் செய்த வேளை பொருத்தமான காண்பியங்கள் பயன்படுத்தப்பட்டன.

பாவனைக் காண்பியங்கள், கருத்தேற்றக் காண்பியங்கள் முதலியவை தொன்மையான சடங்குகளிலே பயன்படுத்தப்பட்டன. அந்நிலையிற் காண்பியங்கள் - மாய வித்தை - சடங்கு ஆகியவற்றுக்கிடையே நேரிய இணைப்புக்கள் காணப்பட்டன.

மனித உணர்ச்சிகளையும் தேவைகளையும் புற நிலைப்படுத்திப் பிரதிநிதித்துவம் செய்தவேளை காண்பியங்கள் பொருத்தமான கையளிப்பு ஊடகங்களாக மாற்றம் பெற்றன. வடஇஸ்பெயினில் உள்ள அல்டாமிரா குகையிலும், தென்பிரான்சில் உள்ள லஸ்கோஸ் குகையிலும் வரையப்பட்ட புராதன ஓவியங்கள் கருத்துக்கையளிப்பாக மட்டுமின்றி அக்காலத்தைய மனித இருப்பின் வெளிப்பாடாகவும் அமைந்தன.

பூர்விக நிலையில் காண்பிய ஆக்கத்துக்கும் சமூக இருப்புக்குமுள்ள தொடர்புகளை எளிதாக இனங் காணக்கூடியதாக இருந்தது. சமூகம் சிக்கலடைந்த மாற்றங்களைப் பெற அந்தத் தொடர்புகளைக் கண்டறிதல் சிரமமாக இருப்பினும் இணைப்பு விதி ஆழமாகவே நிலைத்துள்ளது.

"காண்பியப் பண்பாடு Visualculture என்ற எண்ணக்கரு கல்வியியலிலும், தொடர்பாடலியலிலும், திறனாய்வியலிலும் ஆழ்ந்து நோக்கப்படும் அறிபொருளாகின்றது. செய்மதிப்படங்களும், மனித உடலை ஊடுருவிப் பார்க்கும் படங்களும், கணினிச் செருகு ஆள்கைக்கு (Manipulation) உட்படுத்தப்படும் படங்களும் மனித இருப்பும் காண்பியப் பண்பாட்டிலே தாக்கம் விளைவிக்கத் தொடங்கியுள்ளன. தகவல், கருத்துக்கையளிப்பு, கற்றல், மகிழ்ச்சித் தேடல், கருத்தேற்றம் செய்தல் முதலிய அனைத்திலும் காண்பிய நுட்பவியல் இணைந்துள்ளது. இருப்பினும் நுட்பவியல்களால் காண்பியங்கள் வள மூட்டவும்படுகின்றன - திரிபுபடுத்தவும் படுகின்றன.

கல்வி வளர்ச்சியோடு உரைப்பண்பாடும், காண்பியப்பண்பாடும் வளர்ந்து வந்த வேளை ஆய்வறிவாளர் மொழி சார்ந்த உரைப் பண்பாட்டுக்கே முதன்மையும் முக்கியத்துவமும் வழங்கினர். காண்பியப் பண்பாடு வெளியிட்டுத் திறனைப் பொறுத்தவரை இரண்டாம் தரமானது என்று கருதினர். அதற்கு சமூக ஏறுநிரல் இணைப்பும் காரணமாயிற்று. அதாவது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமூகத்தின் தாழ் அடுக்குகளிலே வாழ்ந்தோருக்கே காண்பியத் தொடர்பாடல் பொருத்தமானது என்ற கருத்து வலிமை பெற்றிருந்தது. மேலும் விளக்கமாகச் சொல்வதானால் மொழிசார்ந்த எழுத்தாக்கங்கள் மேலாதிக்கத்துடன் தொடர்புபட்டிருந்தன.

மேலாதிக்கத்தின் பரந்துபட்ட வளர்ச்சி காண்பியக் கலையையும் உள்வாங்கத் தொடங்க, பெரும் காண்பிய வடிவங்கள் உருவாக்கம் பெற்றன. பெரும் மாடங்களும் சிற்பங்களும் மேலாதிக்கத்தின் வடிவங்களாயின.


நவீன கல்வியில் காண்பிய வாசிப்பு, காண்பிய அனுபவம், காண்பிய எழுத்திறிவு, காண்பியக் கருத்துக் கோடல், காண்பிய நிரற்குலைப்பு (Decoding) முதலாம் எண்ணக்கருக்கள் எழுத்தாளப்படுகின்றன. காண்பியத்தைப் பல்வேறு பொருள் கோடலுக்குரிய நூலியமாக (Text)ப் பின்நவீனத்துவவாதிகள் கொள்ளும் பொழுது அதற்கும் சமூக இருப்புக்குமுள்ள தொடர்புகளை அறியத் தவறி விடுகின்றனர்.

படிமங்களின் வரலாற்றையும், காணலின் சமூக வரலாற்றையும் எளிமையான வாய்பாடுகளுக்குள் அடக்கிவிட முடியாது. நவீன வாழ்க்கை இயல்பும் நவீன தொழில் நுட்பமும் "காண்பியம் அல்லாதவற்றைக் காணச் செய்தல்" என்ற செயற்பாட்டை முன்னெடுத்து வருகின்றன. காண்பியப் பண்பாடு காண்பியங்களிலே தங்கியிராத நிலை தோற்றம் பெற்றுள்ளது. அதாவது காண்பியங்கள் நடப்பியலைப் பிரதி நிதித்துவப்படுத்த முடியாத செயற்கைக் கட்டுமைகளுக்கு உட்பட்டு வருகின்றன.

காண்பிய அமைவு எதிர்க் காண்பியம், தொகுப்புக் காண்பியம் என்ற இயங்கியல் தருக்க அடிப்படையில் ஆய்வுகளை மேற்கொள்ளல் மரபு வழித்தளத்தில் எழுச்சி கொண்டு வருகின்றது. ஆனால் காண்பியத்தில பல்வகைப் பொருள் கோடலைப் பின்னவீனத்துவம் தனது தளத்திலிருந்து இயக்குகின்றது. அதாவது கட்டவிழ்ப்பு அல்லது தகர்ப்பு அணுகுமுறையை அவர்கள் காண்பியப் பண்பாட்டிலே முன்னெடுக்கின்றனர். அதன் அடிப்படையிலே காண்பியங்களின் நம்பகத் தன்மை மறுபுறம் கேள்விக்கு உள்ளாக்கப்படுகின்றது.

காண்பியங்கள் தொடர்பான மரபு வழியான ஆய்வுகளும் அணுகுமுறைகளும் ஐரோப்பியமைய வாதச் சிந்தனைகளை அடியொற்றியே கட்டமைப்புச் செய்யப்பட்டு வந்துள்ளன. அண்மைக் காலமாக வளர்ச்சி பெற்றுவரும் மாற்று வகையான சிந்தனைகள் கண்பிய ஆக்கங்களைப் பண்பாட்டுச் சூழலுடனும், தனித்துவங்களுடனும் இணைத்து நோக்குகின்றன. அந்நிலையிலே காண்பிய அழகியலிலே பின்வரும் மாற்று எண்ணக்கருக்கள் எழுச்சியுறத் தொடங்கியுள்ளன.

1. கிலாபர் ரோசாவின் பசிக்கொடுமை அழகியல்
2. செம்பினியின் சிக்ரெட் எச்ச அழகியல்



3. சக்ன செராலாவின் குப்பைக் கழிவு அழகியல்
4. வெலோசோவின் வெப்ப வலய அழகியல்
5. டெல் ரொறோவின் நேர்மைற் பயங்கரவாத அழகியல்
6. நீட்டின் கூடு அழகியல்
7. கென்ரிலுயிஸ் கேட்சின் குறிப்பான்குரங்கு அழகியல்
8. தெஸ்கோம் கபிரியேலின் நாடோடி அழகியல்
9. கொபீனாமேர்சரின் இடம் பெயர்ந்தோர் அழகியல்

என்றவாறு முன்னர் இடம் பெற்ற அழகியல் கருத்துக்களை மறுதலித்துப் புதிய அழகியல் மொழிவுகள் எழுச்சி கொள்ளத் தொடங்கியுள்ளன. நவீன வாழ்க்கைச் சிதறல்களின் கண்ணாடித்துண்டங்களாக அவை காணப்படுகின்றன. ஒருபுறம் ஐரோப்பிய மைவாத நிராகரிப்பும் மறுபுறம் மாற்றுவகையான தேடலும் அவற்றிலே காணப்படுகின்றன.

காண்பியங்களைத் தனித்துத் தூய அழகியற் கண்ணோட்டங்களில் ஆராய்தல் கைவிடப்பட்டு பால் நிலை, இனக்குழுமநிலை, வர்க்கப்பண்பாட்டு நிலை முதலாம் கண்ணோட்டங்களின் ஆராய்தல் மீள் எழுச்சி கொள்ளத் தொடங்கியுள்ளது. காண்பியங்களிலே புதைந்துள்ள ஆண்மைப்பிடி (Mascutinity) தகர்த்து நோக்கப்படுகின்றது அந்நிலையில் "ஆண்மைப் பிடியைக் குலைத்தல்" என்ற மாற்றுக்கருத்து முன்வைக்கப்படுகின்றது.

மத்திய கால ஐரோப்பியக் கல்வியிலே புலக்காட்சியின் முக்கியத்துவமும் நம்பிக்கையும் வலியுறுத்தப்பட ஒரு புறம் காண்பியக்கலை வளர்ச்சியடைந்தது. மறுபுறம் விஞ்ஞானமும் வேகமாக வளர்ச்சியுறத் தொடங்கியது. புதிய கண்டுபிடிப்புக்கள் எழுச்சியுற்றன. புலக்காட்சியும், உள்ளமும் பற்றிய நம்பிக்கைகளிலே விரிசலை ஏற்படுத்தும் எழுச்சிகள் சமகாலத்திலே வலிமை பெறத் தொடங்கிவிட்டன. காண்பியங்களுக்கும் புலக்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காட்சிக்குமிடையே இசைவும் இசைவின்மையும் என்ற முரண்பாடுகள் கவன ஈர்ப்பைப் பெறுகின்றன.

புறத்தை அகத்தில் அனுபவித்தலைக் காண்பியங்கள் முன்னெடுக்கின்றன இக்கருத்தின் வலியுறுத்தல் லகானுடைய கண்ணாடிப் பருவ எண்ணக்கருவால் முன்னெடுக்கப்படுகின்றது. இதிலிருந்து மேலும் முன்னெழும் கருத்தை மிசேல் பூக்கோ முன்வைத்தார், வெளி அல்லது விசும்பு, நடப்பியல், நிகர்நிலை நடப்பியல் (Virtual) ஆகியவற்றுக் கிடையேயுள்ள வேறுபட்ட வடிவங்களையும் அவற்றுக்கிடையேயுள்ள ஊடிணைப்பையும் பூக்கோ வலியுறுத்தினார்.

நவீன எண்மநிலைப்படிமங்கள் பார்ப்போருக்கும் பார்க்கும் பொருளுக்குமிடையேயுள்ள மரபு வழித் தொடர்புகளை மாற்றியமைக்கின்றன. அத்தகைய எழுச்சி மனித அகவயப்பாங்கினை நெருக்கடிக்கு உள்ளாக்கிவிடுகின்றது என்ற கருத்தும் முன்வைக்கப்படுகின்றது.

காண்பியங்களின் வளர்ச்சி புதுவகையான எடுத்தியம்பல்களையும் சொல்லாடல்களையும் உருவாக்கி வருகின்றது. மனித உடற் கூறுகளைக் காண்பியங்கள் அரசியல் உடற்கூறுகளாக (Political Atatomy) மாற்றி விடுவதாக பூக்கோ விளக்கினார். புதிய சொல்லாடல்களை உருவாக்குவதில் அவரது பங்களிப்புச் சிறப்பாகச் சுட்டிக்காட்டப்படுகின்றது. அவரது கருத்துப்படி மனித உடல் பயனுள்ள உடல் மற்றும் நுண்மதிக்கு உள்ளாக்கப்படும் உடல் என்றும் பாகுபடுத்தப்படுகின்றது. ஒன்று பிரதிநிதித்துவப்படுத்தலையும் மற்றையது நடைமுறைப்பாங்கையும் வெளிப்படுத்துகின்றது அவற்றின் வழியாக மனித உடல் மேலாதிக்கத்துக்கு ஏற்றவாறு, பழக்கப்பட்டுப் பயிற்றுவிக்கப்படுகின்றது.

காண்பியவகைப் பாட்டிலும் பல புதிய சொல்லாடல்கள் உருவாக்கப்படுகின்றன.

அறிவுக் கையளிப்பும் மற்றும் கற்பித்தற் செயற்பாடுகளில் ஈடுபடுவோர் காண்பியச் சிந்தனைகளில் ஏற்பட்ட நவீன வளர்ச்சிகளையும் நவீன நுட்பவியல்களையும் அறிந்து கொள்ள வேண்டியுள்ளது. அப்பொழுதுதான் அறிவுக்கையளிப்பை மேலும் வினைத்திறனுடன் முன்னெடுக்க முடியும். மரபுவழியான காண்பிய ஆக்கங்களுக்கும் நவீன காண்பிய ஆக்கங்களுக்குமிடையே தோற்றம் பெற்ற அகலம் தொழில நுட்பவியலுடன் மட்டுமின்றி நவீன நுகர்ச்சிவாதம் சமகாலத்தைய சமூக இருப்பு முதலியவற்றுடனும் தொடர்புடையது. அவற்றின் பின்னணியிலேதான் மரபு வழிக் காண்பிய ஆக்கம் இறந்து விட்டது. நவீன காண்பிய நுட்பங்கள் இறந்து கொண்டிருக்கின்றன என்ற இருப்பியக் கருத்து முன்வைக்கப்படுகின்றது.

அதேவேளை காண்பிய ஆக்கத்துக்கும் சமூக ஆக்கத்துக்குமிடையேயுள்ள தருக்கம் தொடர்ந்து கொண்டிருக்கின்றது. எவ்வாறாயினும் அறிவுக் கையளிப்பில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் ஆசிரியர் சமூகம் "காண்பியப் பண்பாடு மீதான கவனத்தை சிந்தனைத் தெளிவை இன்னும் ஆழமாக்க வேண்டும். புத்தாக்கமான அணுகு முறைகளுக்கும் புலக்காட்சிக்கும் தம்மைத் தயார்ப்படுத்த வேண்டும்.

---

### பிழைத்திருத்தம்

ஆவணி மாதத்தில் வெளிவந்த அகவிழியில் "சர்வதேச அரங்கில் நடைமுறையில் இருக்கும் எண்முறை" என்னும் தலைப்பில் வெளியிடப்பட்ட கட்டுரையில் ஒரு சில அச்சுப்பிழைகள் ஏற்பட்டுள்ளன. திருத்தங்கள் கீழே தரப்பட்டுள்ளன. சிரமத்துக்கு தயைகூர்ந்து மன்னிக்கவும்.

எண்பற்றிய கருத்தும் சிந்தனையும் பல நூற்றாண்டுக்காலமாக இருந்திருப்பினும் மறை எண் பற்றிய எண்ணக்கரு சுமார் 1400 ஆண்டுகளுக்கு முன்பு தான் தோன்றியது பேராசிரியருமான மொறிஸ் கிளையின் (Morris Kline) கூறுகிறார். இவரது கூற்றுப்படி இந்தியர்கள் கடனைக் குறிப்பதற்கு மறை எண்ணைப் பயன்படுத்தினார்கள். அதாவது நேர் எண் கையிருப்பையும் மறை எண் கடனையும் குறிப்பதான சிந்தனை தோன்றியத. இந்த எண்ணக்கருவை கி.பி 628 இல் பிரமகுப்தர் என்ற இந்திய கணித மேதை முதன்முதல் பயன்படுத்தினார். மேலும் அவர் மறை எண்களுக்கு கூட்டல் கழித்தல் பெருக்கல் வகுத்தல் ஆகிய நான்கு செயற்பாட்டுக்களுக்கும் உரிய விதிகளையும் வெளியிட்டார். இதன் பின் பன்னிரண்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த இந்திய கணிதமேதை பாஸ்கராச்சியர் ஒரு நேர் எண்ணின் வர்க்கமூலம் நேர் எண்ணாகவும் மறை எண்ணாகவும் அமையலாம் என்றும் இருபடிச் சமன்பாட்டில் தீர்வு நேர் எண்ணாகவும் மறை ஆண்டளவில் பாஸ்கரர் $x^2 - 45x = 50$ என்னும் சமன்பாட்டில் தீர்வை $x = 50$ என்றும் $x = -5$ என்றும் எடுத்துரைத்தார். இதன் பின்தான் இருபடிச் சமன்பாட்டில் தீர்வு மறை எண்ணாகவும் வரலாம் என்னும் கருத்து நடைமுறைக்கு வந்தது. இதன் அடிப்படையிலேதான்

$ax^2 + bx + c = 0$ எனின்

$$x = \frac{-b \pm \sqrt{b2 - 4ac}}{2a}$$

என்னும் சூத்திரம் உதயமாயிற்று.

மறை எண் பற்றிய எண்ணக்கரு தோன்றி பல ஆண்டுகளுக்குப் பின்தான் எண்களை நேர்கோட்டில் காட்டும் முறை நடைமுறைக்கு வந்தது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பல்கலைக்கழகங்களில் வன்செயலும் பகிடிவதையும்

சோ.சந்திரசேகரன்



**பல்கலைக்கழகங்களில் வன்செயலும் பகிடிவதையும் அதிகாரபீடம் எதிர்நோக்கும் சவால்கள்**

நாட்டில் உள்ள 15 பல்கலைக்கழகங்களில் 14 மரபுவழிப் பல்கலைக்கழகங்கள் (ஒன்று திறந்த பல்கலைக்கழகம்). இப்பதினான்கு பல்கலைக்கழகங்களில் 67,000 உள்வாரி மாணவர்கள் பயிலுகின்றனர். இவர்களைவிட பகுதி நேர மாணவர்களும் உண்டு. அவர்களில் உயர்பட்டம் பெற பட்டப்பின் படிப்புப் பயிலுவோரும் உண்டு. இலங்கைப் பல்கலைக்கழகக் கற்கை நெறிகளின் தராதரம், வேலை உலகிற்கு அவற்றின் பொருத்தப்பாடு பற்றிய ஏராளமான பிரச்சினைகள். உலக வங்கியின் நிதி உதவியுடன் கல்வித் தராதரங்களையும் பொருத்தப்பாட்டையும் மேம்படுத்த பல முயற்சிகள் நடைபெற்று வருகின்றன.

அதேவேளையில் பல்கலைக்கழகங்கள் எதிர்நோக்கும் ஒரு பிரதான பிரச்சினை மாணவர்களினால் ஏற்படும் வன்செயல்களும் புதிய மாணவர்கள் அனுமதி பெறும்போது அவர்கள் மூத்த மாணவர்கள் பல சந்தர்ப்பங்களில் கடுமையான தொந்தரவுக்குள்ளாவதாகும் (பகிடிவதை).

அதேவேளையில் மாணவர் குழுக்களுக்கிடையேயும் பல சந்தர்ப்பங்களில் கடுமையான மோதல்கள் ஏற்பட்டு பல்கலைக்கழகச் சொத்துகளுக்குச் சேதம் விளைவிக்கப்படுகின்றது. அத்துடன் இவ்வாறான வன்செயல்கள் காரணமாக நீண்ட காலத்துக்குப் பல்கலைக்கழகங்கள் மூடப்பட்டு கல்வி நடவடிக்கைகள் நிறுத்தப்படுகின்றன.

ஒரு மதிப்பீட்டின் படி அண்மைக் காலங்களில் பல்கலைக்கழகங்களில் 193 வேலை நாட்கள் இழக்கப்பட்டன. இவற்றில் 185 நாட்கள் இழக்கப்பட மாணவர்களின் வகுப்புப் புறக்கணிப்புக் காரணமாக இருந்தது. (சப்ரகமுவ 69 நாட்கள், ரஜரட்டை 60 நாட்கள், பேராதனை 61 நாட்கள், வயம்பா 41 நாட்கள், ஜயவர்தனபுர 24 நாட்கள், ருகுணு 14 நாட்கள்). சில சந்தர்ப்பங்களில் கல்விசாரா ஊழியர்களின் வேலை நிறுத்தங்களும் இவ்வாறான மூடலுக்குக் காரணமாக அமைகின்றன.

பல்கலைக்கழகங்களில் இடம்பெறும் வன்செயல் காரணமாக அவை மூடப்படும்போது, உயர்கல்விக்கு ஒதுக்கப்படும் வளங்கள் விரயமாகின்றன. தற்போது பல்கலைக்கழகங்களுக்கு ஆண்டுதோறும் ஒதுக்கப்படும் நிதி 1400 கோடி ரூபாய், ஒரு மாணவனுக்கான கல்விச் செலவு ஆண்டுக்கு இரண்டு இலட்சம் ரூபாய் என்றால், இந்த விரயத்தின் அளவை அனைவரும் புரிந்துகொள்ள முடியும்.

மாணவர்களின் வன்செயல்கள் புதிய மாணவர்களைக் கடுமையாகத் தொந்தரவுக்குள்ளாக்குவதோடு, வேறு பல சந்தர்ப்பங்களிலும் நிகழும். ஒரே பீடத்தைச் சேர்ந்த மாணவர்களுக்கிடையே ஏற்படும் மோதல்கள், இவை இரண்டாம் ஆண்டு, மூன்றாம் ஆண்டு மாணவர்களுக்கிடையே நிகழலாம். பல இரு போதனா பீடங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கிடையே நிகழலாம். அரசியல் கட்சிகளைச் சேர்ந்த மாணவர்களுக்கிடையேயும் மோதல்கள் நிகழ்வதுண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சில சந்தர்ப்பங்களில் பல்கலைக்கழகங்களுக்கு அயலில் வசிப்போருடன் மோதல்கள் ஏற்படுவதுண்டு. அண்மைக்காலங்களில், பகிடிவதைக்கு எதிரான மாணவர் குழுக்களுக்கும் சார்பான குழுக்களுக்கிடையேயும் மோதல்கள் தோன்றுவதுண்டு.

பகிடிவதை பற்றிய இணையத் தளங்களை நோக்கினால் இலங்கை பற்றி தகவல்களே அதில் அதிகமாக இருப்பதும் உலகிலேயே இவ்விடயத்தில் மோசமான நிலை இலங்கையிலேயே காணப்படுகின்றது என்று அவற்றில் கூறப்பட்டிருப்பதும் கூர்ந்து நோக்கப்பட வேண்டியதொன்றாகும். "பகிடிவதை" என்பது கல்வி நிலையங்களில் அனுமதி பெறும் புதிய மாணவர்களுக்கு உடல் ரீதியாகவும் உள ரீதியாகவும் சொல்சார்ந்த முறையிலும் இழைக்கப்படும் ஒருவகை துஷ்பிரயோகமாகும். புதிய மாணவர்களைத் துன்புறுத்தி, பயமுறுத்தி இன்னல்களுக்குள்ளாக்கும் பேச்சுகளும் செயற்பாடுகளும் அவர்களை அவமானப்படுத்தும் செய்கைகளும் உள ரீதியான, உடல் ரீதியான பாதிப்புக்குள்ளாக்கும் மூத்த மாணவர்களின் நடத்தைகளும் பகிடிவதையாகக் கொள்ளப்படும்.

**வரலாறு**

கி.பி. 7 ஆம் 8 ஆம் நூற்றாண்டில் கிரேக்க நாட்டில் விளையாட்டுகளில் சேருவோரிடம் "கோஷ்டி இயல்புகளை" ஏற்படுத்து முகமாகப் பலவாறு அவமானங்களுக்கு உட்படுத்தப்பட்டனர். இதுவே பகிடிவதையின் ஆரம்பம் என்பர்.

காலப்போக்கில் இப்பகிடிவதை "நுட்பம்" மாற்றங்களுக்குள்ளாகி இராணுவத்திற்குள் அறிமுகம் செய்யப்பட்டது. அங்கிருந்துதான் ஐரோப்பியக் கல்வி நிறுவனங்களுக்குள் இக்கலாசாரம் நுழைந்தது. போர்களின் முடிவின் பின்னர் இராணுவ வீரர்களுக்கு உயர்கல்வி நிலையங்களில் பயிலும் வாய்ப்புகள் வழங்கப்பட்ட போது, அவர்கள் அங்கு பகிடிவதைக் கலாசாரத்தை அறிமுகம் செய்தனர். பகிடிவதையினூடாகத் தனியாள் தனது தனித்தன்மையை இழந்து கோஷ்டி மனப்பான்மையைப் பெற உதவும் என்பது பகிடிவதையைச் செய்வோரின் எண்ணம். "மிலேச்சத்தனமான முறையில் புதியவர்களை வரவேற்கும் முறையே பகிடிவதை" என்பது அதனை எதிர்ப்போரின் கருத்து.

உயர்கல்வி நிறுவனங்களில் அனுமதி பெறும் இராணுவ வீரர்களின் தொகை குறையக் குறைய மற்றவர்கள், நோக்கங்களை அறியாது தமது விருப்பப்படி பகிடிவதையை ஒரு கொடூரமான பொழுதுபோக்காக மாற்றிக்கொண்டனர். பிரித்தானியரிடமிருந்து இந்தியா, இலங்கை முதலிய நாடுகள் பெற்றுக்கொண்ட ஒரு மோசமான பழக்கமே பகிடிவதையாகும்.

பகிடிவதை எங்கு தொடங்கியதோ அங்கு அது இன்று அவ்வளவு கடுமையாக இல்லையென்றும் வளர்முக நாடுகளில்தான் அது தீவிரமாகப் பரவியுள்ளதென்று ஆய்வாளர்கள் கூறுகின்றனர். பகிடி-



வதை என்பது மேலைக் கலாசாரத்திலிருந்து உதித்தது என்பதையும் பல இனமக்கள் வாழும் இலங்கை போன்ற நாடுகளுக்கு அது பொருந்திவராது என்பதையும் மறந்துவிடக்கூடாது. தற்போது பகிடிவதையினால் உலகிலேயே மோசமாகப் பாதிக்கப்பட்ட நாடு இலங்கையாகும்.

**விளைவுகள்**

பகிடிவதையினால் மாணவர்களின் மனித உரிமைகள் மீறப்படுகின்றன. பல மருத்துவப் பிரச்சினைகள் எழுகின்றன. மாணவர்கள் அவமானத்துக்குள்ளாகின்றனர். உடல்ரீதியான காயங்களுக்குள்ளாகி துன்புறுத்தப்படுகின்றனர். மாணவர்கள் மரணமுற்ற சம்பவங்களும் உண்டு.

பாலியல் ரீதியான துன்புறுத்தல்களுக்கும் அவர்கள் உள்ளாகின்றனர். இவற்றை அறியும் பெற்றோர்கள் தமது பிள்ளைகள் பல்கலைக்கழகம் செல்வதையே விரும்பமாட்டார்கள். மதுபானம், போதைமருந்து என்பவற்றைப் பயன்படுத்தச் செய்யும் சம்பவங்களும் இடம்பெற்றுள்ளன. பயம், அவமானம், பதகளிப்பு என்பவற்றால் தற்கொலை, மன அழுத்தம், ஆளுமைக் குறைபாடுகள் என்பன நிகழ்கின்றன. பகிடிவதை காரணமாக மற்றவர்களின் துன்பங்களில் அக்கறை செலுத்தாத மனப்பாங்கு, அவற்றையிட்டுக் களிப்படைதல், குழுவாக வன்செயலில் ஈடுபடல், வன்செயலை நியாயப்படுத்தும் உளப்பாங்கு என்பன ஏற்படுகின்றன. பல புதிய மாணவர்கள் விரக்தியடைந்து பல்கலைக்கழகக் கல்வியைக் கைவிடும் சம்பவங்களும் இடம்பெற்றுள்ளன

**காரணங்கள்**

மருத்துவ மற்றும் உளவியல் ஆய்வாளர்களின் கருத்தின்படி, மூத்த மாணவர்கள் இத்துன்புறுத்தல்களினால் கிடைக்கும் மகிழ்ச்சி காரணமாகப் பகிடிவதையில் ஈடுபடுகின்றனர். புதிய மாணவர்களைத் தமது வேலையாட்களாகக் கருதி இன்புறுவதுமுண்டு. மூத்த மாணவர்கள் தாங்கள் முன்னொருபோது இதே மாதிரியாகத் துன்புறுத்தப்பட்டதற்கும், புதிய மாண-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வர்களைப் பழிவாங்குகின்றனர். பகிடிவதை ஒரு மரபாக வந்துவிட்டதால் அதனைத் தொடர்ந்து பின்பற்ற வேண்டும் என்ற கருத்து மூத்த மாணவர் மத்தியில் பரவி உள்ளது. இவ்வாறான பகிடிவதை பல நன்மைகளைத் தரும் எனத் தவறாகநம்பும் மாணவர்களும் இருக்கின்றனர். தமது பேச்சைக் கேட்டு அடங்கி நடக்கப் பலர் உள்ளார்கள் என்ற எண்ணம் ஒரு வகைக் களிப்பைத் தருகின்றது. மேலும் பகிடிவதையானது மற்ற மாணவர்கள் மீது அதிகாரம் செலுத்தும் சந்தர்ப்பத்தைத் தருகின்றது. ஆய்வாளர்கள் கருத்தின்படி, மாணவர்களுக்கு நன்மை தரவல்ல ஏனைய ஆரோக்கியமான வழிமுறைகள் பற்றிய விழிப்புணர்வு மூத்த மாணவர்களிடம் இல்லை. அவ்வாறே பகிடிவதைகள் புதிய மாணவர்களில் உடல் ரீதியாகவும் உளரீதியாகவும் ஏற்படும் பாதிப்புகள் பகிடிவதைக்கு எதிரான சட்டங்கள், பல்கலைக்கழக விதிமுறைகள் பற்றிய அறிவு என்பன மாணவர்களிடம் இல்லாமையும் வேறு சில பிரதான காரணங்களாகும்.

### பகிடிவதைக்கு எதிரான மாணவர் இயக்கம்

இந்தியாவின் பகிடிவதைக்கு எதிரான அரசசார்பற்ற அமைப்புகள் உண்டு. இலங்கையில் அவ்வாறன்றி மாணவர்கள் மத்தியிலிருந்து எதிர்ப்பியக்கங்கள் தோன்றியுள்ளன. இந்தியாவில் உயர்கல்வி நிலையங்களில் நிலவும் பகிடிவதை ஒழித்துக்கட்டும் இந்திய அமைப்பானது 1997 இல் 64 முறைப்பாடுகளை ஆராய்ந்தது, அவற்றில் 60 சதவீதமானவை உடல் ரீதியான பாதிப்பையும் 20 சதவீதமானவை பாலியல் தொந்தரவு சம்பந்தப்பட்டவை என அறிவித்தது. மற்றொரு அரசசார்பற்ற இந்திய நிறுவனம் இதேபோன்ற பணியில் ஈடுபட்டு 2007 இல் 7 மாணவர்கள் இறந்தனர் என்றும் 2000/2007 காலப்பகுதியில் 31 பேர் இறந்தனர் என்றும் எடுத்துக் கூறியது.

இலங்கையில் இவ்வாறான அரச சார்பற்ற நிறுவனங்கள் இல்லாவிட்டாலும் மாணவர்கள் மத்தியிலிருந்து எதிர்ப்பியக்கங்கள் தோன்றின. எந்தெந்த போதனா பீடங்களில் பகிடிவதைகள் அதிகரித்தனவோ அங்கெல்லாம் இவ்வாறான எதிர்ப்பியக்கங்கள் தோன்றின. பேராதனையில் 1996 இல் இவ்வியக்கம் தோன்றியது. இதனைத் தொடர்ந்து எல்லாப் பல்கலைக்கழகங்களிலும் இத்தகைய இயக்கங்கள் ஆரம்பமாயின. இதனால் பகிடிவதையின் தீவிரம் பல இடங்களில் குறைந்ததாகவும் கூறப்பட்டது. ஆயினும் பகிடிவதைக்குச் சார்பானவர்களுக்கும் எதிரானவர்களுக்குமிடையே மோதல்கள் ஏற்பட்டு, புதிய முறையில் வன்செயல்கள் தோற்றமுற்றன. இதன் காணமாக பகிடிவதைக்கு எதிராகப் போராடிய ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழக மாணவர் சமந்த விதானகே கொல்லப்பட்டான்.



### சட்ட ஏற்பாடுகள்

இலங்கை அரசியல் யாப்பின் 126 ஆவது ஏற்பாட்டின்படி, மனித உரிமை மீறல் தொடர்பான மனுக்களை பிரஜைகள் உயர் நீதிமன்றத்திடம் சமர்ப்பிக்கலாம். அரசியல் யாப்பின்படி பகிடிவதைச் செயற்பாடுகள் மனித உரிமை மீறல்களாகவே கருதப்படல் வேண்டும். 1997 ஆம் ஆண்டில் பல்கலைக்கழகங்களில் தொடர்ச்சியாக நிகழ்ந்த துன்புறுத்தல் சம்பவங்கள் காரணமாக 1998 ஆம் ஆண்டில் பாராளுமன்றத்தில் உயர்கல்வி நிலையங்களில் வன்செயல்களையும் இவ்வாறான துன்புறுத்தல்களையும் தடை செய்யும் 20 ஆம் இலக்கச் சட்டம் நிறைவேற்றப்பட்டது. நாட்டின் பிரதான சட்டவாக்க அமைப்பான பாராளுமன்றமே இவ்விடயத்தில் தலையிட்டு புதிய சட்டமொன்றை ஆக்குமளவுக்கும் பகிடிவதை இலங்கைப் பல்கலைக்கழகங்களில் உச்சக்கட்டங்களை எட்டியது. இச்சட்டத்தைக் கடுமையாக நடைமுறைப்படுத்துமாறு உயர்கல்வி அமைச்சர் தற்போது அறிவுறுத்தியுள்ளார். பகிடிவதைச செயற்பாட்டில் ஈடுபடும் மாணவர்கள் பல்கலைக்கழகத்திலிருந்து நீக்கப்படவும் இச்சட்டத்தில் ஏற்பாடுகள் உண்டு.

பகிடிவதைகள் மோசமான கட்டங்களை எய்தி, பொதுமக்களிடமிருந்து ஏராளமான முறைப்பாடுகள் வந்ததைத் தொடர்ந்து அண்மையில் பல்கலைக்கழக உயர் அதிகார பீடமும் உயர்கல்விக்குப் பொறுப்பான அரசாங்க அமைச்சரும் இவ்விடயத்தில் அதிக அக்கறை செலுத்திவருகின்றனர்.

2002 ஆம் ஆண்டில் பல்கலைக்கழக ஆணைக்குழுவின் முயற்சியில் பல்கலைக்கழகங்களில் இடம்பெறும் வன்செயல்களை ஒழித்துக்கட்டுவதற்கான ஆலோசனைகள் சகல பல்கலைக்கழகங்களிலிருந்தும் பெறப்பட்டன. சகல ஆலோசனைகளும் பகிடிவதையை முற்றாக ஒழித்துக்கட்டினால் வன்செயலும் குறைந்துவிடும் என்பதை வலியுறுத்துவதாக அமைந்தன. அத்துடன் விடுதிகளில் மாணவர்கள் சட்டவிரோதமாகத் தங்குவதைத் தடை செய்தல், பல்கலைக்கழகப் பாதுகாப்பு நிலைமைகளை வலுப்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படுத்தல், மாணவர் சங்கங்கள் சனநாயக முறைப்படி தெரிவு செய்யப்பட்டு இயங்குதல் போன்ற ஆலோசனைகள் தெரிவிக்கப்பட்டன.

இவ்வாண்டு மே மாதத்தில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவும் துணைவேந்தர்கள் குழுவும் இணைந்து "பகிடிவதை, வன்செயல், மாணவர் ஒழுக்காற்றல் 27 என்ற தலைப்பில் நடத்திய தேசிய கருத்தரங்கு நிலைமை மோசமடைந்துள்ளதைச் சுட்டிக்காட்டும். இக் கருத்தரங்கில் பிரதம நீதியரசர், சட்டத்துறை நாயகம், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுத் தலைவர், காவல்துறை அதிபர் உட்பட ஏராளமான பல்கலைக்கழகப் போதனா பீடத் தலைவர்களும பேராசிரியர்களும் கலந்துகொண்டனர். இக்கருத்தரங்கில் பகிடிவதை, வன் செயல் என்பவற்றின் சட்ட அம்சங்கள், அவற்றின் சமூகவியல் மற்றும் மானிடவியல் அம்சங்கள், உளவியல் மற்றும் மருத்துவ அம்சங்கள் முதலிய தலைப்புகளில் ஆய்வேடு சமர்ப்பிக்கப்பட்டன. இவ்வாய் வேடுகள் சட்டத்துறை, சமூகவியல்துறை, மருத்துவத்துறை சார்ந்த பல ஆய்வாளர்களால் சமர்ப்பிக்கப்பட்டன.

இவ்வாறான முறையில் நடைபெற்ற உயர்மட்டக் கருத்தரங்கு (3-5-2010) பல்கலைக்கழகங்களில் பகிடிவதை, வன்செயல் தொடர்பாக இன்று எழுந்துள்ள நிலைமையைச் சிறப்பாக விளக்கும் அதேவேளையில் ஏற்கனவே கூறியதுபோல இணையத் தளங்களில் இலங்கையில் பகிடிவதை பற்றியே அதிகளவில் பேசப்படுகின்றது.

இவ்வாண்டு ஜனவரி மாதத்தில் ப.மா.ஆணைக்குழு வெளியிட்ட சுற்றறிக்கையின் படி 1998 ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட பகிடிவதைக்கு எதிரான சட்டத்தின் ஏற்பாடுகளைப் பல்கலைக்கழகங்கள் முறையாகப் பயன்படுத்தவில்லை. அண்மைக்காலங்களில் அதிகரித்துவந்த பகிடிவதைச் சம்பவங்களின் காரணமாக, இச்சட்டத்தின் ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்துமாறு பல்கலைக்கழகங்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளன.

இச்சட்டத்தின்படி பின்வருவன தண்டனைக்குரிய குற்றமாகக் கருதப்படும். பகிடிவதையின் போது மாணவர்கள் பாலியல் துன்புறுத்தலுக்கு அல்லது மோசமான காயங்களுக்கு உட்படுத்தப்படல். பேச்சு அல்லது எழுத்துமூலமாக மற்றவர்களைப் பயமுறுத்துதல் அல்லது துன்பப்படுத்துதல். மற்றவர்களின் தனிப்பட்ட சுதந்திரம், நடமாடும் சுதந்திரம் என்பவற்றை மீறும் வகையில் நடத்தல். ஒருவர் தான் செல்ல விரும்பும் இடத்துக்குச் செல்ல முடியாதவாறு இடையூறு செய்தல். சட்டரீதியான நியாயமின்றி உயர்கல்வி நிலையக் கட்டடங்களில் அனுமதியின்றித் தங்குதல்.

இச்சட்டத்தின்படி பாதிக்கப்படுவோர் மாணவராகவும் இருக்கலாம் ஆசிரியராகவும் இருக்கலாம். ஆசிரியர்களும் இவ்வாறான பாதிப்புகளுக்குள்ளாக நேரிட்டமையால் 1998 ஆம் ஆண்டுச் சட்டம் ஆசிரியர்களையும் பாதுகாக்கும் முறையில் இயற்றப்பட்டது.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் புதிய சுற்றறிக்கையின் படி மாணவர்கள் தாம் பகிடிவதையிலோ அல்லது வன்செயல்களிலோ ஈடுபடமாட்டோம் என்ற பிரகடனத்தில் கையெழுத்திட வேண்டும். இவ்வாறான பிரகடனத்தில் பெற்றோர் அல்லது பாதுகாவலரும் கையொப்பமிடல் வேண்டும். அத்துடன் துணைவேந்தர், பீடத் தலைவர்கள், பல்கலைக்கழக மருத்துவ அதிகாரிகள், மாணவ ஆலோசகர்கள் ஆகியோர் உள்ளடங்கிய பகிடிவதைக்கு எதிரான குழுவொன்று நியமிக்கப்படல் வேண்டும். தேவைக்கேற்ப பீடமட்டத்திலும் இவ்வாறான குழுக்கள் அமைக்கப்படலாம். பெற்றோர்கள், மாணவர்கள், பல்கலைக்கழக ஆசிரியர்கள் என சகலருக்கும் சட்டத்தின் ஏற்பாடுகள், குற்றங்கள், தண்டனைகள் பற்றி அறிவிக்கப்படல் வேண்டும். பல்கலைக்கழக பாதுகாப்பு அதிகாரிகள் அருகில் உள்ள காவல் நிலையம் என சகலரும் பகிடிவதைத் தவிர்ப்பு நடவடிக்கைகளுக்கு உதவவேண்டும்.

மிகப்பிரதானமாகப் புதிய மாணவர்களுக்குப் பாதுகாப்பான, சினேகபூர்வமான சூழலை ஏற்படுத்தி, அவர்கள் பல்கலைக்கழகச் சூழல், கலாசாரம் என்பவற்றோடு பரிட்சயம் பெற புதிய நிகழ்ச்சித் திட்டங்களைப் பல்கலைக்கழகங்கள் உருவாக்கிக் கொள்ளவேண்டும் என இச் சுற்றறிக்கை வலியுறுத்தியுள்ளது.

1998 ஆம் ஆண்டுச் சட்டமானது குற்றம் இழைக்கும் மாணவர்களுக்குக் கடுமையான தண்டனைகளை விதித்துள்ளது. முதலில் இக்குற்றங்கள் புரிவோருக்குப் பிணை கிடையாது. அத்துடன் பத்து ஆண்டுகள் வரை கடுங்காவல் தண்டனையும் விதிக்கப்படலாம். மேலும், இச்சட்ட ஏற்பாடுகளின் படி குற்றம் நிரூபிக்கப்பட்டால் குற்றம் செய்தவர்கள் பல்கலைக்கழகங்களிலிருந்து அகற்றப்படவும்முடியும். அவர்கள் பாதிக்கப்பட்டவர்களுக்கு நட்டஈடு வழங்கும் ஏற்பாடும் சட்டத்தில் உண்டு.

இன்று அரச பல்கலைக்கழகங்கள் வளப்பற்றாக்குறையால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன. 70,000 பட்டதாரி மாணவர்களுக்கான போதிய இடவசதி, கணினிகள், கற்பித்தல் சாதனங்கள் போதிய அளவு இல்லை. உயர்தரமான கல்வித் தேர்ச்சி உடைய ஆசிரியர்களைக் கவர்ந்திழுக்கும் வேலை நிலைமைகளும் சம்பளங்களும் இல்லை. உலகில் குறைந்த சம்பளம் வழங்கும் பல்கலைக்கழக முறைமைகளில் இலங்கையும் ஒன்று. இவற்றோடு மாணவர்களின் ஒழுக்காற்றல் பிரச்சினை, வன்செயல், பகிடிவதை, அரசியல் இயக்கங்களில் அதீத ஈடுபாடு என எல்லாம் சேர்ந்து பல்கலைக்கழகங்களின் கல்வித் தராதர வீழ்ச்சிக்குக் காரணமாகி உள்ளன என்பதே இன்றைய யதார்த்த நிலைமை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாறி வரும் மாணவர் சமூகம்: குற்றவாளிகள் யார்?

ஜி. ஆர். சுரேந்தர்நாத்

இக்கட்டுரை இந்தியச் சூழலில் எழுதப்பட்டது. இருப்பினும் எமது சூழலிலும் மாறிவரும் மாணவர் சமூகம் குறித்த அக்கறை எமக்கு வேண்டி உள்ளது. குறிப்பாக மாணவர் சமூகம் வன்முறைகளிலும் கோஸ்டி மோதல்களிலும் மற்றும் குற்றங்கள் புரியும் பிரிவினராகவும் மாற்றப்பட்டுவருவதை நாம் மறுப்பதற்கு இல்லை. இதனை இன்னும் ஆழமாகவும் தெளிவாகவும் எமது நடைமுறை அனுபவங்களில் இருந்து நாம் தெளிவுபெறுவதை காலத்தின் கட்டாயமாகும்.

செய்தித்தாள்கள் மற்றும் பத்திரிகைகள் படிப்பதையே நிறுத்திவிடலாமா என்று சில சமயங்களில் தோன்றுகிறது. அந்த அளவிற்கு அதில் வரும் செய்திகள் வாழ்க்கை குறித்தும், மனிதர்கள் குறித்தும் மிகுந்த அவ நம்பிக்கை அளிப்பதாக உள்ளது. ஐ.பி.எல். ஊழல், போலி மருந்துகள், கேதன் தேசாயில் ஆரம்பித்துக் காலாவதியான மருந்துகளை புரோக்கரிடம் விற்ற மருத்துவமனை கீழ்நிலை ஊழியர்கள் வரையிலான செய்திகளைப் பார்க்கும்போது, பெரும் பணக்காரர்களிலிருந்து சாதாரண மக்கள் வரை பணத்திற்காக யாரும், எவ்விதக் காரியத்திலும் ஈடுபடத் தயாராகி விட்டார்கள் என்பதைத் தெளிவாக உணரமுடிகிறது. அரசியல்வாதிகள், வியாபாரிகள் மற்றும் அதிகாரிகள் செய்யும் குற்றங்கள் அதிர்ச்சியை ஏற்படுத்தும் காலகட்டத்தை எல்லாம் ஏற்கெனவே கடந்துவிட்டதால், இச்செய்திகள் பெரிய மன அதிர்வை ஏற்படுத்துவதில்லை.

ஆனால் மாணவர்கள் குற்றச் செயல்களில் ஈடுபடுவது தொடர்பாக சமீபத்தில் வரும் செய்திகள்தான் மிகுந்த அதிர்ச்சியூட்டுவதாக உள்ளது. குறிப்பாக, விருநகர் மாவட்டத்தைச் சேர்ந்த ஒன்பதாவது படிக்கும் மாணவன் ஒருவன், தனது நண்பர்களைப் போல் ஜாலியாக வெளியூர் சுற்றுவதற்காகவும், புதிய ட்ரெஸ் வாங்குவதற்காகவும் வீடு வீடாக நகைகளைக் கொள்ளையடித்தான் என்ற செய்தி மிகுந்த மனப்பதட்டத்தை ஏற்படுத்தியது.

கடந்த ஆறு மாத காலத்திற்குள் இது போன்று ஏராளமான செய்திகள். இரண்டு மாதங்களுக்கு முன் சென்னைக் கல்லூரியில் படிக்கும் மாணவர்கள் சிலர் கூட்டாகச் சேர்ந்து, சென்னையில் பைக்குகளைத் திருடி, சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக்கழக மாணவர்களுக்கு விற்றிருக்கிறார்கள். இதில் ஒரு மாணவனின் பெற்றோர் சராசரி நடுத்தர வர்க்க அரசு ஊழியர்கள். செய்தி கேள்விப்பட்டு, போலீஸ் ஸ்டேசனுக்கு வந்த அவர்கள், மகனின் குற்றச் செயல் குறித்துக் கேள்விப்பட்டு, அதிர்ந்துபோய் பையனை ஜாமீனில் கூட எடுக்காமல் சென்றிருக்கிறார்கள்.

அதுபோல் ஒரு தலைமை ஆசிரியரின் மகன் கல்லூரியில் படிக்கும்போது ஆடம்பரச் செலவுகளுக்காக வழிப்பறிக் கொள்ளையில் ஈடுபட்டுக் கைதாகியுள்ளான். ஒரு பொறியியல் கல்லூரி மாணவர்கள், அந்தக் கல்லூரியில் சீட்டு வாங்கிக் கொடுக்கும் புரோக்கர் வேலையில் ஈடுபட்டு, அது தொடர்பாக இன்னொரு கோஷ்டியிடம் மோதல் ஏற்பட்டு பெரிய அடிதடியில் முடிந்திருக்கிறது.

இந்தச் செய்திகள் கூறும் செய்தி என்ன? முன்பு போல் இளம் குற்றவாளிகள் என்பவர்கள் வறுமையினாலும், வளர்ப்புச் சூழலினாலும் விளிம்பு நிலையிலுள்ள சமூகத்திலிருந்து மட்டும் உருவாவதில்லை. நம்மைப் போன்ற சராசரி நடுத்தர வர்க்கத்தைச் சேர்ந்த ஆசிரியர்கள், அக்கௌண்டன்ட்கள், அரசு ஊழியர்கள், தனியார் நிறுவனத் தொழிலாளர்கள், சிறு வணிகர்கள் போன்றவர்களின் பிள்ளைகளும் கூட வழிப்பறிக்கொள்ளை, திருட்டு போன்ற காரியங்களில் இறங்கிவிட்டார்கள் என்பது இந்தக் காலத்தின் அவலங்களுள் ஒன்று.

தெருவில் ஒரு கொலை நடந்தால் கூட எதற்கு வம்பு என்று ஓடி ஒளியும் நடுத்தரக் குடும்பத்திலிருந்து எப்படி இந்தக் குற்றவாளிகள் உருவானார்கள்? படிக்கவேண்டும். படித்த பிறகு ஏதோ ஒரு சுமாரான வேலை கிடைத்து, ஒரு சுமாரான பெண்ணைத் திருமணம் செய்துகொண்டு, ஒரு சுமாரான வீட்டில், ஒரு சுமாரான வாழ்க்கை வாழ்ந்தால் போதும் என்ற கனவுகளுடன் வளர்ந்து வந்த மாணவர் கூட்டம் என்றி-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லிருந்து திருடவேண்டும் என்று நினைக்க ஆரம்பித்தது?

இவர்கள் எல்லாம் வறுமையினாலோ, கல்லூரி / பீஸ் கட்டுவதற்காகவோ, அக்கா, தங்கைக்குத் திருமணம செய்து வைப்பதற்காகவோ இந்தக் குற்றங்களில் ஈடுபடவில்லை. இக்குற்றங்களில் ஈடுபட்டவர்கள் அனைவரும் சொன்ன காரணம் ஒன்றுதான்: ஆடம்பரமாக வாழவேண்டும். பைக், கார், குடி, ரிசார்ட்ஸ், பெண்கள்... என்று சொகுசு வாழ்க்கை வாழவேண்டும் என்ற ஆசைதான், கடைசியில் இவர்களைக் கொள்ளைக்காரர்களாக மாற்றியுள்ளது.

உலகமயமாக்கலின் மறைமுக விளைவுகளில் இதுவும் ஒன்று. உண்மையில் உலகமயமாக்கலின் ஆரம்ப காலகட்டத்தில், ஆங்கில ஊடகங்களின் பாதிப்பில் நானும் ஓபன் மார்க்கெட் எகானமிக்கு ஆதரவாகவே இருந்தேன். இருபது ஆண்டுகள் கழித்து நோக்கும்போது, உலகமயமாக்கலால் பத்து சதவீதத்திற்கும் குறைவான நபர்கள் மட்டுமே பயனடைந்திருக்க... அது நமது மொத்த சமூகத்திலும், தனி மனித வாழ்க்கையிலும் ஏற்படுத்தியிருக்கும் மாபெரும் சீரழிவுகள்தான் இன்று பிரமாண்டமான அச்சுறுத்தலாக உள்ளது.

மாணவர்கள் கொள்ளையில் ஈடுபடுவதற்கான வித்து, பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் சக மாணவர்களாலேயே ஊன்றப்படுகிறது. முன்பு போல் இப்போது மாணவர்கள் கிடையாது. முன்பு மாணவர்களின் வாழ்க்கை என்பது, கொஞ்சம் சிகரெட், எப்போதாவது தண்ணி, கொஞ்சம் கவிதை(?), அரைகுறை கம்யூனிஸ அறிவு, சிறிது காலத்திற்கு சமூகக் கோபங்கள், கட் அடித்துவிட்டு காலைக் காட்சி மலையாளச் சினிமா, சிறிது காதல், சைட் அடித்தல் என்பதோடு முடிந்துவிடும்.

ஆனால் நகரங்களில் இன்று கல்லூரிகளில் படிக்கும் பல மாணவர்களின் வாழ்க்கை முறையைக் கேட்டால் மிகவும் ஆச்சர்யமாக இருக்கிறது. அவர்கள் எப்போதும் செல்/போனை டாப்அப் செய்து செய்து பெண் தோழிகளிடம் பேசிக்கொண்டே இருக்கிறார்கள். பெரிய வர்த்தக வளாகங்களுக்குச் சென்று இஷ்டத்திற்கு செலவழிக்கிறார்கள். பெரிய பார்களில் ரெகுலராகத் தண்ணியடிக்கிறார்கள். ரிசார்ட்ஸ்களுக்குப் பெண்களைத் தள்ளிக்கொண்டு சென்று அனுபவிக்கிறார்கள். அனைத்து வசதியான மாணவர்களும் இப்படிச் செய்வதில்லை என்றாலும், வசதியுள்ள மாணவர்களில் பாதிக்குப் பாதி பேர் நிச்சயம் இது போன்ற காரியங்களில் ஈடுபடுகிறார்கள்.

இது பணம் உள்ளவர்களுக்கு மட்டுமே சாத்தியமாவதால், சுற்றிலுமுள்ள பணமில்லாத மாணவர்கள் தாழ்வு மனப்பான்மைக்கு உள்ளாகிறார்கள். நமது சினிமாக்களும் இளைஞர்கள் என்றால் ஜாலியாகத் தண்ணியடித்துவிட்டு, பெண்களுடன் ஊர் சுற்றுவதுதான் என்ற மாயையை உருவாக்கி வைத்துள்ளதால்,



எப்பாடு பட்டாவது தானும் அந்த இன்பங்களை அனுபவிக்கவேண்டும் என்று துடிக்கிறார்கள். எனவே முதலில் இவர்கள் சிறிதாக வீட்டில் திருட ஆரம்பிப்பார்கள். ஆனால் இவர்கள் ஆடம்பரமாகச் செலவழிக்க நினைப்பதற்கெல்லாம் அது எந்த மூலைக்கு?

நான் விசாரித்த வரையில், சென்னை போன்ற நகரங்களில் ஜாலியாக இருப்பதற்கு இளைஞர்களுக்கு சராசரியாகப் பின்வருமாறு செலவாகிறது. போன் செலவு மாதத்திற்குக் குறைந்த பட்சம் ஆயிரம் ரூபாய். பெண் நண்பர்கள் இருந்தால், அவர்களுக்கு வேறு டாப்அப் செய்யவேண்டும். நல்ல பாரில் வாரத்துக்குக் குறைந்த பட்சம் இரண்டு முறை பீர் அடித்தால் கூட அதற்குக் குறைந்தபட்சம் நானூறு ரூபாய் எடுத்து வைக்கவேண்டும். பெண் நண்பர்களும் பீர் அடித்தால், அவர்களுக்கும் இவர்கள்தான் அழவேண்டும். முதலில் எல்லாம் நட்சத்திர ஹோட்டல் பார்களில்தான் பெண்களைக் காணமுடியும்.

இப்போதெல்லாம் நடுத்தர மக்கள் வரும் பிக்னிக் பிளாஸா போன்ற பார்களில் கூட ஆண்களுடன், பெண்களும் சேர்ந்த வந்து தண்ணீர் அடிக்கும் கண்கொள்ளாக் காட்சியைப் பார்க்கமுடிகிறது (கிராமத்திலிருந்து வந்திருந்த என் நண்பன் ஒருவன் இதைப் பார்த்த அதிர்ச்சியில் விழித்துக்-கொண்டிருக்க... அதில் ஒரு பெண் இவனிடம், "கேன் யு ஹேவ் மேட்ச்பாக்ஸ்?" என்று அவனிடமே சிகரெட்டுக்கு வத்திப்பெட்டி கேட்க... அவனுக்கு ஏறிய போதையெல்லாம் இறங்கிவிட்டது). பிறகு மல்ட்டிப்ளெக்ஸ் தியேட்டர்களில் சினிமா. பெண் தோழிகள் பிக்அப்பானால், ஏதாவது ரிசார்ட்ஸ். குறைந்தபட்சம் மூவாயிரம் ரூபாய் இல்லாமல் ரிசார்ட்ஸ்க்கு செல்லமுடியாது. எனவே நவீன வாழ்க்கை முறை நமக்கு அளித்திருக்கும் சுகங்களை அனுபவிக்க குறைந்த பட்சம் மாதம் பத்தாயிரம் ரூபாயாவது ஒரு இளைஞனுக்குத் தேவைப்படுகிறது. இது குறைந்த பட்சம்தான். நீங்கள் நினைத்தால் சென்னையில் மாதம் பத்து லட்சம் ரூபாய் கூட சுலபமாகச் செலவழிக்கமுடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேலைக்குச் செல்லும் இளைஞர்களுக்குப் பிரச்சினையில்லை. ஆனால் வேலையில் இல்லாத மாணவர்களுக்கு எவ்வாறு பணம் கிடைக்கிறது? நகரங்களில் பெரும்பாலான மாணவர்களின் தாய்-தந்தை இருவருமே வேலைக்குப் போவதால், பிள்ளைகளைக் கவனித்து வளர்க்காத குற்ற உணர்வைத் தணித்துக்கொள்ள பிள்ளைகள் கேட்கும்போது கேள்வி கேட்காமல், பணத்தைத் தருகிறார்கள். அந்தப் பிள்ளைகள் அந்தப் பணத்தை எவ்வாறு செலவழிக்கிறார்கள் என்பதை எல்லாம் யாரும் கண்காணிப்பதில்லை. மேலும் முந்தைய தலைமுறை பெற்றோர்கள் எல்லாம் தங்கள் செல்வச் செழிப்பை வெளிப்படுத்திக்கொள்ள மாட்டார்கள். எவ்வளவு சம்பாரித்தாலும், பெரியதொரு வீட்டில் இருப்பார்களே தவிர, வெளியே அவர்களைப் பார்த்தால் சாதாரணமான மக்களைப் போல்தான் இருப்பார்கள். எவ்வளவோ பெரிய மனிதர்கள் தங்கள் குழந்தைகளை, சராசரி மனிதர்கள் போல் பஸ்களில் பள்ளிகளுக்கு அனுப்பியதைப் பற்றி (நடிகர் சிவகுமார் தனது மகன்களை பஸ்ஸில்தான் பள்ளிக்கு அனுப்புவாராம்.) கேள்விப்பட்டிருக்கிறோம். என்னுடன படித்த ஸ்ரீராம் என்ற நண்பனின் வீட்டிற்குச் செல்லும் வரையிலும் அவன் அவ்வளவு பெரிய பணக்காரன் என்று எனக்குத் தெரியவே தெரியாது.

ஆனால் இப்போதைய உயர் நடுத்தர மற்றும் பணக்கார வர்க்கத்தினரிடையே எக்ஸிபிஷனிஸம் என்பது பெரும் நோயாக உருவெடுத்துள்ளது. கல்லூரிப் படிப்பைக்கூட முடிக்காத பையனுக்கு இருபதாயிரம் ரூபாயில் செல்/போன்... கேட்கும்போது கேட்கும் பணம்... கார்... என்று அனைத்து வசதிகளையும் செய்து தருகிறார்கள். இந்தக் காலத்தில், இவ்வளவு வசதிகளையும் வைத்துக்கொண்டு ஒரு இளைஞன் நல்லபடியாக வளருவான் என்று எதிர்பார்த்தால் உங்களைப் போல் முட்டாள் வேறு யாரும் இல்லை. இவ்வாறு வசதியாக வாழும் சக மாணவர்களைப் பார்க்கும் பிற மாணவர்களுக்கு தாமும் அது போல் வசதியாக செலவழிக்கவேண்டும் என்ற எண்ணம் ஏற்படுகிறது. சிலர் இதற்காகவே படிக்கும்போதே பார்ட் டைம் வேலையில் சேர்ந்து சம்பாரித்து செலவழிக்கின்றனர். இது பரவாயில்லை. ஆனால் அதில் கூட நினைத்த அளவுக்கு எல்லாம் பெரிதாக சம்பாரித்துவிட முடியாது என்ற நிலையில் சிலர் குற்றச் செயல்களிலும் இறங்குவதின் விளைவே நீங்கள் இந்தக் கட்டுரையின் ஆரம்பத்தில் படித்த செய்திகள்.

அடுத்த காரணம், பெற்றோர்களின் கண்காணிப்பின்மை. இந்தக் காலத்தில் பெரும்பாலான தாய், தந்தை இருவருமே வேலைக்குச் சென்றுவிடுகின்றனர். வீடு திரும்ப இரவு ஏழு, எட்டு மணியாகிவிடும். பெரும்பாலான பள்ளி மற்றும் கல்லூரிகள் மதியம் 3 மணிக்கே விட்டுவிடுகிறது. பெற்றோர் வீட்டுக்கு வருவதற்குள் நடுவே நாலு மணி நேரம் லட்டு போல் இருக்கிறது (சே... நமக்கெல்லாம் அந்த சான்ஸ் கிடைக்காம போயிடுச்சு.). இந்த நேரங்களில் தமது பிள்ளைகள் என்ன செய்கிறார்கள் என்பதைப் பலரும் கவனிப்பதில்லை. மேலும் சில வீடுகளில் தாய்மார்கள் வீட்டில் இருந்தாலும் கூட சமூகத்தில் இன்றைய இளைய தலைமுறையினர் எவ்வாறு வாழ்கின்றனர் என்பது குறித்த அறியாமை மற்றும் பிள்ளைகளின் மீதுள்ள அதீத நம்பிக்கையாலும் பிள்ளைகளைச் சரியாகக் கண்காணிப்பதில்லை.

எனது அலுவலக நண்பர் ஒருவர், "வீட்டுல கம்ப்யூட்டர் வாங்கினேன். இன்டர்நெட் வேண்டாம்னேன். ஆனா என் பையன் இன்டர்நெட் இல்லன்னா கம்ப்யூட்டரே வேண்டாம். இன்டர்நெட்லயே கோச்சிங்லாம் சொல்லித் தர்றாங்கன்னனான். சரின்னு போட்டேன், ஆனா எனக்குத் தெரிஞ்சு, நாங்க இருக்கறப்ப அவன் இன்டர்நெட்டே போடுறதே இல்லை. ஆனா பில்லு மட்டும் ஆயிரம், இரண்டாயிரம்னு வருது" என்றார். எனக்கு அப்படியே அந்தாளைத் தூக்கிப் போட்டு மிதிக்கலாமா என்று தோன்றியது. வீட்டிலேயே இன்டர்நெட் கனெக்சனைக் கொடுத்துவிட்டு, ஒரு 18 வயதுப் பையன், படிப்பு சம்பந்தப்பட்ட விஷயங்களை மட்டும் பார்ப்பான் என்று நீங்கள் நினைத்தால் உங்களை என்னத்தச் சொல்ல? நல்லா வருது வாயில. உண்மையில் பிரச்சினை என்னவென்றால், நமது பெரும்பாலான பெற்றோர்களுக்கு தற்போதைய பிள்ளைகள் எதிர்கொள்ளும் சூழல்கள் குறித்த அறிவே சுத்தமாகக் கிடையாது. சிலர் கூறலாம். பத்திரிகைகளில் எல்லாம் நிறைய செய்திகள் வருகிறதே என்று.


அதைப் படிப்பவர்கள் எல்லாம் ஒரு இருபத்தைந்து சதவீதம் இருந்தாலே பெரிய விஷயம். பெரும்பாலான நவீன பெற்றோர்கள், ஒரு செய்தித்தாள் படிக்கும் பழக்கம் கூட இல்லாத, நம்மைச் சுற்றிலும் என்ன நடந்துகொண்டிருக்கிறது என்பதைப் பற்றி எதுவுமே தெரியாத பெற்றோர்கள்தான். திடீரென்று பையனோ, பெண்ணோ புது செல்/போன் வைத்திருப்பார்கள். கேட்டால் நண்பன் இலவசமாகக் கொடுத்தது என்பார்கள். அப்படியே நம்புவார்கள். யாராவது கொடுத்தார்கள் என்றால், யார் கொடுத்தார்கள்? ஏன் கொடுத்தார்கள்? என்றெல்லாம் விசாரிக்கவேண்டும். ஆனால் எதுவும் கிடையாது. ஒரு வேளை ஒரு திருட்டுக் காரியத்தில் ஈடுபட்டுக் கூட அவர்கள் அந்தப் போனை வாங்கியிருக்கக் கூடும். எனவே கண்காணிப்பின்றி வளரும் குழந்தைகளும் திருட்டு மற்றும் பாலியல் தொடர்பான குற்றங்களில் ஈடுபடுவதற்கான வாய்ப்பு இருக்கிறது.

அடுத்து நம் பள்ளிகள் மற்றும் கல்லூரிகள் இன்று எவ்வாறு இயங்குகின்றன என்று பார்ப்போம். நமது பள்ளிகளில் மாரல் ஸ்டடீஸ் என்று ஒரு பாடம் இருக்கிறது. இது பெரும்பாலான பள்ளிகளில் ஐந்து அல்லது எட்டாம் வகுப்போடு முடிந்துவிடுகிறது. அடப்பாவிகளா... மாணவர்கள் கெட்டுப்போவதற்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கான வயது என்பது 13க்கு மேலேதான் ஆரம்பிக்கிறது. ஆனால் அதற்குப் பிறகு மாரல் ஸ்டடீஸே கிடையாது. அதுவும் நவீன குற்றங்கள் அதிகரித்துள்ள இன்றைய காலச் சூழலில்தான் அது மிகவும் அவசியம். விடலைப் பருவத்தில் இருக்கும் மாணவர்களுக்குத்தான் மாரல் ஸ்டடீஸ் என்பது இன்றைய கட்டாயத் தேவை. அவர்களுக்கு இது போன்ற வகுப்புகளில், ஆடம்பர வாழ்க்கை மற்றும் கட்டற்ற சுதந்திரத்தின் பின் விளைவுகள் குறித்தும் எடுத்துக் கூறி, இது மாதிரியான காரியங்களில் ஈடுபடுவதால் ஏற்படும் பின்விளைவுகள் குறித்து விளக்க வேண்டும். ஏனெனில் விடலைப் பருவம் என்பது, செய்யும் காரியங்களின் பின் விளைவுகளை அறியாத வயது. ஆனால் அந்தப் பருவத்தில் அதையெல்லாம் எடுத்துச் சொல்ல இங்கு ஆட்களே கிடையாது.



காலம் மாறிவிட்டது. குற்றங்கள் நடக்கின்றன என்பதற்காக அந்தக் காலத்திலிருந்து நம்மை விடுவித்துக் கொள்ளமுடியாது. ஆனால் குற்றங்களைத் தவிர்த்தாக வேண்டும். என்ன செய்யலாம்?

பெற்றோர்கள், சிறுவயதிலிருந்தே குழந்தைகளிடம் நண்பர்கள் போல் பழகி, அவர்கள் மனதில் உள்ள விஷயங்களைத் தங்களிடம் வெளிப்படையாக விவாதிக்குமாறு பிள்ளைகளை வளர்க்கவேண்டும். அவர்கள் தங்கள் பிரச்சினைகள் கூறும்போது, நீங்கள் அவர்களுக்கு நல்ல முறையில் வழிகாட்டமுடியும்(ஆனால் இவ்வாறு வளர்க்கும்போது நீங்கள் சிற்சில அதிர்ச்சிகளை எதிர்கொள்ளவேண்டியிருக்கும். என் பையன் என்னிடம் /ப்ரியாகத் தினமும் ஒரு ஆங்கில கெட்ட வார்த்தைக்கு அர்த்தம் கேட்கிறான்.).

இன்றைய மாணவர்கள் வளரும் சூழ்நிலை என்பது பத்து, இருபது ஆண்டுகளுக்கு முன்பு இருந்த சூழ்நிலை அல்ல. அவன் உலகமயமாக்கலாலும், நுகர்ப்-பொருள் கலாச்சாரத்தாலும் சீரழிந்து கொண்டிருக்கும் ஒரு சமூகத்திற்கு நடுவே வளர்கிறான். எனவே முன்பு எப்போதையும் விட அதிக வழிகாட்டுதல் தேவைப்படும் காலகட்டம் அது. எனவே தற்போதைய நவீன, ஆடம்பர மற்றும் கட்டற்ற சுதந்திர வாழ்க்கையின் பின் விளைவுகள் குறித்து வீட்டிலும், பள்ளி மற்றும் கல்லூரிகளிலும் அம்மாணவர்களுடன் தொடர்ந்து உரையாடி, அவர்களின் எண்ண ஓட்டங்களைப் புரிந்துகொண்டு, அதற்கு முறையான வழியில் விளக்-கம் கூறி நல்வழிப்படுத்துவதே நமது மாணவர்களைக் குற்றங்களில் ஈடுபடுவதிலிருந்து தடுக்க முடியும்.

வாழ்க்கை அற்புதமான ஒன்று. சக மனிதர்கள் மீது நம்பிக்கை இழப்பு ஏற்படும்போதெல்லாம், அதை மீட்டெடுக்கவென்றே யாரேனும் இருக்கத்தான் செய்கிறார்கள். பணத்திற்காக மாணவர்கள் கூட குற்றங்களில் ஈடுபடும் இன்றைய காலகட்டத்திலும், கையில் குழந்தையுடன் பூ வைக்க சிரமப்படும் இளம் தாய்க்கு, வியாபாரத்தை விட்டு விட்டு பூ வைத்துவிடும் பூக்காரப் பெண்மணிகளும், புரோட்டோக் கடையில் வேலை பார்த்துக்கொண்டே படித்து ஸ்டேட் ரேங்க் வாங்கும் மாணவர்களும், வங்கிகளில் பொறுமையா-கக் கேட்பவர்களுக்கு எல்லாம் சலான் எழுதித் தரும் இளைஞர்களும் இருக்கத்தான் செய்கிறார்கள். இவர்களே மனிதர்கள் குறித்த அவநம்பிக்கையிலிருந்து நம்மை மீட்கிறார்கள்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாண்மைவிருத்தி:
# ஒழுங்கமைத்தலும் மதிப்பிடுதலும்

கதிரேசன் சுவர்ணராஜா



**பாடசாலையை அடிபபடையாகக் கொண்ட ஆசிரியர் வாண்மை விருத்திச் செயற்பாடுகளை ஒழுங்கமைத்தலும், மதிப்பிடலும் சில குறிப்புக்கள்.**

*மாணவர்களின் பெறுபேற்றினை அதிகரிக்கும் காரணிகளில் பாடசாலை மயக்காரணிகள் Schooling Factors அதிக செல்வாக்குச் செலுத்துவதாக கல்வியியலாளர் லொறின் று. அன்டேசன் குறிப்பிடுகின்றார். (ஆசிரியர் விளைதிறனை அதிகரித்தல்-1999)*

*பாடசாலைமயக்காரணிகள் என்பதனுள் பாடசாலையின் தரத்தை முன்னேற்றவதற்கான செலவுகளை அதிகரித்தல், பாடசாலையினதும் வகுப்பறையினதும் ஒழுங்கமைப்பை மாற்றிமைத்தல், மாணவர்க்கு அதிகமானதும் சிறந்ததுமான போதனை உபகரணங்களை வழங்குதல், ஆசிரியர்களுக்கு தரமான வாண்மை விருத்தியை பாடசாலை மட்டத்தில் வழங்குதல் என்பன அடங்குகின்றன.*

இன்று பாடசாலை மட்டத்திலான வாண்மை விருத்திச் செயற்பாடுகள் எமது பாடசாலைகளில் ஒரு முக்கியமான செயற்பாடாக பாடசாலை முகாமைத்துவத்தில் உள்ளடக்கப்பட்டு வருகின்றன. இதற்காக கணிசமான நிதியும் கல்வி அமைச்சினால் ஒதுக்கப்பட்டு வருகின்றது. ஆசிரியர்களின் வாண்மைத்துவம் அதிகரிக்கும் போது பிள்ளைகளின் கற்றலில் ஆழமான விளைவுகள் ஏற்படும் என்ற எதிபார்ப்பின் அடிப்படையில் பாடசாலை மட்டத்திலான ஆசிரியர் வாண்மை விருத்திச் செயற்பாடுகளுக்காக பணமும் காலமும் செலவழிக்கப்படுகின்றன.

*இக்கட்டுரையானது பாடசாலை மட்டத்திலான ஆசிரியர் வாண்மை விருத்திச் செயற்பாடுகளை ஒழுங்கமைத்தல் தொடர்பாகவும், அச்செயற்பாடுகளை மதிப்பிடல் தொடர்பாகவும் சில குறிப்புகளை முன் வைப்பதை நோக்காகக் கொண்டுள்ளது.*

## பாடசாலை மட்டத்திலான ஆசிரியர் வாண்மை விருத்தி

பாடசாலைகளின் பண்புசார் விருத்தி நோக்கிலும், கல்விதுறையின் முழுமையான விருத்திக்காவும் இன்று ஆசிரியர் விருத்திச் செயற்றிட்டங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. இவற்றுள் பாடசாலை மட்டத்திலேயே ஆசிரியர்களின் வாண்மையை விருத்திச் செய்வதற்காக பாடசாலை அதிபரினால் திட்டமிட்டு முன்னெடுக்கப்பட வேண்டிய செயல்திட்டங்களை உள்ளடக்கியது பாடசாலை மட்டத்திலான ஆசிரியர் வாண்மை விருத்தி வேலைத்திட்டமாகும்.


இதன் அடிப்படையில் பாடசாலையை அடிப்படையாக கொண்ட ஆசிரியர் அபிவிருத்தி என்பது மாணவர்களின் கற்றல் செயற்பாடுகளை விருத்திச் செய்வதற்காக பாடசாலைக்குரியவாறு இனங்காணப்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்ட ஆசிரியர் அபிவிருத்தித் தேவைகளுக்காக பாடசாலைகளினால் திட்ட மிட்டு அமுல்நடத்தப்படும் கூட்டுச் சூழலிலுள்ள தொடர்ச்சியான அபிவிருத்திச் செயற்பாடாகும்.

உலகிலுள்ள எல்லா நாடுகளும் இன்று கல்விச் சேவையின் தரத்தை உயர்த்துவதற்கும், கல்விச்சேவைக்காக ஒதுக்கப்படும் பணத்தை வினைத்திறனுள்ளதாக்குவதற்கும் பல்வேறு உபாயங்களையும் நுட்பங்களையும் அறிமுகப்படுத்த முயலுகின்றன. இதனூடாக பாடசாலைகளின் அளவு சார், பண்புசார் தரத்தை உயர்த்துவதற்கு பாடசாலை அதிபர்களினதும் ஆசிரியர்களினதும் வலுவினை, வாண்மைத்துவத்தினை உயர்த்துதல் சிறப்பார்ந்த உபாயமாக இனங்-காணப்பட்டுள்ளன.



அத்துடன் பாடசாலை அதிபர்களினதும் ஆசிரியர்களினதும் வலுவினை, வாண்மைத்துவத்தினை விருத்தியாக்குவதன் ஊடாக அவர்களிடையே சுயஊக்குவிப்பு, சிறந்த முகாமைத்துவ திறன்கள், வகுப்பறைக் கற்பித்தல் திறன்விருத்தி என்பவற்றை விசேடமாக ஏற்படுத்தல் முடியுமென்பது மற்றுமொரு எதிர்பார்ப்பாகும்.

**பாடசாலை மட்டத்திலான ஆசிரியர் வாண்மை விருத்தி செயற்பாடுகளை ஒழுங்கமைத்தலும் மதிப்பிடலும்.**


பாடசாலை மட்டத்திலான ஆசிரியர் வாண்மை விருத்தி செயற்பாடுகளை ஒழுங்கமைத்தலுக்கும் மதிப்பிடலுக்கும் பின்வரும் விடயங்கள் தொடர்பாக கவனஞ் செலுத்துதல் அவசியம்.

1. பாடசாலை மட்டத்திலான ஆசிரியர் வாண்மை விருத்தி செயற்பாடுகளுக்கான ஒரு சட்டகத்தை உருவாக்குதல் வேண்டும். (Frame Work for School based Teacher development)
2. பாடசாலை மட்டத்திலான ஆசிரியர் வாண்மை விருத்தி செயற்பாடுகளுக்கான தேவைக்கணிப்பீடு தொடர்பான கொள்கைகளும் முறைமையும் தயாரிக்கப்படல் வேண்டும் (Need Assessment Policy and Procedures)
3. பாடசாலை மட்டத்திலான ஆசிரியர் வாண்மை விருத்தி செயற்பாடுகளுக்கான ஆலோசனைக்குழு ஒன்று உருவாக்கப்படல் வேண்டும் (Advisory Committe)
4. பாடசாலை மட்டத்திலான ஆசிரியர் வாண்மை விருத்தி செயற்பாடுகளுக்கான நோக்கங்கள், செயற்பாடுகள், தேர்ச்சிகள் என்பன தெளிவாக்கப்படல் வேண்டும் (Objectives)
5. பாடசாலை மட்டத்திலான ஆசிரியர் வாண்மை விருத்தி செயற்பாடுகளுக்கான போதனை உள்ளடக்கம் தயாரிக்கப்படல் வேண்டும். (The instructional Content)
6. பாடசாலை மட்டத்திலான ஆசிரியர் வாண்மை விருத்திச் செயற்பாடுகளுக்கான போதனை செயன்முறை தீர்மானிக்கப்படல் வேண்டும் (Instructional Process)
7. பாடசாலை மட்டத்திலான ஆசிரியர் வாண்மை விருத்தி செயற்பாடுகளுக்கான தேவையானவளவாளர் மற்றும் விசேட நிபுணர்கள் பயிற்றுவிப்பாளர்கள் தெரிவு செய்யப்படல் வேண்டும் (Resource persons, Experts, Trainers)
8. பாடசாலை மட்டத்திலான ஆசிரியர் வாண்மை விருத்தி செயற்பாடுகளுக்கான பின்தொடர் வேலைகள், மீளவலியுறுத்தல்கள், தொடர்பான திட்டங்கள் தயாரிக்கப்படுதல் வேண்டும் (Follow-up and Reinforcement)
9. பாடசாலை மட்டத்திலான ஆசிரியர் வாண்மை விருத்தி செயற்பாடுகள் தொடர்பான தொடர் கலந்துரையாடலுக்கான திட்டம் (Meetings and Discussions) வேண்டும்.
10. பாடசாலை மட்டத்திலான ஆசிரியர் வாண்மை விருத்தி செயற்பாடுகளுக்கான பங்குபற்றுனர் பங்களிப்பு தொடர்பான ஒழுங்குகள் மேற்கொள்ளப்படல் வேண்டும் (Paricipant Contribution)

அ. **பாடசாலை மட்டத்திலான ஆசிரியர் வாண்மை விருத்தி செயற்பாடுகளுக்கான ஒரு சட்டகத்தை உருவாக்குதல் வேண்டும்.** (Frame work for school based teacher development)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



1. பாடசாலைமட்ட ஆசிரியர் வாண்மை விருத்தி வேலைத்திட்டத்திற்காக தயாரிக்கப்படும் சட்டகம் பாடசாலைகளிலுள்ள சகல ஆசிரியர்களினதும் ஆதரவை பெற்றதாக அமைதல் வேண்டும். அத்துடன் ஆசிரியர்களின் வாண்மை விருத்தியை ஏற்படுத்துவதற்கான தரத்தினையும் தகமைகளையும் உள்ளடக்கத்தினையும் கொண்டிருத்தல் வேண்டும்.

இச்சட்டகமானது பாடசாலை மட்டத்தில் சிறப்பான கவின்நிலையை ஏற்படுத்தக் கூடியவாறு தயாரிக்கப்படுதல் அவசியமானதாகும். மேலும் இவ்வாறு தயாரிக்கப்படும் சட்டகம் கல்வி முகாமைத்துவ உயர் மட்டத்தில் ஆதரவினையும் அங்கீகாரத்தையும் பெற்றதாகவும் அமைதல் வேண்டும்.

பாடசாலை மட்ட ஆசிரியர் வாண்மை விருத்தி வேலைத் திட்டத்திற்கான சட்டகம் பின்வரும் விடயங்களை பூர்த்தி செய்யக் கூடியதாக காணப்படுதல் அவசியமாகும்.

அவையாவன:-

1.1 இவ்வேலைத் திட்டத்தின் மூலம் ஆசிரியர்கள் தாம் அடையவிருக்கும் நன்மைகள், பயன்கள் பற்றி தெளிவாக அறிவதற்கான சந்தர்ப்பங்களை உருவாக்கக் கூடியதாக இருத்தல் வேண்டும்.

1.2 இவ்வேலைத் திட்டத்தின் நிகழ்ச்சிநிரல், அதன் உள்ளடக்கம், செயற்பாடுகள், தன்மைகள் பற்றிய தெளிவான விளக்கத்தினை ஆசிரியர்கள் பெறக் கூடிய முறையில் தயாரிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

1.3 இவ்வேலைத் திட்டத்தின் கால அளவு, இடம் பெறும் நாட்கள், இடம்பெறும் இடம், அதற்காக ஆசிரியர்கள் கொண்டிருக்க வேண்டிய முன்னொழுங்குகள் தொடர்பாக அறிவதற்கான முறைகள் பற்றிய தெளிவாக வரையறுத்திருத்தல் அவசியம்.

1.4 இவ்வேலைத் திட்டத்தினை செயற்படுத்தவிருக்கும் முகாமைத்துவக் குழுவின் விபரம், இவ்வேலைத் திட்டத்தின் வளவாளர்கள் விபரம் என்பதை முன்கூட்டியே திட்டமிடப்பட்டு இச்சட்டகத்தில் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

மேலும் பாடசாலை மட்ட ஆசிரியர் வாண்மை விருத்திக்கான வேலைத் திட்டத்தின் சட்டகத்தில் பின்வரும் விடயங்கள் உள்ளடக்கப்படல் சிறப்பானதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1.5 இவ்வேலைத் திட்டத்தில் ஆசிரியர்கள் பங்கேற்பதன் அவசியம், இது உடன்பாடான மனப்பாங்குடன் வலியுறுத்துவதாக அமைதல் வேண்டும். மாறாக ஆசிரியர்கள் மீது திணிப்பதாகவோ அவர்களை இவ்வேலைத் திட்டத்தில் இணைத்துக் கொள்ள வற்புறுத்துவதாவோ அமைதல் கூடாது.

1.6 இவ்வேலைத் திட்டத்தில் ஆசிரியர்களுக்கான ஊக்கமளித்தல் நுட்பங்கள், முறைகள் தெளிவாக குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும். இவ்வாறு தயாரிக்கபட்ட வாண்மை விருத்திக்கான சட்டகமானது ஆசிரியர்களுடனான உணர்வு பூர்வமான கலந்துரையாடலுக்கு உட்படுத்தப் படல் வேண்டும். இதன் மூலம் ஆசிரியர்களின் பங்கு பற்றுதலை உச்சளவில் பெறமுடிவதுடன் வேலைத் திட்டத்தினை நடைமுறைப் படுத்தல் இலகுவாக அமையும்.

**ஆ. பாடசாலை மட்டத்திலான ஆசிரியர் வாண்மை விருத்தி செயற்பாடுகளுக்கான தேவைக்கணிப்பீடு தொடர்பான கொள்கைகளும் முறைமையும் தயாரிக்கப்படல் வேண்டும் (Need assessment Policy and Procedures)**

பாடசாலை மட்ட ஆசிரியர் வாண்மை விருத்தி இவ் வேலைத் திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்கு தேவைக் கணிப்பீடு, அல்லது சாத்தியக் கூற்று ஆய்வு ஒன்று இடம்பெறுதல் அவசியமானதாகும். இதன் மூலம் பாடசாலை மட்ட ஆசிரியர் வாண்மை விருத்திக்கான அவசியம், தேவைகள் என்பவை கண்டறியப்பட்டு அவை முன்னுரிமை அடிப்படையில் ஒழுங்குபடுத்தப்பட முடியும்.

இத்தேவைக் கணிப்பீடானது பின்வரும் இயல்புகளைக் கொண்டிருத்தல் ஆசிரியர்களின் ஆதரவினைப் பெற வழியேற்படுத்தும். தேவைக் கணிப்பீடு சாதரணமான நிலையில் (CASUAL) இடம் பெறுதல் வேண்டும். தேவைக்கணிப்பீட்டிற்காக திட்டமிடப்பட்ட செயற்கைச் சூழல் அமைக்கப்படக்கூடாது.

பாடசாலையின் வலய மட்டத்தில் முன்வைக்கப்படும் விடயங்கள், நியமங்கள் என்பவற்றிற்கேற்ப தேவைக் கணிப்பீட்டினை மேற் கொள்ளலாம். இதற்காக வலய மட்ட, கோட்ட மட்ட கல்விசார் ஆளணியினரின் உதவிகளையும் பெற்றுக் கொள்வது சிறப்பானதாகும்.

பாடசாலை முகாமைத்துவ குழுவினர் மற்றும் நிபுணத்துவமிக்க ஆசிரியர்கள், தேவைப்படின் விசேட ஆலோசகர்களின் உதவியுடன் தேவைக் கணிப்பீடு பகுப்பாய்வு செய்யப்பட்டு, வேலைத்திட்டத்திற்கான உரிய செயற்பாடுகள் தீர்மானிக்கப்படலாம்.

தேவைக் கணிப்பீட்டிற்காக பாடசாலை சார்ந்த கடந்த கால தகவல்கள், புள்ளி விபரங்கள், அறிக்கைகள் என்பவற்றை கட்டாயம் பயன்படுத்தப்படல் வேண்டும்.

**இ. பாடசாலை மட்டத்திலான ஆசிரியர் வாண்மை விருத்தி செயற்பாடுகளுக்கான ஆலோசனைக்குழு ஒன்று உருவாக்கப்படல் வேண்டும (Advisory committe)**

ஆலோசனைக் குழுவொன்றை அமைத்து பாடசாலை மட்டத்திலான ஆசிரியர் வாண்மை விருத்தி வேலைத் திட்டங்களை நெறிப்படுத்துதல் வேண்டும். இவ் ஆலோசனைக் குழுவானது ஆசிரியர்களின் பங்கு பற்றுதல்களையும், வாண்மை விருத்தி வேலைத் திட்டத்தின் தரத்தினையும் உறுதிப்படுத்த உதவியாக அமைதல் வேண்டும். இவ் ஆலோசனைக் குழுவானது பாடசாலையினுள் உள்ள அங்கத்தவர்களையும், பாடசாலைக்கு வெளியிலிருந்தான நிபுணர்களையும் உள்ளடக்கியதாக அமையலாம்.

**ஈ. பாடசாலை மட்டத்திலான ஆசிரியர் வாண்மை விருத்தி செயற்பாடுகளுக்கான நோக்கங்கள், செயற்பாடுகள், தேர்ச்சிகள் என்பன தெளிவாக்கப் படல் வேண்டும் (Objectives)**

பாடசாலை மட்ட ஆசிரியர் வேலைத் திட்டமானது தெளிவான கற்றல் நோக்கங்களையும், அதனை கணிப்பீடு செய்வதற்கான நியமங்களை உள்ளடக்கி காணப்படுதல் வேண்டும்.

பொதுவாக பின்வரும் விடயங்களை கருத்திற் கொண்டு வேலைத் திட்டத்திற்கான நோக்கங்கள் அமைக்கப்படலாம்.

1 வேலைத் திட்டத்தில் அடங்கும் ஒவ்வொரு செயற்பாட்டிற்கும், நோக்கங்களுக்கும், பாடத்திட்டமும், மதிப்பிடுவதற்கான நியமங்களும் முற்கூட்டியே தீர்மானிக்கப்பட்டிருத்தல் வேண்டும்

2 வரையறுக்கப்பட்ட நோக்கங்களும், மதிப்பீட்டு நியமங்களும், தயாரிக்கப்பட்ட பாடத்திட்டமும், தேவைக் கணிப்பீட்டில் இனங்காணப்பட்ட வாண்மை விருத்தி தேவைகளோடு நெருக்கமான தொடர்புற்றிருத்தல் வேண்டும்.

3 ஒவ்வொரு வேலைத் திட்டத்தின் போதும், அல்லது செயற்பாட்டின் போதும் அவ்வேலைத் திட்டத்தின் நோக்கங்கள், உள்ளடக்கம், மதிப்பிடும் முறைகள் பற்றி எழுத்து மூலமான அறிவித்தல் பங்குபற்றுனராகிய ஆசிரியர்களுக்கு வழங்கப்படுதல் வேண்டும்.

4. வாண்மை விருத்தி வேலைத் திட்டத்திற்கு முன்னரான ஆசிரிய தேர்ச்சிகளை, வேலைத் திட்டத்திற்கு பின்னரான தேர்ச்சிகளுடன் ஒப்பிட்டுப் பார்ப்பதற்கான திட்டமொன்று கட்டாயம் காணப்படல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ. பாடசாலை மட்டத்திலான ஆசிரியர் வாண்மை விருத்தி செயற்பாடுகளுக்கான போதனை உள்ளடக்கம் தயாரிக்கப்படல் வேண்டும். (The Instructional Content)

பாடசாலை மட்ட ஆசிரியர் மட்ட வாண்மை விருத்திக்கான போதனை உள்ளடக்கமானது தரம் வாய்ந்ததாகவும், செழுமையானதாகவும் அமைதல் வேண்டும். அத்துடன் தேசிய மட்ட குறிக்கோள்களுக்கு ஏற்புடையதாகவும் அமைதல் வேண்டும். ஆசிரியர்களின் உயர்நிலைப்பட்ட சிந்தனையை துண்டுவதாகவும் அமைதல் வேண்டும். மேலும் போதனை உள்ளடக்க விருத்திக்காக பின்வரும் ஏற்பாடுகள் காணப்படல் வேண்டும்.

1. உரிய கையேடுகள், ஆவணங்கள் என்பன வழங்கப்படல் வேண்டும். அவை தரமானதாகவும் உரிய இலக்குகளை அடைவற்கு பொருத்தமானதாகவும் காணப்படல் வேண்டும்.
2. வழங்கப்படும் உள்ளடக்கம் நவீனமானதாகவும், இற்றைப்படுத்தபட்டதாகவும் (UPDATE) ஆசிரியர்களின் கற்றல் ஆர்வத்தை துாண்டுவதாகவும் அமைதல் வேண்டும்.
3. வாண்மை விருத்தி வேலைத் திட்டத்தின் உள்ளடக்கமானது ஆசிரியர்களால் இலகுவாக விளங்கக் கூடியதாகவும், கற்றதை வகுப்பறைகளில் பிரயோகிக் கூடியதாகவும் காணப்படல் வேண்டும்.

ஊ. பாடசாலை மட்டத்திலான ஆசிரியர் வாண்மை விருத்திச் செயற்பாடுகளுக்கான போதனை செயன்முறை தீர்மானிக்கப்படல் வேண்டும் (Instructional Process) வாண்மை விருத்தி வேலைத் திட்டத்தின் போதனை முறை வளர்ந்தோருக்கான கற்றல் கோட்பாடுகளை பின்பற்றியதாக அமைதல் வேண்டும். அத்துடன் வினைத்திறன்மிகு போதனை நுட்பங்களை உள்ளடக்கியதாகவும் அமைதல் வேண்டும். பொதுவாக வாண்மை விருத்திக்கான போதனை செயன்முறை பின்வரும் இயல்புகளை கொண்டிருத்தல் வேண்டும்.

1. போதனை செயன்முறை பெருமளவில் முன் வைப்பு, மாதிரியாக தொழிற்படுதல், செய்து காட்டுதல், செயன்முறைகள் பரிச்சயம், பின்னூட்டல், பயிற்சியளித்தல், பிரதிபலிப்பு முறையில் கற்றல் என்பன போன்ற கற்றல் நுட்பங்களை உள்ளடக்கியிருத்தல் வேண்டும்.
2. பாடசாலைகளிலுள்ள கற்றல் கற்பித்தல் சார் வளங்கள், தர உள்ளீடுகள் என்பவற்றை வாண்மை விருத்தி செயற்பாட்டிற்காக பயன்படுத்த பாடசாலை முகாமைத்துவம் உதவுதல் வேண்டும்.
3. வேலைத் திட்டமானது ஆசிரியர்கள் தமக்கு தேவையான விடயங்களை தேடிப் பெற்றுக் கொள்வதை ஊக்குவிப்பதை அடிப்படையாக கொண்டிருத்தல் வேண்டும்.



4. வேலைத் திட்டம் தேவையான அளவு காலத்தை கொண்டிருத்தல் வேண்டும். தேர்ச்சிகளை முழுதாக அடையக் கூடிய வகையில் வேலைத்திட்டத்தின் அளவு காணப்படுதல் வேண்டும்.
5. வேலைத்திட்டத்தின் இடையில் வேலைத்திட்டத்தின் வினைத்திறனை மதிப்பிடுவதற்கான திட்டம் காணப்படுதல் வேண்டும்.
6. வேலைத்திட்டமானது ஆசிரியர்களின் செயலாற்றுகையை மதிப்பீட்டுடன் இணைந்ததாகவும் அமைதல் வேண்டும்.

எ. பாடசாலை மட்டத்திலான ஆசிரியர் வாண்மை விருத்தி செயற்பாடுகளுக்கான தேவையான வளவாளர் மற்றும் விசேட நிபுணர்கள் பயிற்றுவிப்பாளர்கள் தெரிவு செய்யப்படல்வேண்டும் (Staff Development Trainers)

பாடசாலைமட்ட ஆசிரியர் விருத்தி செயற்திட்டத்தின் வளவாளர்கள் அதிதிறமை வாய்ந்தவர்களாகவும் குறிக்கப்பட்ட துறையில் சிறந்த கற்றல் பின்னணியும், நிறைய அனுபவங்களை உடையவராகவும் இருத்தல் வேண்டும். அத்துடன் பங்குபற்றுனர்களுடன் இணைந்து பணியாற்றும் மனப்பாங்கு உடையவர்களாகவும் காணப்படல் வேண்டும்.

மேலும் பின்வரும் விசேட தன்மைகளையும் வாண்மை விருத்திக்காக வளவாளர்கள் கொண்டிருக்க வேண்டும்.

1. வேலைத்திட்டத்தின் கற்பித்தல் உள்ளடக்கம் தொடர்பாக சிறப்பான முன்னாயுத்தமும் நிபுணத்துவமும் கொண்டிருத்தல்
2. பங்குபற்றுனர்களின் அனுபவங்கள், அவர்களது எதிர்பார்ப்புக்கள், அவர்கள் எதிர்நோக்கும் பிரச்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சினைகள் பற்றிய அக்கறை கொண்டவராகவும், அவை தொடர்பான முன்னுரைப்பு கொண்டவராகவும் காணப்படுதல் அவசியமான ஒரு தகமையாகும்.

3. வளவாளர் தன்னம்பிக்கையுடன் ஆசிரியர்களை நோக்குபவராகவும், தமது அனுபவங்களினூடாக பங்குபற்றுனர்களின் ஈடுபாட்டினை படிப்படியாக அதிகரிக்கும் வல்லமை கொண்டவராக இருத்தல் வேண்டும்.

4. வளர்ந்தோருக்கான கற்றல் கொள்கைகள் பற்றிய பரீச்சயமும் அதனை பிரயோகிக்கக் கூடிய திறனும் உடையவராக இருத்தல் வேண்டும்.

5. சுயமாக வாண்மை விருத்தி திட்டங்களை தயாரிக்கக் கூடியவராகவும், தேவைப்படுமிடத்து ஏற்கனவே முன்வைக்கப்பட்ட திட்டங்களில் மாற்றங்களை ஏற்படுத்தக் கூடியவராகவும் இருத்தல் வேண்டும்.

6. வளவாளர் முன்மாதிரியாக தொழிற்படுதல், பின்னூட்டல் வழங்கல், பயிற்சியளித்தல் போன்ற கற்றல் உபாயங்களில் நன்கு தேர்ச்சி பெற்றவராக இருத்தல் வேண்டும்.

7. நெகிழ்வு தன்மை உடையவராகவும், சுய எண்ணக்கரு விருத்தி உள்ளவராகவும் வளவாளர் காணப்படுதல் வேண்டும்.

**ஏ. பாடசாலை மட்டத்திலான ஆசிரியர் வாண்மை விருத்தி செயற்பாடுகளுக்கான பின்தொடர் வேலைகள், மீளவலியுறுத்தல்கள், தொடர்பான திட்டங்கள் தயாரிக்கப்படுதல் வேண்டும் (Follow-up and Reinforcement)**

பாடசாலைமட்ட ஆசிரியர் வாண்மை விருத்தி தொடர்பாக ஏற்கெனவே தயாரிக்கப்பட்ட கொள்கைகள், முறைமைகள், நிகழ்ச்சித் திட்டங்கள் என்பன தொடர்ச்சியாக கலந்துரையாடலுக்கு உட்படுத்தப்படல் வேண்டும்.

1. திட்டத்தின்படி நடைமுறைப்படுத்தப்பட்ட வேலைத்திட்டத்தை முறையாக மதிப்பீடு செய்தல் அது தொடர்பான பின்னூட்டல்களை முன் வைத்தல்

2. செயற்பாடுகளில் பங்குபற்றிய ஆசிரியர்களின் சுய மதிப்பீடுகளை பகுப்பாய்வு செய்து பெறுபேறுகளை நோக்கல்.

3. இதுவரை நடந்த செயற்பாடுகளுக்கு தரமிடுதல் போன்றன தொடர் கலந்துரையாடலுக்கு உட்படுத்த வேண்டிய மேலதிக விடயங்களாகும்.

**ஐ. பாடசாலை மட்டத்திலான ஆசிரியர் வாண்மை விருத்தி செயற்பாடுகள் தொடர்பான தொடர் கலந்துரையாடலுக்கான திட்டம் (Meetings and Discussions)** இதில் வாண்மை விருத்தி செயற்பாடுகள் தொடர்பாக காலத்திற்கு காலம் பின் தொடர் செயற்பாடுகளும், மீளவலியுறுத்தல்களும் இடம்பெறுதல் அவசியம்.

1. பின்தொடர் செயற்பாடுகளையும், மீளவலியுறுத்தல்களையும் வழங்குவதற்கு நன்கு திட்டமிடப்பட்ட ஒரு முறைமை காணப்படல் வேண்டும்.

2. வேலைத்திட்டங்கள் மூலம் வழங்கப்பட்ட விடயங்கள், கற்பிக்கப்பட்ட, கலந்துரையாடப்பட்ட விடயங்கள் வகுப்பறைகளில் நடைமுறைபடுத்தப்படுகிறதா?

இது தொடர்பான மேலதிக செயற்பாடுகள் எவை என தேடிப்பார்த்தல் வேண்டும்.

9. பொருத்தமான இடங்களில் மீளவலியுறுத்தல்கள் வழங்கப்பட்டு, வாண்மை விருத்தி செயற்பாடுகள் முன்வைக்கப்பட்ட விடயங்கள் நடைமுறைப்படுத்தப்படுவதை ஊக்குவித்தல் வேண்டும்.

**ஒ. பாடசாலை மட்டத்திலான ஆசிரியர் வாண்மை விருத்தி செயற்பாடுகளுக்கான பங்குபற்றுனர் பங்களிப்பு தொடர்பான ஒழுங்குகள் மேற்கொள்ளப்படல் வேண்டும் (Participant Contribution)**

வாண்மை விருத்தி நிலைப்பாடுகளில் பங்குபற்றிய ஆசிரியர்களின் வேலைத்திட்டத்திற்குப் பின்னரான தமது கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளை விருத்தியாக்குவதன் ஊடாக தமது பங்களிபை வெளிப்படுத்தலாம். பொதுவாக பின்வரும் வகையில் ஆசிரியர்களின் பங்களிப்பை நோக்கலாம்.

1. ஒப்படைகள் வழங்கி அதன் மூலம் ஆசிரியர்களின் பங்களிப்பினை மதிப்பிடலாம்.

2. விசேட செயற்றிடங்களை ஆக்கி அதன் மூலம் தமது வாண்மை விருத்தியினை வெளிப்பிடுத்த ஆசிரியர்களுக்கு வாய்ப்புக்கள் வழங்கலாம்

3. பாடசாலையின் நாளாந்த செயற்பாடுகளில் ஆசிரியர்களின் வாண்மை விருத்திக்கு பின்னரான பங்களிப்பு பற்றி கலந்துரையாடல்

4. ஆசிரியர்களின் வகுப்பறைக் கற்பித்தலின் ஊடாக மாணவர்கள் வெளிப்படுத்தும் அடைவினை மதிப்பீடு செய்தல்.

5. ஆசிரியர்களை சுயமதிப்பீட்டிற்கு உள்ளாக்குதல் வேண்டும்.

பாடசாலை மட்டத்திலான ஆசிரியர் வாண்மை விருத்தி செயற்பாடுகள் தொடர்பாக இடம் பெற வேண்டிய ஒழுங்கமைப்பு , மதிப்பீடு தொடர்பாக மேலே முன்வைக்கப்பட்ட விடயங்களை கிரமமாக பின்பற்றுதல் பாடசாலை மட்ட வாண்மை விருத்திச் செயற்பாடுகளின் தரவிருத்திக்கும் பயன்தரு தன்மைக்கும் உதவியாக அமையும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலை மட்டத்தில் செயற்றிட்டங்களை இனங்காணல்



சு.பரமானந்தம்



ஆசிரியரின் தரம் என்பது தனிமனித கல்வித்தகமைகளுக்கப்பால் மனிதப்பண்புகளிலும் மனித விழுமியங்களிலுமேயே தங்கியுள்ளது. ஆசிரியர் ஒருவர் மாணவர்களின் மனதில் நிலைத்து நிற்கின்றார் என்றால் அது கடவுள் வரத்தினாலோ அல்லது யாதேனுமொரு அதிசயத்தியினால் ஆசிரியர் இவ் வல்லமையைப் பெற்றதாகக் கருத முடியாது. மாறாக மாணவர் இயலுமையை இனங்கண்டு இயலுமானவரை உதவிசெய்து கற்றல் கற்பித்தலை விருப்புக்குரிய செயற்பாடாக மாற்றியமைத்தமையையே பிரதான காரணமாகக் கொள்ளலாம்.

இன்று பாடசாலைக்கல்வியின் வினைத்திறனையும் விளைதிறனையும் அதிகரிக்க பல்வேறுவகையான முன்னெடுப்புக்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதில் பிரதானமாக செயல் நிலை ஆய்வையும் செயற்திட்ட முறையினையும் குறிப்பிடலாம். பாடசாலையில் காணப்படும் ஒரு நிலமை மாற்றத்திற்குரியது என்பதை உணர்ந்து கொள்ளும் ஒருவர் அதனை ஆய்வு ரீதியிலான ஒரு செயற்றிட்டத்தின் மூலமோ அல்லது செயற்றொடர் ஆய்வின் மூலமோ தீர்த்துக்கொள்ள முடியும்.

பாடசாலைகளில் காணப்படும் நிர்வாகம் சார்ந்த பிரச்சினைகளுக்கும் கற்றல் கற்பித்தல் தொடர்பான பிரச்சினைகளுக்கும் அந்த நிறுவனத்தினுள்ளேயே தீர்வை காண முனைதலே இதன் கருப் பொருளாக அமைகின்றது. அதாவது பிரச்சினைகளை வலய, மாவட்ட அல்லது தேசிய ரீதியில் பொதுமைப்படுத்தாமல் பாடசாலை அல்லது நிறுவன மட்டத்திலேயே காணப்படும் இயங்குநிலையில் தீர்வைக் காண முற்படுதலாகும். இவற்றின் அடிப்படையிலேயே இப்போது பாடசாலை மட்டத்திலான கணிப்பீடு, பாடசாலை மட்ட வாண்மை விருத்தி, பாடசாலைமட்ட ஆசிரியர் அபிவிருத்தி, பாடசாலைமட்ட விசேட செயற்றிட்டங்கள் போன்ற செயற்பாடுகளில் அதிக கவனஞ் செலுத்தப்பட்டு வருகின்றது.

இன்று கல்விப்புலத்திலுள்ள சகலரிடமும் எதிர்பார்க்கப்படும் நிலைமாறும் நவீன வகிபங்கினை வெற்றிகரமாக நிறைவேற்றிக்கொள்வதற்கு செயல் நிலை ஆய்வும் செயற்றிட்டங்களும் பெரும் துணை புரியும் என்பது வெளிப்படையாகும். கோட்பாடுகளுக்கும் கொள்கைகளுக்கும் முன்னுரிமை கொடுத்து கொள்கை ரீதியிலான சிந்தனையில் இருந்து விடுபட்டு செயல் ரீதியான சிந்தனைகளுக்கு முக்கியத்தவம் வழங்கப்படுதல் இவற்றின் சிறப்பாகும். இக்கட்டுரையானது பாடசாலை மட்டத்தில் செயற்றிட்டங்களை திட்டமிடுதல், நடைமுறைப்படுத்தல் தொடர்பான சில விடயங்கள் மீது கவனஞ்செலுத்தப்படுகின்றது.

*1. செயற்றிட்டம்:*

பயன்பாட்டுவாத கல்வியியலாளர், ஜோன் டூயியின் சிந்தனையில் உதித்த இத்திட்டமானது எல்லா வகையிலான பிரச்சினைகளுக்கும் செயற்பாடு மூலமாக கிடைக்கும் அனுபவம் ஒரு சிறந்த தீர்வாக அமையும் எனக்கருதப்படுகின்றது. செயற்றிட்டங்கள் கற்றல் கற்பித்தலில் அதிக செல்வாக்குப் பெற்றுவரினும் தற்போது செயற்றிட்டங்கள் மூலம் பிரச்சினைகளை விடுவிப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு பாடசாலையோடு சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் அப்பாடசாலையைப் பொறுத்தவரையில் விசேடமானவையாகும். ஒரு வகுப்பாசிரியர் அல்லது பாட ஆசிரியர் இவ்வாறான பிரச்சினைகளை விசேட குறிக்கோளாக்கி அவற்றினை விசேட செயற்றிட்டங்களாக கல்வி அபிவிருத்திச் செயற்பாடுகளுக்கு உதவுதல், வாண்மை விருத்தி, கலைத்திட்ட அபிவிருத்தி, பௌதீக வளங்களின் அபிவிருத்தி, முகாமைத்துவ திறன் விருத்தி போன்ற நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு செயற்றிட்டங்களை திட்டமிட்டுக் கொள்ளலாம்.

உதாரணமாக கல்வி (கற்றல் கற்பித்தல்) சார்பான செயற்றிட்டங்கள், சமூகஞ்சார்பான செயற்றிட்டங்கள் பௌதீக வளங்களின் விருத்தி, பாவனை தொடர்பான செயற்றிட்டங்கள், ஆளுமை விருத்தி சம்பந்தமான செயற்றிட்டங்கள், நிர்வாகம் தொடர்பான செயற்றிட்டங்கள் என பல்வேறு நோக்கங்களையும் இலக்குகளையும் அடிப்படையாகக் கொண்டு செயற்றிட்டங்களை மேற்கொள்ளலாம். அதாவது ஒரு விசேட தேவைக்காக அல்லது விசேட குறிக்கோள் ஒன்றையோ அல்லது பலவற்றையோ அடைவதற்காக திட்டமிட்டு இலக்கை அடையும் வரை மேற்கொள்ளப்படுகின்ற செயற்பாடுகளே செயற்றிட்டங்களாகும். அதாவது பிரச்சினைக்கான காரணிகள், நோக்கங்கள் அல்லது குறிக்கோள்கள் இங்கு தெளிவாக வரையறுக்கப்பட்டிருத்தல் வேண்டும். வேறொரு வகையில் கூறுவதாயின் பிரச்சினை தீர்வுக்காக இலகுவழியொன்றைக் கண்டுபிடித்து திட்டமிட்டு செயற்படுத்துவதே செயல் திட்டமாகும்.

**2. செயற்றிட்டங்களின் முக்கியத்துவம்.**

ஆசிரியர் உரிமைகள் மற்றும் கடமைகள் தொடர்பான யுனெஸ்கோ விதப்புரைகளில் பின்வருமாறு கூறப்பட்டுள்ளது.


"ஆசிரியர் பெறுமதியான விசேட வல்லுனர் ஆகையால் அவரது நேரமும் ஊழியமும் விரயமாகாதவாறு பணிகள் ஒழுங்குபடுத்தப்பட்டு அவற்றுக்கு உதவிகளும் வழங்கப்படடல் வேண்டும்."

(85ஆம் சரத்து)

"தம் தொழில் மகத்துவம் பெரும்பாலும் ஆசிரியர்கள் மீதே தங்கியிருக்கின்றது. என்பதை ஏற்று அனைத்து ஆசிரியர்களும் தம் அனைத்து தொழில் சார் நடவடிக்கைகளின் போதும் இயன்றவரை உயரிய அளவினைப் பெற்றுக்கொள்ள முயலுதல் வேண்டும்"

(70 ஆம் சரத்து)

மேற்கூறப்பட்ட சரத்துக்களின் அடிப்படையில் ஆசிரியர் ஒருவர் கல்வியியல் தொடர்பான செயற்றிட்டங்களை திட்டமிடவும் செயற்படுத்தக்கூடியதுமான திறன்களை பெற்றிருப்பதுடன் அவற்றை மேம்படுத்திக் கொள்ள வேண்டிய நுட்பமுறைகளையும் இனங்காணவும் வலியுறுத்தப்படுகின்றது. குறிப்பாக சிறப்பான



தேர்ச்சிகளினூடாக நேரம் உட்பட அனைத்து வளங்களிலிருந்தும் உச்சப்பயனைப் பெறுதல், கல்வி இலக்கினை அடைந்து கொள்வதற்காக தொழில் ரீதியிலான உச்ச அளவினை அடைதல், இதற்காக ஆசிரியர் கல்வி தொடர்பான செயற்றிட்டங்களை இனங்காணவும், அவற்றை ஒழுங்கு செய்து அமுல்படுத்தக்கூடிய தேர்ச்சியினையும் பெற்றிருத்தல் அவசியமாகும்.

உதாரணமாக பாடசாலையில் கலைத்திட்ட விருத்தியில் காணப்படும் பல்வேறு பிரச்சினை தொடர்பாக அவதானத்தின் அடிப்படையிலும் தரவுப்பகுப்பாய்வின் முடிவுகளிலும் இருந்து எவ்வாறு ஒரு செயற்றிட்டத்தினை ஆக்குதல் என்பதைக் கவனிப்போம்.

- குறித்த பாடத்தில் மாணவர் அடைவு மட்டம் திருப்தியற்றுக் காணப்படுதல்.
- வகுப்பில் மாணவர் வரவு குறைவாக காணப்படுதல்.
- வாசிப்பு சார்ந்த திறன்கள் குறைவாகக் காணப்படுதல்
- எழுத்து திறன்கள் குறைவாகக் காணப்படுதல்
- கற்றலில் பிள்ளைகளின் ஆர்வம் குறைந்து செல்லுதல்
- வகுப்பறை ஒழுங்குகள் குறைந்து செல்லுதல்
- பாடசாலை சுற்றாடல் கவர்ச்சியற்றுக் காணப்படுதல்
- வகுப்பறைச் சுவர்கள் அழுக்கடைந்து காணப்படுதல்
- வகுப்பறைகள் போதிய ஒளி வசதியற்றுக்காணப்படுதல்

போன்ற பல்வேறு பிரச்சினைகள் பாடசாலை மட்டங்களில் காணப்படலாம். மேற்படி செயற்றிட்டங்களை முறைசார் கலைத்திட்ட செயற்றிட்டம், முறையில் கலைத்திட்ட செயல் திட்டம் என வகுத்துக்கொள்ளலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுவாக குறிப்பான பாடம் சம்பந்தமானவற்றை முறைசார் எனவும், (உ-ம்: தரம் 8 மாணவர்களின் ஆங்கில பாட அறிவை 10% அல்மேம்படுத்தல், தரம் 4 மாணவர்களின் எழுத்து திறனை 25% ஆல் விருத்தி செய்தல்) ஏனையவற்றை முறையில் கலைத்திட்ட செயற்பாடுகள் (மாணவர் ஆக்கங்களைக் கொண்ட கண்காட்சி, பாடசாலை ஆரம்பமாக முன்னர் பாடசாலைச் சூழலை சுத்தம் செய்தல்) எனவும் வழங்கப்படுகின்றது.

| பிரச்சினை | குறிக்கோள் |
|---|---|
| 1. பெரும்பாலான பிள்ளைகள் கணிதத்தில் சித்திபெறத்தவறுதல் | 1. பிள்ளைகள் அனைவரையும் கணிதபாடத்தில் சித்தி பெறச் செய்தல் |
| 2. அன்றாடம் கவலைதரும் சம்பவங்கள் அதிகரித்தல் | 2. மகிழ்ச்சியான கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு |

அட்டவணை 1: பிரச்சினைகளும் குறிக்கோள்களும்

குறிக்கோளினை அடைய முடியாதிருத்தல் பிரச்சினையாகும். இவ்வாறு காணப்படும் நிலைமைகளை நிவர்த்தி செய்தல் ஆசிரியர்களின் கைகளிலேயே தங்கியுள்ளது. பரீட்சைகளில் சித்திபெறத் தவறுதல் என்பது இன்று நியதி என்று சிந்திக்க முற்படுவது வழமையாகிவிட்டது.

தீர்வு உண்டு என்ற உறுதியான நம்பிக்கையுடன் செயற்பட்டதனாலேயே இன்று மனிதவர்க்கம் இவ்வளவு முன்னேறியுள்ளது எனலாம். அவ்வாறே ஆசிரியர்களும் தீர்வினை அல்லது மாற்று வழிகளைக் இனங்கண்டு மாற்றங்களை ஏற்படுத்தலாம் என்ற மன உறுதியுடன் செயற்படுத்துவதன் மூலம் குறிக்கோளினை எய்துவதற்கான வழிகளை மிக இலகுவாக அடையக்கூடியதாக இருக்கும்.

| குறிக்கோள் | பிரச்சினைக்கான காரணங்கள் | தீர்வுகள் |
|---|---|---|
| 1. பிள்ளைகள் அனைவரையும் கணிதபாடத்தில் சித்தி பெறச் செய்தல் | 1. அடிப்படை எண்ணக் கருவை விழங்காதிருத்தல் | ............... |
| | 2. ஆசிரியரின் மரபுரீதியிலான கற்பித்தல் | ............... |
| | 3. பிள்ளைகளின் செயற்பாடுகள் மீது அவதானக்குறைவு | ............... |
| | 4. வெளிவாரியான உதவிகள் குறைவாகக் கிடைத்தல் | ............... |
| 2. மகிழ்ச்சியான கற்றல் கற்பித்தல் செயலொழுங்கை ஏற்படுத்தல் | 1. மாணவர் கற்றலில் ஆர்வம் குறைவு | ............... |
| | 2. மாணவர் செயற்றிறன் குறைவு | |
| | 3. மாணவரிடையே ஒற்றுமை குறைவு | ............... |
| | 4. பாரம்பரிய கற்பித்தல் முறைமைகள் | ............... |
| | 5. மாற்றங்களை உள்வாங்கும் மனப்பாங்கு குறைவு | ............... |

அட்டவணை 2: குறிக்கோள்களும் பிரச்சினைக்கான காரணங்களும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒவ்வொரு பிரச்சினைகளுக்கும் பல்வேறு காரணங்கள் காணப்படும். அவ்வாறே பல தீர்வுகளும் காணப்படலாம். அதற்கான காரணங்களையும் தீர்வுகளையும் குறித்த பாடசாலையில் கற்றல் செயற்பாடுகளில் ஈடுபடும் ஆசிரியர்களினாலேயே தீர்மானிக்கப்படும்.

அதேவேளை பிரச்சினைக்கான காரணங்கள் யார், என்ன என்பதை திட்டவட்டமாக வரையறை செய்து கொள்ளுதல் அவசியமாகும். ஏனெனில் பிரச்சினை மாணவர் சார்பானதாகவோ, ஆசிரியர் சார்பானதாகவோ அல்லது நிர்வாகம் சார்பானதாகவோ காணப்படலாம். எனினும் சமீபகால ஆய்வுகள் ஆசிரியர் திறன் விருத்தியிலேயே அதிக அக்கறை காட்டிவருவதை அவதானிக்கலாம்.

செயல் திட்டங்களுக்கான மூலக்கரு பிரச்சினைக்கு ஆதாரமான காரணங்களிளேயே உள்ளதை நாம் அறியலாம். சரியான அவதானத்தின் மூலமோ தரவுப் பகுப்பாய்வுகள் மூலமோ பிரச்சினைக்குரிய சரியான காரணத்தை கண்டறிந்தால் செயல் திட்டத்திற்கான விசேட குறிக்கோள்களை இலகுவாக ஆக்கி செயற்பாடுகளை முன்னெடுக்கலாம். உதாரணமாக:

| காரணங்கள் | விசேட குறிக்கோள்கள் |
|---|---|
| அடிப்படை எண்ணக் கருவை விளங்காதிருத்தல் | இவ்வாறான பிள்ளைகளை இனங்கண்டு எண்ணக்கருவிருத்தியினை மேம்படுத்தல் |
| ஆசிரியரின் மரபுரீதியிலான கற்பித்தல் பிள்ளைகளின் செயற்பாடுகளின் மீது அவதானக்குறைவு | ஆசிரியர் நவீன கற்பித்தல் முறையினை மேற்கொள்ளல் தனியாள் சார்ந்த கற்பித்தல் முறையை மேம்படுத்துதல் |
| மாணவர் செயற்றிறன் குறைவு | செயற்றிறன் மிக்க கற்பித்தல் முறைகளை மேம்படுத்தல் (உ-ம்: விளையாட்டுமுறை) |

அட்டவணை 3: பிரச்சினைக்கான காரணங்களும் விசேட குறிக்கோள்களும்

மேற்சொன்ன உதாரணங்களில் இருந்தும் ஒரு பிரச்சினைக்கு ஒன்றிற்கு மேற்பட்ட காரணங்களும் தீர்வுகளும் காணப்படுகின்றன. பிள்ளைகள் அனைவரையும் சித்திபெறச் செய்தல் என்னும் பிரச்சினைக்குரிய காரணங்கள் நான்கு இனங்காணப்பட்டு அவற்றுக்கான தீர்வுகளும் (விசேட குறிக்கோள்) முன்வைக்கப்பட்டுள்ளதை அவதானிக்கலாம்.

விசேட குறிக்கோள்களினால் முன்வைக்கப்படும் இலக்கினை அடைவதற்கான தீர்வுகளைக் கொண்ட செயலொழுங்கே செயல் திட்டமாகும். செயல்திட்டமென்பது

1. விசேட குறிக்கோள்கள் (Special Objective)
2. உள்ளீடுகள் (Inputs)
3. செயற்பாடுகள் (Activities)
4. வெளியீடுகள் (Outputs)

ஆகிய விடயங்களின் சேர்க்கை வாயிலாகப் பிரச்சினைக்கு தீர்வுகாண மேற்கொள்ளும் ஒரு தொகுதியாகும் என விளக்கப்படுகின்றது. (Dr.M.Markado)

விசேட குறிக்கோள்களை ஆக்கும் போது பின்வரும் விடயங்கள் அதில் உள்ளடக்கப்பட்டிருப்பதை உறுதிப்படுத்திக்கொள்ளுதல் வேண்டும்: அதனை ஆங்கில சொற்களின் முதலெழுத்துக்களால் SMART எனக் குறிப்பிடப்படுகின்றது. உதாரணமாக பிள்ளைகளை இனங்கண்டு எண்ணக்கரு விருத்தியினை மேம்படுத்தல் என்னும் விசேட குறிக்கோளை விசேட செயல் திட்டமாக தயாரித்துக்கொள்கையில்,


1. S - Specific குறிப்பாக

எந்த தரம் (வகுப்பு), எத்தனை பிள்ளைகள், எவ்வாறு தெரிந்து கொள்வது போன்ற சுய வினாக்கள் மூலம் இலக்கை குறிப்பானதாக்கிக்கொள்ளமுடியும். அத்துடன் எத்தனை வீதத்தால் அதிகரித்தல், எத்தனை வகுப்புக்களை வாரத்தில் நடாத்துதல், செயற்பாடுகளை எப்படி நடாத்துவது என்வற்றை கருத்தில் கொள்ளுதல் வேண்டும்.

2. M - Measurable அளவிடக்கூடியதாக இருத்தல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



குறித்த மாணவரின் ஆரம்ப அறிவு, வாராந்த அல்லது மாதாந்த வளர்ச்சி, குறித்த கால இடைவெளிகளில் பிள்ளையின் அடைவு இறுதி விளைவு போன்றவற்றை தரமிடக்கூடியதான அளவீட்டு முறை காணப்படுதல் வேண்டும்.

3. A- Applicable/ Attainable கையாளக்கூடியதாக

செயல்திட்ட செயற்பாடுகளை எவ்வாறு மேற்கொள்வது என்பது (தனித்தனியாக, சிறுசிறு குழுக்களாக அல்லது முழு வகுப்புநிலையில்) பற்றிய தெளிவான வேலைப்பகிர்வு அவசியம்

4. R - Relevent தொடர்புடையதாக, மாணவர்களுக்கும் குறித்த பாடத்திற்கும் அல்லது மாணவரின் கல்விச் செய்பாடுகளுக்கும் (பாடசாலைக்கலைத்திட்டம்) தொடர்புடையதாகக் காணப்படல் வேண்டும்

5. T - Time உரிய கால அளவுடையதாக செயல் திட்டமானது குறித்த கால எல்லையுடையதாகக் காணப்படல் வேண்டும். இடையிடையே அடைவு பற்றி மதிப்பீடு செய்தல், சரிபார்த்தல், விளைவினை மதிப்பீடு செய்தல், மீளாய்வு செய்தல் போன்ற செயற்பாடுகள் செற்றிட்டத்தினை வினைத்திறனுள்ளதாக மாற்றியமைக்கும்.

**3. செயல்திட்டம் மூலமான கற்றல் கற்பித்தலால் உள்ள நன்மைகள்:**

- செயல்திட்டம் அர்த்தமுள்ளதாக மாணவர்கள் கருதுவதால் மாணவர்கள் இயல்பாகவே ஊக்குவிக்கப்படுவார்கள்
- எல்லாமாணவர்களும் செயலுறுநிலையில் பங்கு பற்றுவர்
- செயல்திட்டத்திற்கும் விளைவுகளுக்கும் உரிமையானவர்களாக மாணவர் கருதப்படுவர்.
- கற்றல் அனுபவங்களை தாமே உணர்ந்து கட்டுமானம் செய்வதால் கற்றல் செயற்பாடுகளில் மகிழ்வடைவார்கள்
- அணியாக (Team) செயற்பட ஊக்குவிக்கப்படுவார்கள்
- மீநிலைக் கற்றலுக்கும் சிந்தனைக்கும் உள்வாங்கப்பட்டு மேம்படுவர்
- இலக்கைநோக்கிய கற்றலுக்காக திசைமுகப்படுத்தப்படுவர்
- மாணவர் வெற்றியிலும் தோல்வியிலும் கற்றுக் கொள்ளுவர்
- மாணவர் அடைவு உயர்வடையும்

கற்றல் செயன்முறை என்பது பெரும்பாலும் வகுப்பறையில் அல்லது பாடசாலைக்குள் அல்லது வெளியில் கற்போனின் ஆர்வமிக்க பங்குபற்றுதலோடு ஆசிரியரின் உதவியுடனோ அல்லது உதவியின்றியோ கற்பவன் முன்னர் பெற்றிராத அறிவு, திறன், மனப்பாங்கு அல்லது பெறுமானம் (ஒன்றோ, பலவோ அல்லது எல்லாமோ) ஏற்படுத்திக்கொள்வதற்கு உதவும் அனுபவம் தொடர்பான செயன்முறையாகும். இங்கு அடிப்படையாக அமைவது கல்வி கற்பவனது ஈடுபாடும் பங்குபற்றுதலுமாகும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



த.மோகனப்பிரியா

# கற்பித்தல் - கற்றல் முறையியல்கள்



கல்வி எனப்படுவது இயற்கையாக எழும் வளர்ச்சி ஆகும். இது மனித வாழ்க்கைக்கும் தொழிலுக்கும் ஆயத்தக் கருவியாக உள்ளது. மாணவர்களின் திறன்களையும் ஆற்றல்களையும் இசைந்து வளர்ச்சி பெறச் செய்வதும் கல்வியே ஆகும். இன்றைய அறிவு மைய, தகவல் மைய நவீன உலகில் கல்வியே இன்றியமையாதது. இக்கல்வி எனும் இலக்கை அடையவே கற்றலும் கற்பித்தலும் உதவுகிறது.

இவை இரண்டும் நாணயத்தியன் இரு பக்கங்களாம் கற்றலை மேம்படுத்தவும் வினைத்திறனாக்கவும் கற்றல் கற்பித்தல் முறையியல்களும் நுட்பங்களும் உதவுகின்றன. கற்றல் என்பது புதிய அறிவு, திறன்கள் அல்லது பெறுமானங்களைப் பெற்றுக் கொள்ளும் செயன்முறையாகும். இது அறிவைப் பெற்று அனுபவத்தின் விளைவாக நடத்தையில் ஏற்படும் மாற்றமாகும்.

கற்பித்தல் என்பது நன்கறிந்த மனித நடத்தை பற்றிய கோட்பாடுகளைக் கற்றல் மூலம் தனிப்பட்ட திருப்தியை உயர்மட்டத்தில் அடைந்து கொள்வதை மேம்படுத்தும் முயற்சியில் பிரயோகித்தலாகும். கற்பிக்கப்படும் விடயத்தை மாணவர் இலகுவில் புரிந்து கொள்ள ஆசிரியர் கையாளும் முறையாகும். முன் போதனைச் செயற்பாடுகள் உள்ளாக்கத்தை முன்வைத்தல், கற்பவர் பங்கேற்பு, கணிப்பீடு தொடர் செயற்பாடு என்ற தொடராக இச்செயன்முறை இடம் பெறுகிறது. கற்றல் கற்பித்தலானது அறிகைசார், நடத்தைசார், கட்டுவாக்கம் சார் மாதிரிகளாக இடம்பெறுகின்றது.

கற்றல் கற்பித்தல் முறையியல்கள் ஆசிரியர்களின் கற்றல் சூழலை உருவாக்கவும், மாணவர்களுக்கு ஆர்வத்தை ஏற்படுத்தி அவர்கள் ஈடுபடும் செயற்பாடுகளில் இயல்புகளை வரையறை செய்யவும், கற்பித்தல் உபாயங்கள், முறைகள், தொடர்பான தீர்மானங்களை ஆசிரியர்கள் மேற்கொள்ளவும் பயன்படுத்தப்படுகின்றன. குறிப்பிட்ட முறைகள் சில உபாயங்களோடு இணைந்து காணப்படுகின்றன. இவற்றின் நோக்கம் திறன்களை விருத்தி செய்வதாகும்.

இக்கற்றல் கற்பித்தல் முறைகள் நேரடிப் போதனை. நேரில் போதனை, இடைத்தாக்கத்துடன் கூடிய போதனை, சுதந்திரமான கற்கை, அனுபவம்சார் கற்றல் போன்ற மாதிரிகை வகைகளையும் உடையன. ஆசிரியர் சார்ந்ததுடன் உயர்மட்டத்தில் நேரடிப் போதனை உபாயக் கற்பித்தல் - கற்றல் நுட்ப முறைகளுள் போதனைமுறை, விரிவுரை முறை, Powerpoint பயன்படுத்திய முறை - விரிவுரை முறை, வலுவூட்டல் விரிவுரையும் செய்துகாட்டலும், செய்து காட்டல் முறை, பங்கேற்று பழக்குதலும் பயிற்சியும், வெளிப்படையான கற்றல், அமைப்பாக்கப்பட்ட முழுமையான நோக்கு என்பன அடங்கும். இம்முறைகள் தகவல்களை வழங்குவதற்கும் படிப்படியாகத் திறன்களை விருத்தி செய்வதற்கும், ஊக்கமுடன் ஈடுபடும் மாணவர்களுக்கும் பெரிதும் பயனளிக்கும்.

நேரில் போதனை உபாய நுட்பமுறைகளுள் 5E மற்றும் 7E கற்பித்தல் கற்றல் முறைகள், பிரச்சினையை அடிப்படையாகக் கொண்ட கற்றல், விசாரணையை அடிப்படையாகக் கொண்ட கற்றல், உளப்படமாக்கல்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்ணக்கரு படமாக்கல், விடய ஆய்வுகள், பிரதி பலிப்புக் கலந்துரையாடல்கள் போன்றனவும் பயன்படுத்தப்படுகின்றன. இவை மாணவர் மையமானவை இம்முறைகளானவை விரிவுரையாளர் நெறிப்படுத்துவர் என்ற நிலையில் இருந்து வசதி செய்பவர், உதவுபவர் மற்றும் வளவாளர் என்ற வகிபங்கிற்கு மாற்றத் தூண்டுகின்றது. இங்கு அவதானித்தல், தேடுதல், தரவுகளிலிருந்து அனுமானங்களைப் பெறல் போன்றவற்றில் மாணவர் ஈடுபாடு உயர் மட்டத்தில் தேவைப்படுகின்றது. இந்த உபாயத்தில் மாணவர்களுடைய ஆர்வமும் தெரிந்து கொள்ளும் ஆர்வமும் வழிமுறைகள், கருத்துக்கள், மற்றும் பிரச்சினைகள் தீர்த்தல் என்பன மேற்கொள்ளும் வகையில் ஊக்குவிக்கப்படல் வேண்டும்.

5E முறையானது 1977 இல் Roger by Bee என்பவரால் பயன்படுத்தப்பட்டது. இது கட்டுருவாக்க கற்றல் மாதிரியை அடிப்படையாகக் கொண்டது. ஆயினும் 2003இல் Eishemkratt என்பவர் 5E ஆனது 7E மாதிரிகையாக விரிவாக்கவென கோரி, 5E இன் ஈடுபடுத்தல் கட்டத்தினை வெளிப்படுத்தல், ஈடுபடுத்தல் எனவும் 5E இன் விரிவாக்குதல், மதிப்பிடுதல் எனும் இரு கட்டங்களை தேடுதல், மதிப்பிடுதல், எனும் இரு கட்டங்களை தேடுதல், மதிப்பிடுதல், பெரிதாக்குதல் என 7E ஆக விரிவுபடுத்தியுள்ளார்.

5E முறையானது ஆசிரியரும் மாணவரும், பொதுவான செயற்பாடுகளில் அனுபவம், பொருளைக் கட்டுருவாக்கல், எண்ணக்கருவைத் தொடர்ந்து விளங்கிக் கொள்ளல் போன்ற விடயங்களில் ஈடுபட உதவுகின்றது. இம்முறையை சகல வயதிலுள்ள மாணவர்களுக்கும் முதியோர்களும் பயன்படுத்தலாம். அனுபவம் சார் கற்றல் கற்பித்தல் முறைகளுள் களப் பயணங்கள், விபரணங்கள், விடய ஆய்வு, பிரதிமை செய்தல், பாவனை செய்தல், பரிசோதனை நடத்துதல், ஒன்றுபடுத்தல், விளையாட்டுக்கள், கதைகூறல், வெளிக்கள அவதானங்கள், இலக்கிய வட்டங்கள், என்பன அடங்குகின்றன. அனுபவம் சார் கற்றலானது தொகுத்தறிதல், கற்பவர் மையம் மற்றும் செயற்பாடு சார்ந்தது. இது தனியாள் மயப்படுத்தப்பட்ட பிரதிபலிப்புச் சார் அனுபவம் பற்றியதாக இருப்பதுடன் ஏனைய சந்தர்ப்பங்களிலும் கற்றலைப் பிரயோகிப்பதற்குரிய திட்டங்களை உருவாக்குதல் என்பன அனுபவம் சார் கற்றலின் முக்கியத்துவம் சார்ந்த காரணிகளாகும்.

அனுபவம் சார் கற்றல் வகுப்பறை உள்ளேயும் வெளியேயும் இடம்பெறும். இதன் மூலம் கற்பவர்கள் செயற்பாட்டில் பங்கேற்றல், செயற்பாட்டினை விமர்சன ரீதியாகத் திரும்பவும் பார்ப்பதன் மூலம் உணர்வுகளில் தெளிவு பெறல், பயனுள்ள அகக்காட்சி பெறுதல் போன்ற சந்தர்ப்பங்களில் தொடர்பு பெறுவதாக Pfeiffer Anjones (1999) குறிப்பிடுகிறார்.

கற்றல் கற்பித்தல் முறைகளுள் சுதந்திரமான கற்கை உபாயங்களுக்கான நுட்பங்களுள் சித்திர வடிவ ஒழுங்காக்கி, கணினி உதவியுடனான போதனை அல்லது CAI, சஞ்சிகைகளும் சம்பவப் பதிவேடுகளைக் கற்றலும், செயலடைவுக் கோவை, K.W.L கற்றல், ஆராய்ச்சிச் செயற்திட்டங்கள், சாரங் கட்டல், வழிகாட்டப்பட்ட வாசிப்பு என்பன உள்ளடங்குகின்றன.

சுதந்திரமான கற்றலை விருத்தி செய்வற்காக இம் முறையியல்களை விருத்தி செய்கின்ற போது இவை பற்றிய தவறான விளக்கங்களையும் துஷ்பிரயோகங்களையும் தவிர்த்து வழிகாட்டல்களை வழங்கக்கூடியவராக ஆசிரியர் விளங்க வேண்டும். இது பரந்தரளவிலான முறைகளையும் கருவிகளையும் உள்ளடக்குவதுடன் தனிப்பட்ட மாணவரின் முயற்சிகள், தற்சார்பு மற்றும் சுய முன்னேற்றம் என்பவற்றை விருத்தி செய்வதற்கு உதவுகின்றது. இது சுயகற்றலை விருத்தி செய்யும் நோக்கிலும் வடிவமைக்கப்பட்டுள்ளது. இடைத் தாக்கத்துடன் கூடிய போதனை உபாயங்களுக்கான நுட்பங்களுள் பாத்திரம் ஏற்று நடித்தல், விவாதங்களும், குழுக்கலந்துரையாடலும், ஜிக்கோ (Jigsaw) வகுப்பறை, சிந்தனைத் தூண்டல், கூட்டாகக் கற்றல், சிந்தித்தல் - சோடியாதல் - பகிர்தல், அமைப்பாக்கப்பட்ட வாக்கு வாதம், போலி விளக்கம், சகபாடிப் பங்குதாரர் கற்றல், சுறுசுறுப்பான குழு என்பன அடங்குகின்றன.

இடைத்தாக்கத்துடன் கூடிய போதனை உபாயமானது பல வித குழு உருவாக்கத்திற்கும் இடைத்தாக்க முறைகளுக்கும் சந்தர்ப்பம் வழங்குகின்றது. தலைப்பினை வரையறை செய்தல், கலந்துரையாடலுக்கான நேரம், குழுக்களின் கூட்டும் பருமனும், அறிக்கைப்படுத்துதல் அல்லது பகிர்தல் நுட்பங்கள் ஆகியவை முக்கியமானவை இப்போதனையில் ஆசிரியர்களும் மாணவர்களும் அவதானம், செவிமடுத்தல், ஆளிடைத் திறன்கள், தலையீட்டுத் திறன்கள், மற்றும் ஆற்றல்கள் ஆகியவற்றை புடமிட வேண்டிய தேவையுள்ளது. இது பெருமளவு கலந்துரையாடல் மற்றும் கற்போரிடையே பகிர்தல் என்பவற்றில் தங்கியுள்ளது. மாணவர் சகபாடியிடமிருந்து தம் ஆற்றல்களையும் சமூகத் திறன்களையும் விருத்தி செய்து தமது சிந்தனைகளை ஒழுங்குபடுத்தலாம். மற்றும் பகுத்தறிவு சார்ந்த விவாதங்களை விருத்தி செய்யலாம்.

கற்றல் கற்பித்தல் வெற்றிபெறுவதற்கு பல்வேறுபட்ட முறைமைகளையும் போதனை நுட்பமுறைகளையும் பயன்படுத்துவதுடன் விளக்குதல், செய்து காட்டுதல் மற்றும் வினாக் கேட்டல் போன்ற அத்தியாவசியத் திறன்களையும் ஆசிரியர்கள் விருத்தி செய்ய வேண்டும்.

கற்பித்தல் தொடர்பான தீர்மானம் மேற்கொள்வதற்கு கலைத்திட்டம், மாணவரின் முன் அனுபவங்களும் அறிவும், கற்பவர்களின் ஆர்வம், மாணவரின் கற்றல் பாங்கு மற்றும் அவர்களது விருத்தி நிலை என்பவற்றை கவனத்திற் கொள்வதுடன் கணிப்பீடு மற்றும் கற்றல் விளைவுகளுடனும் செயன்முறைகளுடனும் இணைத்தல சிறப்பானதாகும். மற்றும் கிடைக்கும் வளங்கள், சூழல் என்பவற்றுக்கமையவும் முறையியல்களை கலையாகக் கருதி மனித நடத்தைக் கோட்பாடுகளை பிரயோகித்து தனியாள் விருத்தியை கற்றல் மூலமாக மேம்படுத்த வேண்டும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பள்ளிக்கூடம் என்னும் அதிகாரமையம்

ந.முருகேசபாண்டியன்



சின்னப் பிள்ளைகள் குறும்பு செய்யும்போது, பூச்சாண்டி கிட்டே பிடிச்சுக் கொடுத்துடுவேன் என மிரட்டுற குரலை கிராமங்களில் அடிக்கடி கேட்கலாம். யார் அந்தப் பூச்சாண்டி? ஆள் எப்படி இருக்கும்? என்று யோசிப்பதைவிட அருபமாக மனத்தில் தோன்றும் பயம்தான் குழந்தையைப் பாடாய்ப் படுத்தும். அப்படி இன்னொரு பெயர்தான் பள்ளிக்கூடம் . ஐந்து வயது வரை வீட்டில் விளையாடிக் கொண்டிருக்கும் பிள்ளைகளின் குறும்புகள் எல்லை மீறும்போது, பார் உன்னைப் பள்ளிக்கூடத்தில் கொண்டுபோய் விட்டால் அப்பத் தெரியும் என்ற குரலைக் கேட்டவுடன் பள்ளிக்கூடம் என்றால் பூதம் மாதிரி விநோதமான வஸ்துவாக மனதுக்குள் உருவெடுத்துவிடும்.

வெயில் காலம் முடிந்தவுடன் கிராமத்திலுள்ள ஊராட்சி ஒன்றியத் தொடக்கப்பள்ளிகளின் முன்னால் பிள்ளைகளுடன் பெற்றோர்கள் கூடியிருப்பார்கள். கண்களில் ஒருவிதமான மிரட்சியுடன் மௌனத்தில் உறைந்திருக்கும் குழந்தைகள். தலைமை ஆசிரியர் ஒவ்வொரு குழந்தையையும் அழைத்துக் குழந்தையின் வலது கையினால் தலையின் உச்சி வழியாக இடது காதினைத் தொடச் சொல்லுவார். அப்படித் தொடும் குழந்தைக்கு ஐந்து வயதாகிவிட்டது என்று அர்த்தம். பெரும்பாலான தலைமை ஆசிரியர்களின் தலைக்குப் பின்னர் சுவரில் நேரு, காந்தி படங்கள் தொங்கும் மேசையில் உலக உருண்டை இருக்கும். குழந்தைகளுக்கு உலக உருண்டையைத் தொட்டுப்பார்க்க ஆசையாக இருக்கும். ஆனால் அருகிலிருக்கும் மூங்கில் பிரம்பு எல்லாவற்றையும் அடக்கிவிடும்.

பள்ளிக்கூடங்கள் தென்னங்கீற்றுகள் வேய்ந்த கொட்டகைகளில் நடைபெற்றன. சில வகுப்புகள் நிரந்தரமாகப் பள்ளிவளாகத்தினுள் உள்ள அரச மரத்தடியில் நடைபெறும். நான் மூன்றாம் வகுப்பினை முழுக்க மரத்தடியில் படித்தேன். வகுப்பு நடக்கும் போது அங்குமிங்கும் வேடிக்கை பார்க்கும் சௌகரியமிருந்தது. மழைக்காலம் முழுக்க ஒரே கொண்டாட்டம்தான், நிரந்தரமான விடுமுறைதான். மாலையில் மூன்று மணியின்போது வானம் கருங்கும்மென்று மேகமாக இருந்தால் ஓவர் பெல் அடிக்கும். எல்லோரும் ஓவென்று கத்திக்கொண்டு உற்சாகமாக ஓடியது இப்பொழுது நினைத்தாலும் சந்தோஷமாக இருக்கிறது.

நான் படித்த பள்ளிக் கூடத்திலிருந்து ஒரே கெட்டிக் கட்டடம் முன்பு ராணிமங்கம்மாள் காலத்தில் வழிப் போக்கர்களுக்கான சத்திரமாக இருந்தது. மாட்டு வண்டியில் பயணிக்கும் வெளியூர்க்காரர்கள் பள்ளிக்கூட வளாகத்திலிருந்த புளிய மரத்தடியில் தங்கிச் சோறு பொங்கிச் சாப்பிடுவார்கள். எங்கே படிக்கிறே என்ற கேள்விக்குச் சத்திரத்தில் படிக்கிறோம் என்று மாணவர்கள் பதில் சொல்லுவார்கள். அருள் புரிவாய் கருணைக் கடலே ஆருயிர் அனைத்தும் அமர வாழ்வு பெற அருள் புரிவாய் கருணைக் கடலே பரிபூரண



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சதாநந்தவாணியே என்ற பாடலுடன் தொடங்கும் காலை பிரேயரில் வாலை சுருட்டிக்கொண்டு மாணவர்கள் அமைதியாக இருப்பார்கள்.

எல்லா ஆசிரியர்களும் கையில் பிரம்புடன்தானிருப்பார்கள். மாணவர்களின் பிஞ்சுமனம் குறித்து அக்கறையற்று வன்முறையைப் பிரயோகிப்பதில் நம் கல்விமுறை முக்கிய இடம் வகிக்கிறது. களிமண்ணைப் பிசைந்து பொம்மை செய்வதுபோல, குழந்தைகளை உருவாக்கிட நினைக்கும் வாத்தியார்களின் மூடத்தனம் மோசமானது. அடி, உதை, கொட்டு, கிள்ளுதல், மண்டியிட வைத்தல் என வகுப்பறை சித்திரவதைக் கூடமாவது சரியல்ல. எனவேதான் பட்டாம்பூச்சிகளும் பொன்வண்டுகளும் தண்ணீர்ப் பாம்புகளும் எங்களுக்குக் கவர்ச்சிகரமாக விளங்கின.

நான் பள்ளிக்கூட மாணவனாக இருந்தபோது காலையில் ஆசிரியரின் முதல் வேலை, அன்று வகுப்பிற்கு யார்யார் வரவில்லை என்று பட்டியலிடுவதுதான். ஒரு பையனைப் பிடித்து வர இருவர் ஏவப்படுவார்கள். அந்த ஒரு மணிநேரம் வெளியே சுற்றலாம் என்று குதியாட்டம் போட்டுக் கொண்டு ஓடுவார்கள். எங்களைப் பார்த்தவுடன் ஓடி ஒளியும் வகுப்பறைத் தோழர்களை விரட்டிப் பிடித்துப் பள்ளிக்கு இழுத்து வருவோம். சில மாணவர்கள் கடித்து வைத்துவிடுவார்கள், சிலர் நகத்தில் பிறாண்டி வைப்பார்கள். ஆனால் பிடிக்கப் போன மாணவர்கள் வீரதீர சாகச மனநிலையில் இருப்பார்கள். ஏதோ புலியைப் பிடித்துக் கட்டித் தூக்கிவருவது போன்ற மனநிலையிலிருப்போம்.

வீட்டில் குறும்புகள் செய்யும் சிறுவர்களைப் பள்ளிக்கு இழுத்துவரும் பெற்றோர், இவன் கண்ணைத் தவிர அடிச்சுத் தோலை உரியுங்க என்று தலைமை ஆசிரியரிடம் அனுமதி வழங்குவார்கள். சிறுவனின் உடல் நடுங்கும். பள்ளிக்கு ஒழுங்காக வராமல் டிமிக்கி கொடுக்கும் மாணவர்களுக்குக் காலில் கட்டை மாட்டிவிடும் பழக்கம் அப்பொழுது இருந்தது. ஒரு அடி நீளமும் அரை அடி அகலமும் அரை அடி கனமுமுள்ள மரக்கட்டையின் நடுவில் இரும்புக் கொக்கி பொருத்தப்பட்டிருக்கும். அக்கொக்கியிலிருந்து மூன்றடி நீளமுள்ள இரும்புச் சங்கிலியின் மறுமுனை மாணவனின் காலில் மாட்டப்பட்டுப் பூட்டுப் பூட்டப்படும். பூட்டின் சாவி தலைமை ஆசிரியர் வசமிருக்கும். காலுடன் இணைக்கப்பட்டுள்ள சங்கிலியைத் தூக்கிக்கொண்டு மாணவர் நடந்து வருவது அடிமைப்பெண் படத்தில் எம்.ஜி.ஆர். நடப்பது போலிருக்கும். குளிக்கும்போது, பம்பரம் விடும்போது, உறங்கும்போது எனக் கட்டையுடன் அலையும் மாணவர்களைப் பார்க்கப் பாவமாக இருக்கும்.

முதல் வகுப்பு மாணவர்கள் கையிலுள்ள மஞ்சள் துணிப்பையில் கல்சிலேட், அ,ஆ...வன்னா அட்டை, தமிழ்ப்பாட நூல் இருக்கும். ஹோம் ஒர்க் எல்லாம் சிலேட்டில்தான் எழுதுவோம். ஐந்தாம் வகுப்பு வரை வாய்பாடு சொல்லுவதுதான் பெரிய சோதனை. 1/8, 1/4, 1/2 வாய்பாடுகளைச் சத்தம் போட்டுச் சொல்ல வேண்டும். தினமும் மதியம் கடைசி பீரியட் விளையாட்டுத்தான். மூன்றாம் வகுப்பில் A,B,C,D... அறிமுகம். முழு ஆண்டுத் தேர்வில் கல்லைக் காட்டி இது என்ன என்ற கேள்விக்கு ஸ்டோன் என்று பதில் சொன்னேன். ஆங்கிலப் பாடத்தில் தேர்வானேன்.

பள்ளிக்கூடத்துக்குப் பெரும்பாலான மாணவர்கள் மதிய உணவுக்காகத்தான் வந்தனர். அம்மாவும் அப்பாவும் வயல் வேலைக்குப் போனபிறகு, மதியம் வீட்டில் குடிக்கக் கூழ் இருக்காது. மதியம் உணவு சாப்பிடும் மாணவர்கள் தட்டுகள் கொண்டு வரவேண்டும். அமெரிக்காவிலிருந்து வந்த மக்காச் சோள ரவை உப்புமா, கோதுமை ரவா உப்புமா கிண்டிப் போடுவார்கள். சில நாட்களில் பால் பவுடரைக் கரைத்துக் காய்ச்சிய பாலைக் குடிப்பதற்காக ஈய டம்ளர்களில் கொடுப்பார்கள்.


பள்ளிக்கூடம் என்பது படிப்பது என்பதற்காக மட்டுமிருந்ததாக எனக்கு நினைவில்லை. வகுப்பறையிலுள்ள கரும்பலகைக்குக் கரி தடவுவதுகூட மாணவர்களின் வேலைதான். நான்கைந்து மாணவர்கள் மதியம் சாப்பிட்டவுடன் பள்ளியை விட்டுக் கிளம்புவோம். ஊமத்தைச் செடியின் இலைகளைப் பறித்து பள்ளிக்குக் கொண்டுவந்து, கிணற்றடியில் வைத்துக் கரியுடன் சேர்த்துக் கல்லினால் தட்டிச் சாந்தாக்குவோம். பின்னர் அச்சாந்தினைக் கரும்பலகையில் தடவுவோம். டிராயர், சட்டை எல்லாம் கரி படிந்துவிடும். வீட்டுக்குப் போனால் திட்டுக் கிடைக்கும். மறுநாள் பள்ளிக்கூடம் போனால் கரும்பலகை கன்னங்கருப்பாக மின்னும்.

பள்ளிக்கூடத்தில் பெரிய பரபரப்பான விஷயம் ஸ்கூல் இன்ஸ்பெக்டர் வரும் நாள்தான். நான்கைந்து நாட்களாகவே பள்ளிக்கூடம் பரபரக்கும். புல்லைவெட்டி, தரையைச் சுத்தப்படுத்தி எங்கும் பளபளபபாக இருக்கும். வகுப்பறைச் சுவரில் திடீரெனப் படங்கள் தொங்கும். இன்ஸ்பெ ன் அன்று யாராச்சும் லீவு போட்டால் கண்ணைத் தோண்டிவிடுவதாக ஆசிரியர் மிரட்டுவார். மாணவர்களுக்கு எல்லாம் வேடிக்கையாக இருந்தாலும் ஏதோ நடக்கப் போகிற மனநிலையில் பயந்து போய் இருப்பார்கள். பூச்சாண்டிக்கும் ஸ்கூல் இன்ஸ்பெக்டருக்கும் பெரிய வித்தியாசம் தெரியாது. வகுப்பறைக்குள் இன்ஸ்பெக்டர் நுழையுறப்ப வணக்கம் ஸார் எனக் கோரஸாகக் கத்துவோம். அவர் கொத்தாக ஆசிரியர் நாற்காலியில் அமர்ந்து ஏதாவது கேள்வி கேட்பார். வகுப்பாசிரியர் கலவரமான முகத்துடன் பதறிப்போய் இருப்பதைப் பார்க்கப் பாவமாக இருக்கும்.

பள்ளிக்கூட வராண்டாவில் தொங்கும் பெரிய தண்டவாளத் துண்டில் பெரிய கம்பியினால் அடித்து மணியடிப்பது பெரும்பாலான பள்ளிகளில் வழக்கிலிருந்தது. எங்கள் பள்ளியில் அம்மா முத்துப்பிள்ளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



என்ற அடிப்படை அலுவலர் மணி அடிப்பார். அவர் இல்லாதபோது ஐந்தாம் வகுப்பு மாணவர்கள் மணியடிப்பார்கள். சின்ன வகுப்பு மாணவர்களுக்கு மணியடிப்பது என்பது எதிர்காலக் கனவு. நான் நான்காம் வகுப்புப் படிக்கும்பொழுது, என்னைக் கூப்பிட்டு தலைமை ஆசிரியர் மணியடிக்கச் சொன்னார். என்னுடைய கையிலிருந்த கம்பியிலிருந்து எழும்பிய ஒலி காற்றில் பரவிட, என் மனம் உற்சாகத்தில் கொப்பளித்தது. அன்று என் வகுப்பறைத் தோழர்களிடம் நான்தான் மணியடித்தேன் என்று பெருமை பீற்றினேன். அவர்கள் கண்களில் பொறாமை பொங்கியது.

வகுப்பறைகளில் ஆசிரியருக்கு அடுத்தபடியாக அதிகாரம் மிக்க ஆள் கிளாஸ் லீடர் தான். பக்கத்து வகுப்பறையிலிருக்கும் டீச்சருடன் ஆசிரியர் அரட்டை அடிக்கப் போயிருப்பார். எல்லா மாணவர்களும் கையைக் கட்டி வலதுகை ஆள்காட்டி விரலால் உதட்டின் குறுக்காக விரலை வைத்து அமைதியாக இருப்போம். எவ்வளவு நேரம் தான் ஆடாமல் அசையாமல் இருப்பது? யாராவது ஒரு வாலுப் பையன் மெல்ல அடுத்தவனின் இடுப்பில், இடது கை விரலால் நிமிண்ட, கூச்சம் தாளாமல் நெளிய அப்புறம் ஒரே தமாஷ்தான். லீடர் ஆசிரியரிடம் மேற்படி விஷயத்தைப் போட்டுக் கொடுத்துவிடுவான். இரு மாணவர்களும் ஒருவர் காதை இன்னொருவர் கையினால் பிடித்துக்கொண்டு, உன்னாலே நான் கெட்டேன், என்னால் நீ கெட்டாய் என்று சொல்லியவாறு உக்கி போடுவார்கள்.

ஆசிரியர்களின் சித்ரவதை தாங்காமல் பள்ளிக்கு வராமல் இருந்துவிட்ட என் நண்பர்களை ஏக்கத்துடன் பார்ப்பேன். சில மாணவர்கள் திடீரெனப் பள்ளியை விட்டு நின்றுவிடுவார்கள். அத்தகைய மாணவரைத் தற்செயலாகத் தெருவில் பார்த்துக் கேட்டால், எங்கம்மாவுக்குப் பிள்ளை பிறந்திருக்கு. அதனால் சின்னப்பிள்ளையாக இருக்கிற தங்கச்சியைத் தூக்கி வைச்சிருப்பதற்காகப் பள்ளிக்கூடம் போக வேண்டாம் என்று சாதாரணமாகச் சொல்லுவார்கள். பெரிய கண்டத்தில் இருந்து தப்பியது போன்ற நிம்மதியுடன் சொல்லுவது எனக்குப் பொறாமையைத் தரும்.

பெரும்பாலான ஆசிரியர்கள் மதியச் சாப்பாட்டுக்குப் பிறகு மர நாற்காலியில் உட்கார்ந்தவாறு தூங்குவார்கள். மாணவர்கள் குசுகுசு வெனப் பேசிக் கொண்டிருப்பார்கள். சத்தம் அதிகமானவுடன் தூக்கம் கெட்டு விழிக்கும் ஆசிரியர், பிரம்பை எடுத்துக் கண்ணில் தென்படும் மாணவர்கள் மீது விளாசுவார். ஆடு மாடுகளைக்கூட அப்படி அடிக்க மாட்டார்கள் என்று நினைத்துக் கொள்வேன். நான் ஐந்தாம் வகுப்பு படிக்கும் பொழுது தினமும் மாணவர்கள் ஒரு வரிசையாகவும் மாணவிகள் ஒரு வரிசையாகவும் எதிரெதிராக நிறுத்தப்படுவார்கள். யாராவது ஒரு மாணவன் முன்னே வந்து, அவனுக்குப் பிடிக்காத அல்லது மக்கு என்று கருதும் மாணவியிடம் எட்டேழா என்று வாய்பாட்டில் ஒரு வரியைக் கேட்பான். பதில் சொல்லாத மாணவியின் தலையில் குட்டு வைக்க வேண்டும். இதில் மாணவியினால் குட்டுப்பெற்ற மாணவர்கள் அதை மிகக் கேவலமாகக் கருதுவார்கள்.

வகுப்புக்கு ஓரிரு மாணவர்கள் கதை சொல்லுவதில் கில்லாடியாக இருப்பார்கள். ஓய்வு நேரத்தில் அவர்களைச் சுற்றிக் கூட்டமிருக்கும். மதுரையில் போய்ப் பார்த்த புதிய திரைப்படக் கதையை மணிக்கணக்கில் ஒவ்வொரு காட்சியாக விவரிக்கும்போது, பிறர் ஆவென வாயைத் திறந்து கொண்டு கதை கேட்பார்கள். காமெடிக் காட்சிகளைக் கேட்டு கொண்டாட்டமாகச் சிரிப்பார்கள். காட்சி ஊடகமான திரைப்படம் கேட்பு ஊடகமாக மாற்றம் பெறுவது வேடிக்கைதான்.

திரைப்படத்திற்குப் போவது என்பது அந்தக் காலகட்டத்தில் பஞ்சமா பாதகங்களில் ஒன்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சினிமா பார்த்தால் கெட்டுப் போய்விடுவார்கள் என்ற பொதுப் புத்தி நிலவியது. என்றாலும் குடும்பத்தோடு சினிமா பார்க்கும் வழக்கம் வலுப்பெற்று வந்தது. திரையரங்கிற்குப் படம் பார்க்கப் போயிருக்கும்போது, இடைவேளையில் யாராவது ஆசிரியர்கள் வந்திருக்கின்றனரா? என்று நாற்காலிப் பக்கம் பார்ப்பேன். யாராவது வந்திருந்தால் போச்சு. தலையைக் குனிந்து கொள்வேன். அப்படியும் என்னைப் பார்த்துவிடுவார் ஆசிரியர். மறுநாள் பயந்து கொண்டே பள்ளிக்குப் போவேன். ஏதாச்சும் கேள்விகேட்டுப் பதில் சொல்ல முடியாத எனக்கு சினிமா ஒரு கேடா என்று கேட்டு அடிவிழும். இன்னும் சில ஆசிரியர்கள் தெருவில் நுழைந்தாலே, விளையாடிக் கொண்டிருக்கும் சிறுவர்கள் சிட்டாகப் பறந்துவிடுவார்கள். ஓரிருவர் படிக்கிற நேரத்தில என்னடா விளையாட்டு ? என்று திட்டுவார்கள்.

அறுபதுகளில் பள்ளிக் கூடங்களில் பெரும் பாடச்சுமை இல்லை என்பது முக்கியமான விஷயம். தினசரி படிக்க வேண்டிய அவசியம் இல்லை. எப்பவாச்சும் வீட்டுப் பாடம் எழுதும் வேலை. மாதத் தேர்வு கிடையாது. ஆனால் அடி உதைதான் நல்ல மாணவனை உருவாக்கும் என்ற நம்பிக்கைதான் கல்விமுறையில் பெரும் கோளாறு. அன்றைய சமுதாயத்தில் ஆசிரியர் என்றால் நாலு விஷயங்களைச் கற்றவர், நல்ல மனிதர், அப்பாவி, அவரை நம்பி வீட்டை வாடகைக்குக் கொடுக்கலாம் என்ற பொதுப்புத்தி நிலவியது. மிகக் குறைந்த அளவில் பாடங்களைப் படித்த மாணவர்களில் பெரும்பாலோர் தமிழைப் பிழையறப் பேசவும் எழுதவும் அறிந்திருந்தனர் என்பது நிதர்சனமான உண்மை. ற, ர வேறுபாடு ழ, ள, ல வேறுபாடு குறித்து மாணவர்கள் குழம்பவில்லை. இன்று தமிழில் முதுகலை பயிலும் மாணவருக்குக்கூட எழுத்துப் பிழை ஏற்படுவது நமது கல்வி முறையின் கேவலமன்றி வேறு என்ன?

மாணவ மாணவியருக்குப் பட்டப் பெயர் சூட்டி அழைப்பது அன்று பொது வழக்காக இருந்தது. ஆசிரியர்கள் மாணவர்களைப் பட்டப்பெயர் சொல்லி அழைப்பார்கள். மாணவர்களும் ஆசிரியர்களுக்கு பட்டப்பெயர் வைத்து ரகசியமாகப் பரிமாறிக் கொள்வார்கள்.

மாணவர்களின் ஆடைகள் தொளதொளவென்று இருக்கும். வளருகின்ற பிள்ளை என்று லூஸாகச் சட்டை, டிராயர் தைத்து மாட்டிவிடுவார்கள். இடுப்பில் பட்டன் போடமுடியாமல், இருமுனைகளையும் ஒன்றாக்கி முடிச்சுப்போட்டுக் கொள்ளுவார்கள். டவாலி பொருத்தப்பட்ட டிராயரை மாணவர்கள் அணிந்திருப்பார்கள். அப்பொழுதெல்லாம் சீருடை கிடையாது. சில மாணவர்களின் உடைகள் தையல் பிரிந்திருக்கும். பொதுவாக மாணவ மாணவியர்களுக்கு உள்ளாடை அணியும் வழக்கம் எதுவுமில்லை. மாணவிகள் கவுன் அணிந்திருப்பார்கள் சிலர் சீட்டித் துணியில் பூப்போட்ட பாவாடையும் சட்டையும் உடுத்தியிருப்பார்கள்.

நான் படித்த பள்ளியில் பெரிய ஆலமரமும் அதன் அடியிலுள்ள வட்ட மேடையில் பிள்ளையார் சிலை, நாகர் சிலை இருக்கும். வெள்ளி, செவ்வாய்க் கிழமைகளில் கிராமத்துப் பெண்கள் குடத்தில் தண்ணீர் கொண்டு வந்து, பிள்ளையாரைக் கழுவி விட்டு மாலைசார்த்திக் கும்பிடுவார்கள். மாணவர்கள் முழுப் பரீட்சையன்று முதல் நாளில் பிள்ளையாரை பக்தியுடன் கும்பிடுவார்கள். மற்ற நாட்களில் அரசமரத்தில் ஏற, பிள்ளையார் தோளின்மீது காலை வைத்து ஏற முயல்வார்கள். பிள்ளையார் என்ன நல்லதுதான் செய்வார்? ஆனால் பேய், பிசாசு, முனிகள்தான் பொல்லாதவை. ஆம்பளைப் பேய்கள் அம்மணமாகவும் பொம்பளைப் பேய்கள் வெள்ளைச் சேலை கட்டியுமிருக்கும் என்று பேய் பற்றிய விவரணையில் தொடங்கி, பேயை நேரில் பார்த்த மாணவர்கள் பள்ளிக்கூடத்தில் நிரம்ப இருந்தனர்.

பள்ளிக்கூடத்தில் புரியாத விஷயங்களில் ஒன்று, விழா நடத்தி உரையாற்றுவதுதான். நேருமாமா பிறந்தநாள் குழந்தைகள் நாள், விடுதலை நாள் விழா என யாராவது பேசுவது எங்களுக்குப் பெரிதும் இம்சையாக இருக்கும். சுதந்திர தின நாளில் மாணவர்கள் காகிதக் கொடியைக் குத்திக்கொண்டு, பாரத மாதாகி ஜே என்று கோஷமிட்டு ஊரைச் சுற்றி ஊர்வலமாக வருவோம். மீண்டும் பள்ளிக்கூடம் வந்த மாணவர்களுக்குச் சிறிய சைஸ் ஆரஞ்சு மிட்டாய் இரு துண்டுகள் கிடைக்கும். அந்த மிட்டாய்களிலிருந்து கிளம்பும் வாசனையும் சப்பும்போது, நாக்கில் ஏற்படும் தித்திப்பும் இன்றும் மனத்தினுள் சித்திரமாகப் பதிந்துள்ளன.


பள்ளிக் கூடங்கள் என்று எளிமையாக அறியப்பட்ட கட்டடங்கள் இன்று மறைந்துவிட்டன. எந்தவிதமான அவசரமும் இல்லாமல், மெல்லக் கற்பித்த ஆசிரியர்களும், ஆறஅமரக் கற்ற மாணவர்களும் நினைவுகளாகிப் போய்விட்டனர். ஐந்தாம் வகுப்பு முடிப்பதற்குள் யோகா, கணினி, அபாகஸ், சதுரங்கம், நாட்டியம், பேச்சுப் போட்டி, பாட்டுப் போட்டி என்று சிறுவர்களுக்குச் சிறிதும் சம்பந்தமற்ற விஷயங்கள் திணிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. இன்று சிறுவர்களின் மனப்பதற்றம் அளவுக்கதிகமாகி விட்டது. பிரமாண்டமான கட்டடங்களில் எல்.கே.ஜி. சேருவதற்குக்கூட முப்பதாயிரம் தரக் காத்திருப்புடனும் நேர்காணலுக்காகவும் தயாராக இருக்கும் சூழலின் வெக்கையுடன் ஒப்பிடும்போது, அறுபதுகளில் பள்ளிக் கூடங்கள் ஒருவகையில் நேசமாக இருந்தன என்றுதான் சொல்லவேண்டும். படி, படி, படி என்ற நெருக்கடி எதுவுமில்லாமல், ஓடிப்பிடித்து விளையாண்டு, மல்லுக்கட்டிய மாணவர்கள், எப்பொழுதாவது படித்தார்கள் என்பதுதான் உண்மை. அன்றும் இன்றும் எனக்குப் புரியாத ஒரு விஷயம்: மாணவர்களுக்குக் கொண்டாட்ட ஸ்தலமாக விளங்க வேண்டிய பள்ளிக்கூடம் ஏன் அவர்களுக்கு அந்நியமாகிப் போய்விட்டது?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெடுந்தீவு மகேஸ்

# "தேத்தண்ணியைக் குடிக்காமலே!"



சர்மா வாத்தியார் பென்சன் எடுத்திட்டார் என்றார்கள் ஆனால், அவர் பென்சனில் போய்விட்டார் என்றுதான் கதைக்கிறார்கள். அவரோ இன்னமும் பென்சன் எடுப்பதற்கான முயற்சியில் இருக்கிறார் என்பதுதான் உண்மை.

ஏனென்றால் அவருக்கு இன்னமும் பென்சன் கிடைக்கவில்லை. அவருடைய சுயவிபரக் கோவையில் ஏதோ ஒன்று குறைவாக இருப்பதாகச் சொல்லிக் கொண்டார்கள்.

இன்றைக்கு அவர் அந்த விடயமாகத்தான் நகரத்திற்கு வந்திருக்கிறார். அந்தப் பெரிய கந்தோர் வாசலிலே நேரத்தோடு வந்து நிற்கிறார்.

அவருடைய கிராமத்திலிருந்து வந்து இந்த நகரத்திலிருக்கும் கந்தோரிலே வேலைகளை முடிக்க வேண்டுமானால், முதல் நாளே வந்து நகரத்திலிருக்கும் உறவினர் ஒருவரின் வீட்டிலே தங்க வேண்டும்.

நேற்று வந்த சர்மா வாத்தியார், தூரத்து உறவினரான சங்கர் ஐயரின் வீட்டில் கடந்த இரவில் தங்கி நின்றார். காலையில் அவசர அவசரமாக எழுந்து நேரத்தோட போனால் எல்லா வேலைகளையும் முடித்துக் கொண்டு இன்றே வீட்டுக்குப் திரும்பி விடலாம் என்பது அவரது எண்ணம்

சர்மா என்றாலே அவரொரு சைவக்காரன் என்பதை நான் சொல்லியா நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டும்

காலையில் புறப்பட்டவேளை சங்கர் ஐயரின் சம்சாரம் "தேத்தண்ணியைக் குடிச்சிட்டுப் போங்கோ" என்று சொன்னபோது ஐயரின் குசினியில், தேநீர் தயாரிப்பதற்காகப் பானையில் ஊற்றிய நீர் கொதித்துக் கொண்டே அடுப்பில் இருந்தது

ஆனால் நேரத்தோடு போனால் வேலைகள் எல்லாவற்றையும் கச்சிதமாக முடித்துக் கொண்டு விரைவிலேயே திரும்பி விடலாம் என்ற எண்ணத்தில் தேநீர் தயாரிக்கத் துடித்த சங்கர் ஐயரின் சம்சாரத்தின் அன்பழைப்பையும் மறுத்து "போயிட்டு வந்து குடிக்கிறன் இப்ப நேரம் போச்சு" என்று சொல்லிக் கொண்டு வீதியில் இறங்கிய சர்மா வாத்தியாரை, விரைந்து வந்த அந்தத் தனியார் வாகனம் இழுத்து ஏற்றிக் கொண்டு வந்து இந்தக் கந்தோர் வாசலில் துப்பி விட்டது.

அவரும் கசங்கிப் போய் இப்பொழுது கந்தோர் வாசலில் நிற்கிறார்.

கந்தோர் திறந்திருக்கிறது.

மேசைகளில் கோவைகள் கிடக்கின்றன.

அவற்றில் வீழ்ந்த தூசியை அங்கே நின்ற சிற்றூழியர் ஒருவர் தட்டித் துடைத்துத் துப்பரவு செய்கிறார்.

கந்தோரை ஒரு முறை நோட்டமிட்ட சர்மாவுக்குத் தான் வந்த நேரத்தில்தான் ஒரு சந்தேகம்.

ஆனால் "ஐயாமார் வர நேரம் செல்லும்" என்று சொல்லித் தன்னை ஏறிட்டுப் பார்த்த சிற்றூழியரின் வார்த்தையில் துலங்கிய உண்மையை விளங்கிக் கொண்டு அமைதியானார்.

அருகிலிருந்த வாங்கில் அமரும்படி ஊழியர் காட்டிய சைகைக்குள்ளே தன்னை அடக்கிக் கொண்டார்.

என்றாலும் "தேத்தண்ணியைக் குடிச்சிட்டு வந்திருக்கலாம்" என்ற எண்ணம் சர்மாவைச் சிறிது வருத்தியது.

நேரம் ஆமை வேகத்தில் போய்க் கொண்டிருப்பதாகத் தோன்றியது.

இப்பொழுது, ஓர் ஐயா கையில் ஒரு பையுடன் வந்த வேகத்திலே சர்மாவைத் திரும்பிப் பார்த்தார்.

அவரொரு அலுவலராகத்தான் இருக்க வேண்டும்.

சர்மா எழுந்து நின்றார்.

அவரது நடை உடை பாவனைகள் அனைத்துமே அவரொரு பெரிய அதிகாரி என்பதாய்க் கோலமிட்டன. எழுந்து நின்ற சர்மாவை அவரது அலட்சியப் போக்கு ஏதேதோ செய்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீண்டும் அந்த வாங்கினில் உட்கார்ந்து விட்டார்

இவ்வாறே, அந்தக் குறுகிய நேரத்திற்குள் பலரும் வந்து அந்தக் கந்தோர் மேசைகள் அனைத்தின் பின்னேயும் அதிகாரிகள் தாமே என்பதாய்க் காட்டிக் கொண்டு அமர்ந்து விட்டார்கள்.

சர்மா வாத்தியார் வந்த நேரமும் அவர் உட்கார்ந்து தவிக்கும் காலமும் தெரிந்த அந்தச் சிற்றூழியர் அவரருகே வந்து "என்ன அலுவலா வந்தனீங்கள்?" என்றபோது தனது பென்சன் விடயமாகத் தன்னுடன் கொண்டு வந்திருந்த கோவையை அவனுக்குப் புரட்டிக் காட்டினார்

பென்சன் விடயம் என்றதும் தெளிவு பெற்ற ஊழியர் "நாகராசா சேர் இன்னும் கொஞ்ச நேரத்தில வந்திடுவார் வாங்கிலயே இருங்கோ" என்று சொல்லிக் கொண்டே வேறேதோ எண்ணம் தோன்ற அங்கிருந்து விரைவாக நடந்தான்.

சர்மாவுக்குச் சிறிது தாகம் ஏற்பட்டது. ஆனால் "தேத்தண்ணியைக் குடிச்சிட்டு வந்திருக்கலாம்" என்ற எண்ணம் மேலெழுந்தது

அவர் வழமையாகத் தனது சிறிய பைக்குள் வைத்திருக்கும் தண்ணீர்ப் போத்தலிலிருந்து நாக்கைச் சிறிது நனைத்துக் கொண்டார்.

அப்பொழுது, "நாகராசா சேர் வந்திட்டார் அங்க இருக்கிறார்" என்று சொல்லி வந்த சிற்றூழியர் காட்டிய திசைக்குத் திரும்பிப் பார்த்த சர்மாவின் பார்வையில் ஒரு மலர்ச்சி.

தான் தன்னோடு கொண்டு வந்திருந்த தனது விவரக் கோவையோடு விரைவாகவே அவரை அணுகினார்

அவரது விரைவுக்கு ஏற்ப இயங்காத நாக்ராசா ஐயாவின் உவப்பற்ற பார்வை சர்மாவின் உள்ளத்தை உறுத்தியது

"என்ன" என்ற அதட்டல் கேள்வியுடன் சர்மாவை ஏறிட்டுப் பார்த்தவர் "எங்கே இருந்து வாறிங்க?" என்றார் சிறிது அலட்சியமாக.

அதற்கு வாத்தியார் பதில் சொல்லும் முன்னதாகவே அவரின் கையிலிருந்த கோவையை வாங்கிப் புரட்டியவர் "இவ்வளவு நாளும் எங்க போயிருந்தனீங்க?" என்றார்

கற்றல் கற்பித்தல் என்ற நிலையில் வலுவுடையதான கல்வியின் ஆணிவேராகக் கடமையாற்றி ஒய்வு பெற்றிருக்கும் சர்மா வாத்தியாரிடத்தில் நாகராசா ஐயாவின் கேள்விகள் ஏன் கேட்கப்படுகின்றன என்பதில் பல ஐயப்பாடுகள் இருந்தன.

அவரது கடமையும் அதன் சிறப்பால் உயர்ந்த மாணவரும் அவருக்களித்த பெருமையைச் சீரழிக்கும் வார்த்தைகளாக அவை தொனித்தன.

சர்மா அவர்களின் சேவையையும் அதற்கான வேதனத்தையும் கணக்கிட்டு வழங்கும் பணியிலுள்ள அலுவலர்கள், தமது கடமைகளை உரிய நேரத்தில் சரியாகச் செய்யத் தவறியதால், தாம் செய்யும் எல்லாத் தவறுகளுக்கும் எம்மையே காரணமாகக் காட்டி இவர்கள் தப்பித்து விடுகிறார்கள். இந்தச் செயல் குறித்த எண்ணம் அவரின் மனத்தை வருந்தியது.

சர்மா அவர்களின் கோவையைத் தனது மேசையில் கிடந்த ஏனைய கோவைகளுக்கு மேலே போட்ட அலுவலர் "கோவையைப் பார்த்த பின்னர் கூப்பிடுறேன்" என்று சர்மா வாத்தியாரை மீண்டும் அந்த வாங்கிற்கே உட்கார அனுப்பி வைத்தார்

வாங்கினில் வந்து உட்கார்ந்த சர்மாவுக்கு

உடம்போடு உள்ளமும் கனத்தது. காலையில் ஐயரின் சம்சாரம் "தேத்தண்ணயைக் குடிச்சிட்டுப் போங்கோ" என வேண்டிக் கொண்டதை மறுத்துரைத்து வந்த செயல் வேதனையைத் தந்தது.

"தேத்தண்ணியைக் குடிச்சிட்டு வந்திருக்கலாம்"

நாகராசாவின் பக்கமாகவே பார்வை சுழல வாங்கிலே உட்கார்ந்திருந்த சர்மா சில பொழுது தூக்கத்தில் தொய்ந்து நிமிர்ந்தார்.

அவரது பார்வை மொய்த்திருந்த கோவையோ அவரைப் போலவே தூங்கியது.

நாகராசாவைக் காணவில்லை.

நேரம் பகல் உணவுக்காக நகர்ந்து கொண்டிருந்தது.

நாகராசா சாப்பிடப் போய் விட்டார்.

சர்மாவுக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை.

தாகத்தோடு பசியும் சேர்ந்து கொண்டு நர்த்தனமாடியது.

"தேத்தண்ணியைக் குடிச்சிட்டு வந்திருக்கலாம்" மனம் அழுதது.

நேரமோ ஊர்ந்தது.

எவ்வாறோ நாகராசா மேசைக்கு வந்து விட்டார். சாப்பிட்டு விட்டார் போலும், சர்மாவின் கோவையைப் பலமுறை புரட்டினார். சர்மாவின் சோம்பல் கலைந்து விட்டது. இம்முறை எல்லாமே வெற்றியாக முடியும் எனச் சில பொழுது மகிழ்ந்து போனார்.

ஆனால் "தேத்தண்ணியைக் குடிச்சிட்டு வந்திருக்கலாம்" என்ற எண்ணம் அவரது மகிழ்ச்சியைக் குலைத்தது.

இப்பொழுது கந்தோர் மாலைப் பொழுதிலே தனது வழமைக்குள் கலகலத்தது. நேரம் மாலை மணி நான்கை நெருங்கி விட்டது.

நாகராசா, சர்மா வாத்தியாரை அவசரமாக அழைத்தார் சுழலும் பம்பரமாகிக் கோவையை விரித்தார் "என்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னையா முதன் நியமனக் கடிதத்தைக் காணவில்லை அத்தோடு நீங்கள் வேலையைப் பாரமேற்ற கடிதத்தையும் காணவில்லை அதெல்லாம் இல்லாம எப்படி ஐயா பென்சன் செய்யிறது?" என்றார் சற்றுக் கோபமாக" அதெல்லாத்தையும் நாளைக்குக் கொண்டு வந்தால்தான் பென்சனை வழங்க சிபார்சு செய்யலாம்" என்றார் வீரமாக

சர்மாவின் சேவைக்கு இறுதியில் கிடைத்த இந்த ஏமாற்றத்தால் கசக்கிப் பிழியும் வேதனையோடு கந்தோரை விட்டு வெளியே வந்தார்.

எண்ணத்தில் சிதறும் உறுத்தல்களால் "தேத்தண்ணியைக் குடிச்சிட்டே வந்திருக்கலாம்" என்று உரத்துக் கத்தியவர் விரைவாகவே ஊருக்குத் திரும்பும் எண்ணத்தோடு சங்கர் ஐயரின் வீட்டுக்கு வந்தார். காலையிலே தேத்தண்ணியைக் குடிக்காமல் போனதினால் அவர் எதிர்பார்த்த நேரக் குறைப்பு அவருக்கு ஏமாற்றத்தைத் தந்தது.

சங்கர் ஐயர் வீட்டாரிடம் தனக்கு நேர்ந்த கதி சொல்லிக் கவலைப்பட்டவர் இப்பொழுது அந்தப் படகுத் துறையில் ஊருக்குப் போகக் காத்திருக்கிறார்.

கடமையில் தோய்ந்து தம்மை அர்ப்பணித்துப் பணி ஆற்றும் எத்தனையோ அரச பணியாளர்கள் மத்தியில் நிலவும் அலட்சியப் போக்கும் காலத்தை வீணடிக்கும் கருத்தற்ற செயல்களில் ஈடுபட்டு நேரத்தை ஓட்டும் ஒரு சிலர் இருக்கத்தான் செய்கிறார்கள்.

இந்த அரச நிறுவனங்களின் பொறுப்பற்ற ஒழுங்கற்ற செயற்பாடுகளை யாரிடம் சொல்லி அழுவதென்று தெரியாமல் அங்கலாய்த்தார்.

எங்கெங்கெல்லாமோ இந்தப் பொறுப்பற்ற ஊழியர்கள் தமது தவறுகளை உணராமல் செற்பட்டாலும் கல்வியின் மேன்மைக்கு உதாரணமாக இயங்கும் கல்வித் திணைக்களத்திலே இத்தகையோர் இருக்கலாமா?

கந்தோருக்கு வரும்போது பாரமின்றித் தோன்றிய சர்மா அவர்களின் சுயவிபரக் கோவை இப்பொழுது பாறாங்கல்லாய்க் கனத்தது. செய்வதெல்லாம் தவறென்று தெரிந்து கொண்டே தொடர்ந்தும் தவறு செய்யும் அதிகாரிகளை என்னென்பதோ மனம் அழுதது.

---

38ம் பக்க தொடர்ச்சி....

நாடகக்கல்வி...

ஒரு மாநிலத்திற்குச் சென்று அந்த மாநிலத்தின் மரபு சார்ந்து ஒரு நாடகத்தைத் தயாரிக்க வேண்டும்.

மூன்றாமாண்டு ஷேக்ஸ்பியர் போன்ற உலகப் புகழ் பெற்ற மேதைகளின் நாடகங்களைப் பேர்லினர் என் சம்பிள், ராயல் ஷேக்ஸ்பியர் கம்பெனி போன்ற புகழ் பெற்ற நாடகப் பள்ளிகளிலிருந்து வருகைப் பேராசிரியர்களாக இங்கு வரும் இயக்குநர்கள் இரண்டு மாதங்கள் வரை தங்கி மாணவர்களுடன் இணைந்து நாடகத் தயாரிப்பை மேற்கொள்வர்.

சமகால நாடகம் பற்றிய புரிதலை மாணவர்களுக்கு ஏற்படுத்தும் ஆண்டு இது. முதலாண்டிலிருந்து மூன்றாமாண்டுவரை சீரான விதத்தில் கற்பிக்கப்படும் கல்வி மாணவர்களுக்கு நாடகம் குறித்த புரிதலை அதன் முழுமையான அர்த்தத்தில் உருவாக்கும் விதத்தில் வடிவமைக்கப்பட்டிருக்கிறது. விரிவுரைகள், கருத்தரங்குகள், பயிலரங்குகள், நாடகத் தயாரிப்புகள், நாடக விழாக்கள், கலைசார் அனுபவங்கள் மாணவனின் ஆளுமையைச் செப்பனிட்டு வளர்த்தெடுக்க உதவுகின்றன. நிரந்தரப் பேராசிரியர்கள் தவிரத் தேவை கேற்பத் துறைசார் வல்லுநர்கள் வருகைப் பேராசிரியர்களாக இருக்கின்றனர். மூன்றாண்டுகளில் ஒரு மாணவன் ஐம்பதிற்கும் மேற்பட்ட வல்லுநர்களிடம் பாடம் கேட்டுக் கலந்தாலோசிக்கும் வாய்ப்பு கிடைக்கிறது.

15க்கும் அதிகமான முழுநீள நாடகத் தயாரிப்புகள், மாணவர்களின் தனி நிகழ்வுகள், நெறியாக்க மாணவர்களின் பட்டயத் தயாரிப்புகளெனக் குறைந்தபட்சம் 30 நாடகங்களில் பங்கேற்கும் அனுபவம் மாணவர்களுக்குக் கிடைக்கிறது. மூன்றாண்டுகளில் பல்வேறு நாடக விழாக்களில் 150இலிருந்து 200 வரையிலான நாடகங்கள் பார்க்கக் கிடைக்கின்றன. நாடகக்கலையைக் கற்றுக்கொள்வதற்கும் அதில் பங்கு பெறுவதற்கும் மொழி ஒரு தடையாக இருப்பதில்லை என்பது முக்கியமான விஷயம்.

பெரும்பாலான நாடகப் பள்ளிகள் கல்வி உதவித்தொகை அளிக்கின்றன. தேசிய நாடகப் பள்ளி மாதம் 3,000 ரூபாய்வரை வழங்குகிறது. அங்கு ஒவ்வொரு ஆண்டும் 20 இடங்கள் நிரப்பப்படுகின்றன. இந்தியா முழுவதிலிருந்தும் 10 ஆண்கள், 10 பெண்கள் வீதம் 20 பேர் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். மிகச் சிறந்த நாடகக் கல்வி மூன்றாண்டுப் பட்டயப்படிப்பாக வழங்கப்படுகிறது. இந்தியாவில் கல்வியியலில் மாற்றுச் சிந்தனைகள் உருவாகிவரும் காலகட்டத்தில் இளைஞர்கள் நாடகக் கல்வியை நம்பிக்கையோடு தேர்ந்தொடுக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை



ம.நிரேஸ்குமார்

# குழந்தாய்



"செல்வராகவன்"

"பிரசன்ற் சேர்"

"காயத்திரி"

"பிரசனற் சேர்"

"அகல்யா"

"பிரசன்ற் சேர்"

"கயல்விழி"

மௌனம்.

"கயல்விழி...?"

"அவள் இண்டைக்கும் வரேல சேர்"

கயல்விழி அடிக்கடி பாடசாலைக்கு வராமல் வீட்டில் நிற்பதை எனக்குத் தெரியப்படுத்தும் நோக்கத்துடன் அந்த மாணவி 'இண்டைக்கும்' என்ற சொல்லைக் கொஞ்சம் அழுத்திச் சொன்னாள். கயல்விழி பாடசாலைக்கு ஒழுங்காக வராததை நானும் சில நாட்களாக கவனித்து வருகிறேன்.

நான் முதல் முதலாக டியூட்டி அஸ்யூம் பண்ணிய நாளிலிருந்தே எனக்கு கயல்விழி மீது ஒரு தனிப்பற்று. என்சின்ன வயதிலேயே நான் வாசித்த அகிலனின் 'கயல்விழி' நாவல்தான் அதற்குக் காரணமா? அல்லது என் இளமைக்காலத்து காதலியின் (முதல் காதலி) தோற்றத்தில் அவள் இருந்துதான் அதற்குக் காரணமா? நான் அறியேன்.

எனது பட்டப்பின் கல்வி டிப்ளோமா வகுப்புக்களில் ஆசிரியத்துவத்துவத்திற்கு இலக்கணமாய் விளங்கும் ஆசான்களின் விரிவுரைகளில் கற்கின்ற சந்தர்ப்பம் கிடைத்ததன் விளைவாகவும்,

ஆசிரியர் பணியில் ஈடுபட்டு சில வருடங்கள் கடந்து விட்டதால் ஏற்பட்டுவிட்ட ஆசிரியத்துவப் பண்பின் விளைவாகவும்,

அவளை என்மகளை நோக்குவது போன்றே நோக்கினேன்.

முதல் முதலாக டியூட்டி அஸ்யூம் பண்ணிய நாளை எளிதில் மறந்து விடமுடியாது. அதிலும் ஆசிரியராக கடமையேற்கும் நாள் இருக்கிறதே, அந்த நாளை யாரால்தான் மறந்து விடமுடியும்?

'இவர்தானா இனி எங்களுக்குப் படிப்பிக்கப் போகும் ஆசிரியர்?' என்ற ஆவலுடன் நோக்கும் மாணவர்களின் பார்வையும்,

'புதிதாக ஒருவர் வந்து விட்டார். எமது ஆளணிப் பற்றாக்குறை குறைகிறது. இவர் எமது பாடசாலைக்கும் மாணவர்களுக்கும் மனமுவந்து சேவையாற்றுபவராக இருக்கவேண்டும்' என்ற எதிர்ப்பார்ப்புடன் வரவேற்கும் அதிபரும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'புதிதாக எமக்கொரு நண்பன் கிடைத்து விட்டான். இவனையும் எம்முடன் இணைந்து கடமையாற்ற வைக்க வேண்டும்' என்ற எண்ணத்துடன் நோக்கும் ஆசிரியர்களும்,

'ஆரிது புதுசா வந்திருக்கிறது? பாப்பம் என்ன கிழிக்கப்போகுதெண்டு...' என மனதிற்குள் வாழ்த்தும் சில ஆசிரியர்களும்,

'அப்பாடா கிஸ்றிக்கு ஒருத்தன் புதுசா வந்திட்டான். ரைம் ரேபிள் சுமை குறையும்' என்ற சிந்திக்கின்ற ஆசிரியர்களும்,

'இனி Transfer இற்கு அப்பிளை பண்ணலாம்' என்று கணக்குப் போடும் சிலரும்,

'உவர் டிகிரி முடிச்சாப்போல பெரியாளே? பாப்பம். எங்கட எக்ஸ்பீரியன்ஸிக்கு முன்னால தாக்குப்பிடிக்கிறாரோ எண்டு' என்று தம்மைத்தாமே குறைத்து மதிப்பிடும் ஆசிரியர்களும்,

தாம் நினைத்ததை வெளியில் சொல்லாமல் முகமலர்ச்சியுடன் வரவேற்கும் அந்த நாளை மறந்துவிட முடியுமா என்ன?

"சேர் Graduate Appointment குடுக்கேக்க கனபேரை இஞ்ச போட்டிருக்கிறாங்கள்" அதிபர் என் முகத்தை உற்றுப் பார்க்கின்றார்.

"சொல்லுங்கோ சேர்"

"நீங்கள் History Special செய்து First Class அடிச்சிருக்கிறீர்கள். ஆனா... இப்ப A/Lக்குப் போடேலாது. அதுதான் யோசிக்கிறன்"

அது பரவாயில்லை சேர். எந்த வகுப்பெண்டாலும் நான் செய்யுறன்"

"thank you சேர். இதே மாதிரி சிந்தனையோட தொடர்ந்தும் வேலை செய்யுங்கோ. இப்ப ஏழாம் வகுப்பை பொறுப்பெடுங்கோ"

நான் சற்று அதிர்ச்சியடைந்து பின்னர் சுதாரித்துக் கொண்டேன். அதிபர் அதனைப் புரிந்து கொண்டார். "இப்ப வாசுகிச் ரீச்சர் Maternity லீவில நிக்கிறா. அந்த வகுப்பைப் பாருங்கோ. Next year time table செய்யேக்க உங்களுக்கு A/L தாறன்"

"சரி சேர்"

நான் வகுப்பிற்குச் சென்ற முதல்நாளே கயல்விழியை இனம் கண்டுகொண்டேன். கயல்விழியின் சுறுசுறுப்பும், புதிய விடயங்களை அறிந்து கொள்வதில் உள்ள ஆர்வமும், படிப்பதில் உள்ள அக்கறையும், கற்றல் புறச செயற்பாடுகளில் உள்ள ஈடுபாடும் என்னை மாத்திரமின்றி வேறு சில ஆசிரியர்களையும் அவளின்மீது அக்கறை கொள்ளச் செய்ததில் எந்தவொரு வியப்பும் இல்லை.

சந்தர்ப்பவசமாக நான் அதே வகுப்பிற்கே தொடர்ந்தும் வகுப்பாசிரியராக கடமையாற்ற வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது.

"புதுசா வந்தவருக்கு இப்ப A/L ஐத் தூக்கிக் குடுக்கேலாது"

"நாங்கள் Experience Teachers இருக்கிறம். அவருக்கு எப்பிடி இப்ப A/L குடுக்கிறது?"

"Degree முடிச்சாப்போல பெரியாக்களோ. உடன A/L குடுக்கேலாது. கொஞ்ச நாளக்கு இருக்கட்டும்"

அவரவர் பாட்டுக்கு ஏதேதோ பேசிக் கொண்டார்கள். "சேர் என்ன செய்வம்? நீங்கள் புதுசா வந்தனீங்கள். கொஞ்சம் ஸ்ராஃப்பை அனுசரிச்சுப் போனால் நல்லது"

"நான் ஒரு மறுப்பும் சொல்லேல சேர். எந்த வகுப்பெண்டாலும் செய்யுறன்"

இடைநிலை வகுப்புக்களுக்கு வரலாற்றுப் பாடத்திற்கும், கயல்விழியின் வகுப்பிற்கு வகுப்பாசிரியராகவும் மூன்று வருடங்களாக பொறுப்பாக இருக்கின்றேன்.

இடைநிலை வகுப்புக்களுக்கு கற்பிப்பதென்பது ஒரு வித்தியாசமான அனுபவம் கிடைத்தற்கரிய இன்பம். அதனை சொல்லிலோ எழுத்திலோ வடித்துவிட முடியாது. நேசித்து அனுபவித்தால் மட்டுமே விளங்கும். அந்த அனுபவத்தை இழக்க விரும்பாமலே நான் தொடர்ந்தும் மறுப்புச் சொல்லாமல் அந்தக் ரைம்ரேபிளை ஏற்று வருகிறேன் என்பது யாருக்கும் தெரியாத ரகசியம்.

குழந்தைப் பருவத்தில் பாடசாலைக்கு வந்து,
பிள்ளைப் பருவத்தைக் கடந்து,
கட்டிளமைப் பருவத்தை அணுகும்போது அம் மாணவர்களின் நடத்தைகளில் ஏற்படுகின்ற மாற்றங்கள் எம்மை அதிசயிக்க வைக்கும்.

"மூக்கு வடிவது கூடத்தெரியாமல் அழுது கொண்டிருந்த இவனோ இது?" என்ற எண்ணம் அடிக்கடி தோன்றும்.

விஞ்ஞான ரீதியாக சொல்வதாக இருந்தால் ஓமோன்களின் விளைவால் ஏற்படும் மாற்றங்கள் என்று சொல்லலாம். சாதாரண வார்த்தைகளில் உடல் வளர்ச்சி என்று சொல்லலாம். அல்லது இறைவனின் படைப்பின் விந்தையென்றும் சொல்லலாம். காரணம் எதுவாக இருந்தாலும், அந்தவயதில் அவர்களின் ஒட்டுமொத்த செயற்பாடும் மாறுவதென்னவோ உண்மைதான்.

ஆண் பிள்ளைகளாக இருந்தால் தம்மைத்தாமே பெரியவர்களாகப் பாவனை செய்து, தம்மை மற்றவர்கள் பெரியவர்களாக கருதவேண்டும் என்பதற்காகவே தம்முடைய நடத்தைகளை மாற்றிக்கொள்வர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்பிள்ளைகளாக இருந்தால் அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு எனும் நால்வகைக் குணங்களும் ஒருங்கே கிடைக்கப்பெறும் தன்னை மற்றவர்கள் 'இவள் அழகானவள். நல்ல பழக்கம் வழக்கம் உள்ள பண்பான பிள்ளை' என்று மதிப்பிட வேண்டும் என்ற எதிர்பார்ப்புடன் நடந்து கொள்வர்.

பருவகால மாற்றம் போன்று இப்பருவ வளர்ச்சியும் ரசிக்கத்தக்க ஒன்றுதான். அந்த வாய்ப்பு தொடர்ச்சியாக சீனியர் ரீச்சர்ஸினால் எனக்கு வழங்கப்பட்டுக் கொண்டிருக்கிறது.

ஏழாம், எட்டாம், ஒன்பதாம் தரங்களில் கயல்விழி ஒருநாளேனும் பாடசாலைக்கு வராமல் நிற்பதில்லை. பத்தாம் தரத்திலிருந்து அவளை 'ஏழரைச்சனியன் நன்றாகப் பிடித்து விட்டது' என்று எண்ணுமளவிற்கு அவளின் பாடசாலை வரவு மோசமானதாக இருந்தது.

இதைப்பற்றி ஒருநாள் அவளிடம் விசாரித்தேன். அவளிடமிருந்து எந்தவொரு பிரயோசனமான பதிலையும் பெறமுடியவில்லை.

அவளின் வீட்டிற்குச் சென்று தாய், தகப்பனை விசாரித்து,

அதிபரிடம் முறைப்பாடு செய்து,
தண்டனை வழங்கி,

அவளைப் பாடசாலைக்கு ஒழுங்காக வரச்செய்வதற்காக நான் எடுத்த எந்தவொரு முயற்சியும் பயனளிக்கவில்லை.
'உவருக்கேன் தேவையில்லாத வேலை?"

'எத்தின பிள்ளயள் ஒழுங்காக வராமலல் இருக்குதுகள். அவளில மட்டும் ஏன் உவளவு அக்கறை?"
'உவற்ற போக்குவாக்குகள் அவளவு சரியில்லை. பொம்பிளப் பிள்ளயளெண்டா விழுந்தடிச்சுக் கவனிக்கிறார்'

போன்ற முதுகுக்குப் பின்னால் கதைக்கும் கதைகளும்,

"சேர் கிராமப்புறங்களில் உப்பிடித்தான் சேர். தாய் தகப்பன் பிள்ளயளக் கவனிக்கிறேல. அவங்களுக்குப் பிள்ளப்பெறவே நேரங்காணாது. டசின் கணக்கில் பெத்து வச்சிருக்கிறாங்கள்"

"நீங்கள் கனக்க யோசிக்கிறியள் சேர். என்ன நடந்தாலும் நடக்கட்டுமெண்டு பேசாமல் இருக்கப் பழக வேணும்"

"அதுகளயும் குற சொல்லேலாது சேர். சாப்பாட்டுக்கு வழிகிடந்தாவெல்லோ படிப்பைப் பற்றி யோசிக்கிறதுக்கு. பெடியள் எல்லாம் சனி ஞாயிறு லீவுக்கு எல்லாம் வேலைக்குப் போறாங்கள் சேர்"

இப்படி எனக்கு அறிவுரை சொல்வதாக நினைத்து என்னைக் கட்டிப்போடும் முயற்சியில்தான் பலர் ஈடுபட்டிருந்தார்கள்.

பாடசாலை இல்ல விளையாட்டுப் போட்டிக்கான பயிற்சிகளில் மாணவர்கள் ஈடுபட்டிருந்தபோது கயல்விழி வகுப்பில் மேசையின்மேல் தலைவைத்துப் படுத்திருப்பதைக் கண்டு ஒருநாள் கூப்பிட்டு விசாரித்தேன்.

"காலில கிழுவங்கட்டை குத்தி நடக்கேலாது சேர்" என்று நொண்டி நொண்டி நடந்து காட்டினாள்.

கயல்விழியின் நடத்தைமாற்றம் எனக்குச் சந்தேகத்தை ஏற்படுத்தியது. சயன்ஸ் ரீச்சரிடம் இது தொடர்பாக கலந்தாலோசிக்க முயன்றேன். ஏனோ அவர் அன்றிலிருந்து என் முகத்தில் விழிப்பதைத் தவிர்க்கத் தொடங்கி விட்டார்.

பிறகு ஒருநாள்,
"லேடீஸ் ரீச்சரோட என்ன கதக்கிறதெண்டு தெரியாது. மனேர்ஸ் தெரியாத ஆள்" என்று சயன்ஸ் ரீச்சர் கதைத்ததாகக் கேள்விப்பட்டேன்.

ஆசிரியத்துவத்தின் மகத்துவத்தை உணராமல் ஒவ்வொருவரும் நடப்பதை அவதானித்தபோது கையாலாகதவனாக நின்றேன். சில நாட்களுக்குப் பிறகு கயல்விழி முற்று முழுதாக பாடசாலைக்கு வராமல் நின்று விட்டாள்.
ஒருநாள் காலை நேரம். பிறேயர்ஸ் முடிந்து வந்தபோது

"என்ன சேர்? பேரன் பிறந்திருக்கிறானாம்?"

என்று ஒரு ஆசிரியர் கேட்டபோது, உண்மையில் எனக்கு எதுவுமே விளங்கவில்லை.

"என்ன ரீச்சர் சொல்லுறியள்?"

"உங்கட கிளாஸ் பெட்டைக்கு ஆம்பிளப்பிள்ள பிறந்திருக்குதாம்"

நான் திகைத்துப் போனேன். பூமி பிளந்து அண்டவெளியில் தூக்கி வீசப்பட்டது போன்று தலை சுற்றத் தொடங்கியது. எனது சந்தேகத்தைத் தீர்ப்பதற்காக வகுப்புக்கு விரைந்தேன். வகுப்பில் மாணவர்கள் குசுகுசுவென்று ஏதோ கதைத்துக் கொண்டிருந்தார்கள். என்னைக் கண்டதும் சட்டென்று வகுப்பு அமைதியானது.
ஒரு மாணவி தயங்கித் தயங்கி என்னருகே வந்தாள்.

"சேர்"

நான் 'சொல்லு' என்பதுபோலப் பார்த்தேன்.

"கயல்விழிக்கு ஆம்பிளப்பிள்ள பிறந்திருக்குதாம் சேர்"
"என்னடி சொல்லுறாய்?"

நான் கோபமாகக் கேட்டேன்.

"அதுதான் சேர். கயல்விழிக்கு ஆம்பிளப்பிள்ளை பிறந்திருக்குதாம்"

"உனக்கென்னண்டு தெரியும்?"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"கயல்விழீன்ர வீட்டுக்கு பக்கத்தில இருக்கிற மீனா சொன்னவள்"

-அவள் தனிமையை நாடியபோதும்,

-எப்போதும் சோம்பலாக இருந்தபோதும்,

-பாடசாலைக்கு ஒழுங்காக வராதபோதும்,

-பாடசாலைச் செயற்பாடுகளில் ஆர்வமில்லாமல் இருந்தபோதும்,

அக்கறை எடுக்காத ஆசிரியர்களுக்கும், என்னைப் போல அரைகுறை அக்கறை எடுத்த ஆசிரியர்களுக்கும் இன்று கதைப்பதற்கு சுவாரசியமான சம்பவம் ஒன்று அகப்பட்டுவிட்டது.

'ஒரு ஆசிரியரின் பணி வகுப்பறையில் கற்றல் கற்பித்தலுடன் நிறைவடைந்து விடுவதில்லை. மாணவனின் நலன்களிலும், அவனது நடத்தைகளிலும் அக்கறை கொண்டதாகவும், அவனது செயற்பாடுகளுக்கான பின்னணிக்காரணங்களை அறிந்து அதற்கான பரிகார நடவடிக்கைகளை மேற்கொள்வதாகவும், அவனை அரவணைத்து அன்பு செலுத்தி வழி நடத்தி நாட்டிற்குள் சமுதாயத்திற்கும் ஏற்ற நற்பிரசையாக உருவாக்குவதாகவும், அந்த நோக்கங்களை அடைவதற்காக ஓயாது பாடுபடுவதாகவும் இருக்க வேண்டும். இதுவே தமது தலையாய பணியென்பதை ஒவ்வொரு ஆசிரியரும் உணர்ந்து நடக்க வேண்டும்.' என்ற அர்த்தத்தில் சஞ்சிகையொன்றில் வெளிவந்த "எது வரை நீளும் ஆசிரியர் பணி?" என்ற கட்டுரை ஞாபகத்திற்கு வந்தது.

ஒரு சில நாட்களின் பின்னர் அந்தக் குழந்தை பெற்ற குழந்தையின் தந்தை அவளின் சித்தப்பன் என்றும், அவளது பெற்றோர்கள் வயல் வேலைக்காக சென்றிருந்த மழை நாள் ஒன்றில் தனது காம இச்சையைத் தீர்த்துக் கொள்வதற்காக அந்தச் சிறிய மலரை ஏதேதோ சொல்லி ஏமாற்றி நுகர்ந்தான் என்பதையும் கேள்விப்பட்ட போது நான் ஆசிரியராக இருப்பதில் அர்த்தம் இல்லை என்ற முடிவுக்கு வரவேண்டி இருந்தது.

பின்குறிப்பு:

ஒவ்வொரு பெற்றோர்களும், முக்கியமான கிராமப்புறங்களிலும், தமிழர்களின் தலைவிதியாகவும் / நிரந்தர வதிவிடங்களாகவும் மாறிவிட்ட அகதி முகாம்களிலும் வாழுகின்ற பெற்றோர்கள் தமது கட்டிளமைப் பருவப் பிள்ளைகளின் நடத்தைகளிலும் செயற்பாடுகளிலும் மிகுந்த அவதானத்துடன் இருத்தல் வேண்டும். அவர்களுக்கு தேவையான புத்திமதிகளையும், அறிவுரைகளையும் எல்லா நேரத்திலும் தவறாமல் வழங்கி, அவர்களை நல்லதொரு மனிதனாக, சமுதாயத்திற்கு ஏற்ற ஒரு பிரஜையாக மாற்றுவதற்கான முயற்சிகளில் ஓயாது ஈடுபடவேண்டும்.

ஆசிரியர்கள் கற்பிப்பது மட்டுமே தமது பணியென இருக்காது மாணவர்களுக்கு பல்வேறு வழிகளில் வசதி செய்பவர்களாகவும், வழிநடத்துபவர்களாகவும், ஆலோசர்களாகவும் செயற்பட வேண்டும். இந்தக் கருத்துக்கள் பெற்றோர்களையும், ஆசிரியர்களையும் சென்றடைய வேண்டும் என்ற ஆவலே இக்கதையை எழுதுவதற்கு உந்து சக்தியாக அமைந்தது.

***"சிறுவர்கள் மீதான பாலியல் துஷ்பிரயோகம் தண்டனைக்குரிய குற்றமாகும். மண்ணில் சுதந்திரமாய் வாழுவதற்கான எல்லா வகை உரிமைகளும் சிறுவர்களுக்கும் உண்டு"***

## திறன்சார் அணுகுமுறை

திறன் என்பது அறிகைசார் அல்லது நடத்தைசார் செயற்பாடுகளை விளைதிறனுடன் மேற்கொள்வதற்கு ஒரு தனிமனிதனிடம் இருக்கக்கூடிய ஆற்றல் எனலாம். பண்புக்கூறுகள் போலவே திறன்களும் மரபுரிமைகளாலும் கற்றலினாலும் ஒருங்கே தீர்மானிக்கப்படுகின்றன. ஆனால், பண்புக் கூறுகளின் உருவாக்கத்தில் மரபுக்கூறுகளே கூடிய பங்கினைக் கொண்டுள்ளன. பண்புக் கூறுகள் உள்ளார்ந்தவைகளாகவும் ஒப்பீட்டளவில் ஒருவரது நிரந்தர உளவியல் அமைப்புகளாகவும் உள்ளன. ஆனால் திறன்களை ஒருவர் கற்கமுடிவதோடு காலப்போக்கில் சில திறன்களை நன்கு விருத்தி செய்து கொள்ளவும் முடியும். பண்புக் கூறுகள் அணுகுமுறை தலைமைத்துவத்தில் ஆளுமை சார்ந்த பண்புக்கூறுகளின் முக்கியத்துவத்தை வலியுறுத்துவது போல திறன்சார் அணுகுமுறை அறிவையும் ஆற்றலையும் முக்கியத்துவப்படுத்துகின்றது.

திறன்கள் பொதுவானவைகளாகவும் பரந்துபட்டவைகளாகவும் இருப்பது போலவே குறிப்பான திறன்களும் உள்ளன. நுண்மதி, ஆளிடைத்தொடர்பு, நிர்வாகத்திறன்கள் போன்ற திறன்கள் பரந்தவை. திட்டமிடல்திறன், பேச்சுத்திறன், பேரம்பேசும் திறன் போன்றவை மிகவும் குறிப்பானவை.

(நன்றி: தை.தனராஜ், "தலைமைத்துவக் கோட்பாடுகள்" பக்: 60)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வியியலில் மாற்றுச் சிந்தனைகள்: நாடகக் கல்வி

*சண்முகராஜா*

இந்தியாவில் பள்ளிக்கல்வியில் ஒன்றாம் வகுப்பிலிருந்து பன்னிரெண்டாம் வகுப்புவரை பாடத் திட்டத்திலே வகுப்பறைகளிலே பாடத்திட்டம் சாராத பிற நடவடிக்கைகளிலே கலைகள் முறையாக அறிமுகப்படுத்தப்படுவதில்லை. படைப்புவழிக் கல்வி என்பது இன்றளவிலும் வெறும் பேச்சாகவே இருந்துவருகிறது. வேலைவாய்ப்புக்கான சந்தையைக் குறிவைத்துக் கற்பிக்கப்படும் கல்வி மாணவர்களை வெறுமனே பாடங்களை மனப் பாடம் செய்து ஒப்புவிக்கும் இயந்திரங்களாக மாற்றி அவர்களது இயல்பான திறன்களைச் சிதைத்திருக்கிறது. கற்றல் என்னும் குதூகலமான அனுபவத்திற்குப் பதிலாகத் தேர்வை முன் வைத்து மாணவர்களை உடல், மனரீதியாக ஒடுக்கும் கல்விமுறையே கல்வி நிறுவனங்களின் தேர்வாக உள்ளது.

உலகம் முழுவதுமுள்ள கல்வியாளர்கள் படைப்பு வழிக் கல்வியைத் தற்போதைய இயந்திரத்தனமான கல்விமுறைக்கு மாற்றாகப் பரிந்துரைக்கிறார்கள். படைப்புவழிக் கல்விகளில் ஒன்றான நாடகம் மாணவர்களின் ஆளுமையை வளர்த்தெடுப்பதில் முக்கியப் பங்கு வகிக்கிறது. பள்ளிக்கல்வியில் நாடகத்தைக் கற்பித்தல் கருவியாகப் பயன்படுத்தும்போது மாணவர்களின் தன்னம்பிக்கை, செயல்திறன், மொழி வளம், தொடர்புத்திறன், படைப் பாற்றலுடன் கூடிய விமர்சனச் சிந்தனை ஆகியவை மேம்படுகின்றன.

பள்ளிக்கல்வியில் நாடகம் ஒரு பாடமாக இல்லாத போதும் பட்டப் படிப்பு, பட்ட மேற்படிப்புகளில் நாடகத்தைப் பாடமாகக் கற்பிக்கும் நாடகப் பள்ளிகள், பல்கலைக்கழக நாடகத் துறைகள், கல்லூரிகள் இந்தியா முழுவதும் செயல்பட்டு வருகின்றன. ஓவியம், சிற்பம் போன்ற நுண்கலைகளையும் இசை, நடனம் போன்ற நிகழ்த்துகலைகளையும் தனிப்பட்ட ஆளுமைகளைக் குருவாகக் கொண்டு பயில்வதே நம் மரபாக இருந்துவந்திருக்கிறது. ஆனால் பல்வேறு கலைகளின் இணைவான நாடகம் போன்ற ஒரு கலையைக் கற்பிப்பதற்கு அதற்கென உருவாக்கப்பட்ட நிறுவனங்களே பொருத்தமானவை. ஏனெனில் பல்வேறுபட்ட கலைகளையும் அவை சார்ந்த ஆளுமைகளையும் ஒருங்கிணைப்பதற்கான சாத்தியம் நிறுவனங்களுக்கே உண்டு.

இந்தியாவில் நவீன நாடகம் குறித்த புரிதலுடன் உருவாக்கப்பட்ட நாடகப் பள்ளிகளின் வரலாறு நூறு ஆண்டுகளுக்குட்பட்டது. சுதந்திர இந்தியாவில் முதன் முதலாக வடோதாராவில் (பரோடா) 1950ஆம் வருடம் மஹாராஜா ஷயாஜிராவ் பல்கலைக்கழகத்தில் நாடகம் ஒரு பட்டயப்படிப்பாக ஆரம்பிக்கப்பட்டது. 1956இல் சங்கீத நாடக அகாதெமி நடத்திய தேசிய நாடகக் கருத்தரங்கில் நாடகத்தை முறையாகப் பயிற்றுவிப்பதற்கு முழுமையான நாடகப் பள்ளி ஒன்று உருவாக்க வேண்டுமெனத் தீர்மானித்து அதனடிப் படையில் 1959இல் புதுதில்லியில் தேசிய நாடகப் பள்ளி தொடங்கப்பட்டது. அறிமுகமான உடனேயே நாடகக் கல்வி பயில்வதற்காக ஏற்கனவே தாம் வகித்துவந்த அரசுப் பணிகளைத் துறந்துவிட்டு நாடகப் பள்ளியில் சேர்ந்தவர்கள் உண்டு.

முதல் தலைமுறை மாணவரில் குறிப்பிடத் தகுந்தவர் ஏ. ராமமூர்த்தி 1935இல் பெங்களூரில் பிறந்தவர். 1952 முதல் கர்நாடகாவில் பல்வேறு அமெச்சூர் நாடகக் குழுக்களில் செயல்பட்டுவந்தவர். நாடகத்தை மேலும் நுட்பமாகக் கற்றுக்கொள்ளும் ஆர்வம் மேலிடத் தான் பார்த்து வந்த அரசுப் பணியைத் துறந்து விட்டு 1961இல் தேசிய நாடகப் பள்ளியில் சேர்ந்தார். நடிப்பு, நாடகத் தயாரிப்பு, அரங்க வடிவமைப்பு, ஆடை வடிவமைப்பு, ஒப்பனை, ஒலி, ஒளி, மேடை நிர்வாகம் உள்ளிட்ட நாடகத் தொழில்நுட்பத்தின் பல்வேறு துறைகளையும் கற்றுக் கொண்டார்.

நாடகப் பள்ளியில் பட்டப் படிப்பை முடித்த பின்பு இப்ராஹிம் அல்காசியின் வழிகாட்டுதலில் ஓம்புரி, ஓம் சிவபுரி, மனோஹர்சிங், சுரேகா சிக்ரி ஆகிய முன்னணி நடிகர்களைக் கொண்ட தேசிய நாடகப் பள்ளியின் நாடகக் கம்பெனியின் நிர்வாகியாகப் பணி புரிந்தார். அதற்குப் பிறகு நியூயார்க்கில் மூன்றாண்டுகள் நாடகத் தொழில் நுட்பப் படிப்பைத் தொடர்ந்தார். இந்தியா முழுவதிலும் நவீன நாடகத்தைப் பரவலாக எடுத்துச் சென்று ஐம்பதுக்கும் மேற்பட்ட நாடக அரங்குகளை வடிவமைத்துத் தந்துள்ள ராமமூர்த்தி 17க்கும் மேற்பட்ட நாடகங்களை இயக்கி அவற்றுக்கு இசையமைத்துள்ளார். அல்காசி, பி.வி. காரந்தின் நாடகங்களுக்கு ஒளியமைப்பு உள்ளிட்ட அனைத்துத் தொழில்நுட்பப் பணிகளையும் மேற்கொண்ட ராமமூர்த்தியின் நூலகத்தில் சுமார் 46,000 புத்தகங்கள் உள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்போது கர்நாடகாவில், கன்னட நாடகச் சூழலைச் செழுமைப்படுத்துவதில் பெரும் பங்காற்றிவரும் தேசிய நாடகப் பள்ளி மாணவர்கள் 48 பேர் ராமமூர்த்தி போன்ற முதல் தலைமுறை மாணவர்களின் அர்ப்பணிப்புடன் கூடிய உழைப்பிலிருந்தும் வழிகாட்டுதலிலிருந்தும் உருவானவர்கள். ராமமூர்த்திக்கு இணையான உழைப்பும் ஈடுபாடும் கொண்ட தமிழ் நாட்டைச் சேர்ந்த நாடகக் கலைஞர்களான எஸ். பி. சீனிவாசன், சே. ராமானுஜம் ஆகியோரும் தேசிய நாடகப் பள்ளியின் முதல் தலைமுறை மாணவர்கள். நாடகத்தின் மீது அவர்களுக்கு இருந்த ஈடுபாடும் அர்ப்பணிப்பும் இப்போது நாடகக் கல்வி பெற்று வரும் இளந்தலை முறையினரிடமும் காணப்படுவது மகிழ்ச்சியான செய்தி.

17.4.2010 காலை எட்டு மணிக்குத் தேசிய நாடகப் பள்ளியில் இரண்டாமாண்டு பயிலும் மாணவர் பாரதி என்னைத் தொலைபேசியில் அழைத்தார். தனது Solo Performance க்காக ஷேபா சக்தியின் "ம்" நாவலின் முக்கியப் பகுதிகளை நிகழ்த்தத் திட்டமிட்டிருப்பதாகக் கூறி அது பற்றி ஒரு சில கருத்துகளை என்னிடம் பகிர்ந்துகொண்டார். பாரதி திருப்பாச்சேத்திக்கு அருகிலிருக்கும் சுல்லங்குடி கிராமத்து விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்தவர். அரசு விடுதியில் தங்கித் தனது சுய முயற்சியால் அமெரிக்கன் கல்லூரியில் இளங்கலை இயற்பியல் படித்துக்கொண்டிருந்தார். முதலாமாண்டுக கோடை விடுமுறையில் மதுரை அழகர்கோவில் தேவஸ்தானப் பள்ளியில் நடைபெற்ற நாட்டு நலப் பணித் திட்ட முகாமில் நிகழ்த்தப்பட்ட ஒரு திறந்தவெளி நாடகத்தால் ஈர்க்கப்பட்டு அதன் விளைவாக நாடகத் துறையின் பக்கம் வந்தவர்.

பாண்டிச்சேரி மத்தியப் பல்கலைக்கழக நாடகத் துறையில் முது கலைப் படிப்பில் சேர்ந்து பிறகு அங்கிருந்து தேசிய நாடகப் பள்ளிக்குத் தேர்வு பெற்றவர் பாரதி.

இயற்பியலில் நல்ல மதிப்பெண்கள் பெற்றும் நாடக ஈடுபாடு காரணமாகப் பிற தொழில் துறைப் படிப்புகளைத் தேர்ந்தெடுக்காமல் தேசிய நாடகப் பள்ளியில் சேர்ந்தவர். லௌகீக வாழ்வின் வெற்றி தோல்விகள் பற்றிய எந்தக் கணக்கும் இல்லாத ஒருவருக்கே அப்படி ஒரு முடிவெடுக்க முடியும். பாரதியின் குடும்பத்தினருக்குத் தேசிய நாடகப் பள்ளியைப் பற்றி எதுவுமே தெரியாது. தங்கள் மகன் தனக்கு விருப்பமான ஒரு பாடத்தைப் படிக்க உரிமையுள்ளவன் என பாரதியின் பெற்றோர் நம்பினார்கள். சென்ற மாதம் வங்காள நாடக இயக்குநர் சாந்தனு போஸ் மஹாஸ்வேதா தேவியின் மதர் 1058 நாவலை நாடகமாக்கியபோது பாரதிக்கு போஸிடம் தற்போது தண்டேவாடாவில் நடந்து கொண்டிருப்பவை பற்றிப் பேச முடிந்தது. மாவேயிஸ்டுகளின் செயல்பாடுகள், பழங்குடி மக்களை அழித்தொழிக்கும் அரசின் நடவடிக்கைகள் குறித்த அக்கறையை, கவலையை போஸ் அப்போது பகிர்ந்து கொண்டார். 2003இல் எனக்கு முதலில் அறிமுகமான அமெரிக்கன் கல்லூரி மாணவரான பாரதிக்-கும் இப்போதைய நாடகக்காரரான பாரதிக்கும் நிறைய வேறுபாடுகள். நாடகக் கல்வி அவரைச் செழுமைப்படுத்தியிருக்கிறது. அவரது அறிவுக்கூர்மையும் பார்வைத் தெளிவும் நாடகத்துக்கு அவர் குறிப்பிடத் தகுந்த பங்களிப்பைச் செய்வார் என்ற நம்பிக்கையை ஏற்படுத்துகின்றன. முதல் தலைமுறை மாணவரான ராம மூர்த்தியின் ஈடுபாட்டுக்கு எந்த விதத்திலும் குறைந்ததாக இல்லை இப்போதைய தலை முறையைச் சேர்ந்த தேசிய நாடகப் பள்ளி மாணவர் பாரதியின் ஈடுபாடு. தேசிய நாடகப் பள்ளி போன்று நாடகக் கல்வி-யைக் கற்பிக்கும் வேறு பல முக்கிய நிறுவனங்களும் உள்ளன.

வடோதராவின் எம்.எஸ். பல்கலைக்கழகம், கொல்கத்தாவின் ரவீந்திர பாரதி ஸ்கூல் ஆப் டிராமா, திருச்சூரிலுள்ள காலிகட் ஸ்கூல் ஆப் டிராமா தவிரப் பஞ்சாபின் சண்டிகரிலும் ராஜஸ்தானின் ஜெய்ப்பூரிலும் நாடகப் பள்ளிகள் இருக்கின்றன. பாண்டிச்சேரி, ஹைதராபாத், புனே ஆகிய நகரங்களில் உள்ள மத்தியப் பல்கலைக்கழகங்களில் நாடகத்தைப் பயிற்றுவிப்பதற்கான துறைகள் உள்ளன. இவற்றோடு பி.என்.ஏ, கர்நாடகத்தின் ஹெக்கோடிலுள்ள நீநாஸம், ஸ்ரீராம் கலை மையம் முதலிய கல்வி நிறுவனங்கள் பல வருடங்களாக நாடகத்துக்கான பட்டயப்படிப்புகளை நடத்திவருகின்றன.

நாடகப் பள்ளிகளின் பாடத் திட்டங்களில் பொதுவாக நடிகனை உருவாக்குவதற்கு நடிப்பின் அடிப்படைப் பாடங்கள், குரல், உடல் சார்ந்த பயிற்சிகள், நாடக இலக்கியங்கள், நாடக வரலாறு, வெவ்வேறு காலகட்டங்களில் உருவான உலக நாடக அறிஞர்கள், நாடகக் கோட்பாடுகள் முதலானவை கற்பிக்கப்படுகின்றன. இவை தவிர அரங்கு, உடை, ஒப்பனை, ஒலி, ஒளி, அரங்க நிர்வாகம் குறித்த ஆரம்பப் பாடங்களும் கற்றுத்தரப்படுகின்றன. முதலாண்டில் இவை எல்லாவற்றையும் ஒன்றிணைக்கும் விதத்தில் உலகப் புகழ்பெற்ற நாடகப் பிரதி தெரிவு செய்யப்பட்டு முறையான பயிற்சிகளினடிப்படையில் தயாரிக்கப்பட்டு மேடையேற்றப்படுகிறது. இது மாணவனுக்கு அரங்கம் பற்றிய முழுமையானதொரு புரிதலை உருவாக்குவதோடு நிகழ்த்துதல் சார்ந்த அனுபவ அறிவையும் அளிக்கிறது.

இரண்டாமாண்டில் மரபுசார்ந்த கலைகள் கற்பிக்கப்படுகின்றன. சௌ, களரி போன்ற போர்க் கலைகளுடன், நாட்டார் நாடக வடிவங்கள், சடங்குகள், கிரேக்க, சமஸ்கிருத, பார்ஸி நாடகங்களின் கோட்பாடுகள் கற்பிக்கப்படுகின்றன. பரீட்சார்த்த நாடகங்களுக்கு இரண்டாமாண்டில் முன்னுரிமை வழங்கப்படுகிறது. இரண்டாமாண்டின் இறுதி மாதத்தில் மாணவர்கள் இந்தியாவில் ஏதேனும் ஒரு மாநிலத்திற்குச் சென்று அந்த மாநிலத்தின் மரபு சார்ந்து ஒரு நாடகத்தைத் தயாரிக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகவிழி
3, Torrington avenue, Colombo - 07
Tel : 011-2506272, Fax: 011-2585190
Email:- ahavili2004@yahoo.com,
ahavili2004@gmail.com

## சந்தா விண்ணப்பப் படிவம்

பெயர் (முழுப் பெயர்) : ....................

கற்பிக்கும் பாடசாலை : ....................

பாடசாலை முகவரி : ....................

தொலைபேசி/தொலைநகல் இல. : ....................

மின்அஞ்சல் முகவரி : ....................

கற்பிக்கும் பிரிவு : .................... ஆரம்பம்/இடைநிலை/உயர்தரம்

அகவிழி அனுப்ப வேண்டிய முகவரி : ....................

இத்துடன் ரூபா [ ] க்கான காசோலை/காசுக் கட்டளையை

இல [ ] இணைத்துள்ளேன்.

கையொப்பம் திகதி :

**காசோலை மூலம் பணம் செலுத்துபவர்கள் AHAVILI எனப் பெயரிட்டு அனுப்புக. காசுக் கட்டளையாயின் AHAVILI எனப் பெயரிட்டு HAVELOCK TOWN தபால் நிலையத்தில் மாற்றக் கூடியவாறு மட்டுமே அனுப்பி வைக்கவும்.**

இப்படிவத்தை போட்டோ பிரதி செய்து உபயோகிக்கவும்.

✂ ..........

## சந்தா செலுத்த சில எளிய வழிமுறைகள்

அகவிழி சந்தா செலுத்த விரும்புவோர் மற்றும் அகவிழி வெளியீடுகளை நேரடியாகப் பெறப் பணம் செலுத்த விரும்புவோருக்கான சில எளிய வழிமுறைகள்.

அகவிழி, கொமஷல் வங்கி, வெள்ளவத்தை நடைமுறைக் கணக்கு எண் 1100022581 Commercial வங்கியின் எந்த கிளைகளி-லிருந்தும் அகவிழி கணக்கு எண்ணுக்கு சந்தா அல்லது புத்தக விலையை பணமாக வைப்பு செய்யலாம்.

வங்கி கமிஷன் இல்லை

பிற வங்கியில் கணக்கு வைத்திருப்பவர்கள் VILUTHU - AHAVILI பெயருக்கு காசோலை எழுதி அகவிழி கணக்கு எண்ணைக் குறிப்பிட்டு உள்ளூர் Commercial வங்கியில் வைப்பு செய்யலாம்.

மேற்படி வழிமுறைகளில் பணம் அனுப்புவர்கள் செலுத்தப்பட்ட தொகை, தேதி, இடம், நாள் மற்றும் தேவைகளைக் குறிப்பிட்டு அகவிழி தலைமை அலுவலக முகவரிக்கு கடிதம் எழுதவேண்டுகிறோம். அல்லது மின்னஞ்சல் முகவரியில் தொடர்பு கொள்ளலாம்.

**சந்தா விபரம்**

| | |
|---|---|
| தனி இதழ் | : 50/= |
| ஆண்டு சந்தா (தபால் செலவுடன்) | : 700/= |
| இரு வருடச் சந்தா | : 1200/= |

## அகவிழி விளம்பரக் கட்டணம்

| | |
|---|---|
| பின் அட்டை | : 7000/- |
| உள் அட்டை (முன்) | : 6000/- |
| உள் அட்டை (பின்) | : 5000/- |
| உள் பக்கம் | : 4000/- |
| நடு இருபக்கங்கள் | : 6500/- |

**தொடர்புகட்கு**

**Colombo**
3, Torrington Avenue, Colombo - 07.
Tel: 011-2506272

**Jaffna**
167, Hospital Road, Jaffna.
Tel: 021-2229866

**Trincomalee**
81 A Rajavarodayam Street, Trincomalee
Tel: 026-2224941

**Batticaloa**
37, Old Rest House Road,
Tel: 065-2222097



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அகவிழி

## கிடைக்குமிடங்கள்

முரளி கொமினிகேஷன்
185, டன்பார் வீதி,
ஹற்றன்
தொ.பே.இல: 051-2222041/42/43

குமரன் ரேட் சென்டர்
18, டெய்லிபயர் கொம்பிலக்ஸ்
நுவரெலியா.
தொ.பே.இல: 052-2223416

நியூ கேசவன் புக்ஸ்டோல்,
56, டன்பார் வீதி,
ஹற்றன்.
தொ.பே.இல: 051-2222504
051-2222977

தனலட்சுமி புத்தகக்கடை
29, பிரதான வீதி,
கப்புற்றல
தொ.பே.இல: 057-2268205

கிரிசான் புத்தக நிலையம்
07, தபால்நிலைய வீதி,
மஸ்கெலியா.
தொ.பே.இல: 071-9531554

அகவிழி நிலையம்
81ஏ, இராஜவரோதயம் வீதி
திருகோணமலை.
தொ.பே.இல: 026-2224941

அறிவாலயம் புத்தகக்கடை
190B, புகையிரத வீதி,
வைரவப்புளியங்குளம்,
வவுனியா.
தொ.இல: 024-4920733

ஜானு புத்தக நிலையம்
ஆஸ்பத்திரி வீதி,
களுவாஞ்சிக் குடி.
தொ.பே.இல: 077-6446046

ABI புத்தக நிலையம்
(எலக்ரோனிக் கடை)
பிரதான வீதி, களுவாஞ்சிக்குடி
தொ.பே.இல: 065 22 50 950

நூர் மொகமட் நியுஸ் ஏஜன்ஸ்
132, பிரதான வீதி,
கிண்ணியா 03
தொ.பே.இல: 026-2236266

அகவிழி நிலையம்
37, ஓல்ட் ரெஸ்ற் கவுஸ் றோட்,
மட்டக்களப்பு.
தொ.பே.இல: 065-222-2097

பி. ஜெகதீஸ்வரன்
அமரசிங்கம் வீதி, ஆரயம்பதி
மட்டக்களப்பு .
தொ.பே.இல: 077-1261718
கை.தொ.இல: 077-9028679

அன்பு ஸ்ரோஸ்
14, பிரதான வீதி,
கல்முனை
தொ.பே.இல: 067-2229540

புக் லாப்
172, ராமனாதன் வீதி,
திருநெல்வேலி
யாழ்ப்பாணம்
தொ.பே.இல: 021-2227290
கை.தொ.இல: 0771-285749

கே.எம்.பஸிர்
ஆசிரியர்
புதிய துறைமுக வீதி
நெய்தல் நகர்
மூதூர் - 01
075-2793793

கவிதா புத்தகக் கடை
வவுனியா
தொ.பே.இல: 0572223556

S. ஏகாந்தராஜன்
50/9, நாகல பஜார்,
ஹல்கிறனோயா,
தொ.பே.இல. 072-3715909

ஐடியல் ஸ்ரேசனரி
# 327/8, வடாபொத்த றோட்
(ஹகவத்த T.M.V றோட்) கஹவத்த
தொ.பே.இல: 045 4905715

M.T.M தௌசீர்
127/2, கண்டி வீதி
திகாரிய
தொ.பே.இல: 033-2292736/
0777-411543/071-4493154

பூபாலசிங்கம் புத்தகக் கடை
202, செட்டித் தெரு,
கொழும்பு - 11
தொ.பே.இல: 011-2422321

பூபாலசிங்கம் புத்தகக் கடை
309- A 2/3, காலி வீதி,
வெள்ளவத்தை, கொழும்பு.
தொ.பே.இல: 4515775/2504266

சேமமடு புத்தகக்கடை
UG 50, 52 பீப்பில்ஸ் பார்க்
கொழும்பு 11.
தொ.பே.இல: 011- 2472362

அல்குரசி புத்தக நிலையம்
28,1/2, புகையிரத வீதி
மாத்தளை.
தொ.பே.இல: 066 3662228

அகவிழி நிலையம்
167, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே.இல: 021-2229866

அகவிழி நிலையம்
66, பேராதனை வீதி,
கண்டி.
தொ.பே.இல: 081-2224041
கை.தொ.இல: 077-9148987

A.L. அனீஸ் அலி
302/A, நெசவு நிலைய சந்தி,
பொத்துவில் - 02
தொ.பே.இல. 077-9183597/060-2635567

கலையரசு
அம்பிற்ற கந்த, பூனகல
பண்டாரவளை
தொ.பே.இல. 077-4933651/057567910B

ISSN 1888-1246
9 771888 124003

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org